
நவம்பர்
2008

# ஞானம் 102

கலை இலக்கியச் சஞ்சிகை



கலாபூஷணம்
புலோலியூர்
க. சதாசிவம்
ஞாபகார்த்தச்
சிறுகதைப்போட்டி
2008 முடிவுகள்



ஒரே தலைப்பில் அமைந்த சிறுகதைகளில்
ஈழத்துப் படைப்பாளிகளின் பன்முகத்தன்மை
ஒரு கண்ணோட்டம்
– சின்னராஜா விமலன்

கலாபூஷணம்
பீ. எம். புன்னியாமீன்

விலை: 50/=

www.gnanam.info

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை

ஒளி – 09 சுடர் – 06

**பகிர்தலின் மூலம்
விரிவும்
ஆழமும்
பெறுவது
ஞானம்**

ஆசிரியர் :
**தி. ஞானசேகரன்**

இணை ஆசிரியர் :
**ஞானம் ஞானசேகரன்**

ஓவியர்கள் :
**கௌதமன்**
**மதிபுஷ்பா**

தலைமை அலுவலகம் :
**19/7, பேராதனை வீதி, கண்டி.**

தொடர்புகளுக்கு... :
**தி. ஞானசேகரன்**
**ஞானம் கிளை அலுவலகம்**
**3-B, 46வது ஒழுங்கை,**
**கொழும்பு – 06.**
**தொலைபேசி : 011 –2586013**
**0777–306506**
**தொலைநகல்: 2362862**
**E-mail : editor@gnanam.info**
**Web : www.gnanam.info**

**வெளிநாட்டு, உள்நாட்டு
வங்கித் தொடர்புகள்:
Swift Code :- HBLILKLX
T. Gnanasekaran
Hatton National Bank -
Wellawatte Branch
A/C No. 0090672606**

# இதழினுள்ளே ...


## ● கவிதைகள்

| | |
|---|---|
| உ. நிசார் | 07 |
| செ. சுதர்சன் | 12 |
| மா.பா. மகாலிங்கசிவம் | 17 |
| கருணாகரன் | 21 |
| அனலை. க. சௌந்தரராஜன் | 21 |
| ஜுல்பர் சவுர்தீன் | 22 |

## ● கட்டுரைகள்

| | |
|---|---|
| உடப்பூர் வீரசொக்கன் | 05 |
| வதிரி. சி. ரவீந்திரன் | 18 |
| சின்னராஜா விமலன் | 23 |
| க. சண்முகலிங்கம் | 30 |
| சிற்பி | 35 |

## ● சிறுகதைகள்

| | |
|---|---|
| சுதாராஜ் | 13 |
| தாழை செல்வநாயகம் | 27 |
| ஸ்ரீரஞ்சனி | 33 |

## ● நேர்காணல்

| | |
|---|---|
| எம். ஏ. நுஃமான் | 08 |

## ● சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்

| | |
|---|---|
| குறிஞ்சி நாடன் | 41 |

## ● பத்தி எழுத்து

| | |
|---|---|
| துரைமனோகரன் | 39 |

## ● நூல் மதிப்புரை 44

## ● வாசகர் பேசுகிறார் 47


அட்டைப்படம் – கௌதமன்

ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகட்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல் வேண்டும். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு. – **ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்.

# நடப்பவன் சொன்னால்...!

தம் சொந்த விருப்பங்கள் –கனவுகள் – கற்பனைகள் – இலட்சியங்கள், – எதிர்ப்பார்ப்புகள் முதலியவற்றுடன் தாமாகச் சென்று குடியேறியவர்களும் –

தமது சக்திக்கும் கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்ட தவிர்க்கவோ தடுக்கவோ முடியாத அரசியல், சமூக பொருளாதாரக் காரணங்களால் குடியேற நிர்ப்பந்திக்கப்பட்டவர்களுமாக –

ஆயிரமாயிரம் தமிழ் மக்கள் தம் அன்னை மண்ணைத் துறந்து அன்னிய மண்ணிற் புகுந்து –

அறியாத மொழி பேசுவோர் மத்தியில்

வித்தியாசமான வாழ்க்கை முறையையும் விசித்திர சில போக்குகளையும் வேறுபட்ட பழக்க வழக்கங்களையும் கொண்டுள்ளோர் மத்தியில்–

வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இத்தகைய தமிழ் மக்களை மனத்திற் கொண்டு

“நீங்கள் எந்த நாட்டில் – எத்தகைய சூழ்நிலையில் எத்துணை கஷ்டங்களுடன் வாழ்ந்தாலும்

ஒரு தனி மனிதனாகவோ ஒரு பெருங்கூட்டமாகவோ வாழ்ந்தாலும்

நீங்கள் தமிழர்கள் என்பதை மறவாமல்

உலகின் மிகச் சிறந்த பண்பாட்டின் பொறுப்புமிக்க வாரிசுகள் என்பதை ஒரு கணமும் மறவாமல் –

தமிழராக தமிழ்ப் பண்பாட்டுடன் வாழவேண்டும் – வாழ்ந்துகாட்ட வேண்டும்.

எனச் சொல்வோர் நம்மிடையே பலருளர் !

சொல்லப்படவேண்டிய நல்லுரைதான்

சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆலோசனைதான்

வலியுறுத்தப்படவேண்டிய அறிவுறுத்தல் தான்.

ஆனால்,

அவர்களுக்கு மட்டுந்தான் – அன்னிய நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம்மவர்களுக்கு மட்டுந்தான் – இவை சொல்லப்பட வேண்டுமா?

இங்கு வாழ்கின்ற – தமிழ் மக்களின் பூர்வீகத் தாயகம் என ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்ட இலங்கையிலும் இந்திய தமிழ் நாட்டிலும் வாழ்கின்ற இலட்சோப இலட்சம் தமிழ் பேசும் மக்களுக்கு இவை தேவையில்லையா?

நாலு சுவர்களுக்குள் நடக்க வேண்டிய இல்லற இனிமைகளை –

அசிங்கப்படுத்தி ஆபாசப்படுத்தி கலை என்ற பெயரிற் காட்சிப்படுத்தி மக்களின் கீழான உணர்ச்சிகளைக் கிளர்ந்தெழச் செய்பவர்களும்

ஊழல் புரிந்தாற்றான் உயிர் வாழலாம் என்பதை

இலஞ்சம் வாங்காவிட்டால் நஞ்சையே தஞ்சமடைய வேண்டும் என்பதை –

தம் பாதகச் செயல்களால் ‘பரப்புகை’ செய்பவர்களும்

கொலையையும் கொள்ளையையும் தம் கூட்டு முயற்சியாகக் கொண்டுள்ளவர்களும்

கையாட்கள் மூலம் கயமைத்தனம் புரிந்து கொண்டே கனவான்களாக வேடம் போடுபவர்களும்

பணம் கிடைக்குமென்றால் எந்த விதமான பலாத்காரத்தையும் எத்தகைய பழிச் செயல்களையும் செய்வதற்குத் தயங்காதவர்கள் மட்டுமல்லாமல் முனைப்புடன் முந்துபவர்களும்,

இந்த நாடுகளிலேதான் தமிழர்களின் சொந்த நாடுகளிலேதான் இருக்கின்றார்கள்.

சிலராக அல்ல – பலராக பற்பலராக இருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்குத்தான் இந்த நல்லுரைகள் - ஆலோசனைகள் - அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும் முதன் முதலில் வழங்கப்படவேண்டும் !

காரணம்...?

நாம் திருந்திய பின்னர்தான் நம்மவர் திருந்திய பின்னர்தான் மற்றவர்களைத் திருத்த முயல வேண்டும்.

ஆகவே

முதலில் நம்மை நாமே திருத்திக் கொள்வோம்.

தமிழ்ப் பண்பாடு இதுதான் என்பதை

நமது நாளாந்த வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவோம்.

பின்னர் அவர்கள் பின்பற்றுவார்கள் !

நடப்பவன் சொன்னால் நாடு மட்டுமல்ல,

இந்த நானிலமே கேட்கும் - நடக்கும் !

## கலாபூஷணம் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி - 2008 முடிவுகள்



**முதலாம் பரிசு ரூபா 5000/=**

தாய். மொழி. - தீரன் ஆர். எம். நௌஸாத், தபால் நிலையம், கல்முனை

**இரண்டாம் பரிசு ரூபா 3000/=**

துகிலுரிப்பு - வதிரி. இ. இராஜேஸ்கண்ணன், சாத்வீக பிரஸ்தம், இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி

**மூன்றாம் பரிசு ரூபா 2000/=**

காகக்குட்டி - சி. ஹேமந்த், 754, கனகராசா ஒழுங்கை, திருநகர் வடக்கு, கிளிநொச்சி

**பரிசுச் சான்றிதழ் பெறும் கதைகள்**

சூதகப்பாடு - கார்த்திகா பாலசுந்தரம், மூப்பியா வளவு, கரவெட்டி மேற்கு, கரவெட்டி

கவ்வாத்துக்களம் - மு. ஜெயசீலன், தமிழ்த்துறை மூன்றாம் வருடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

மணல்திட்டு - ச. அருளானந்தம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, திருகோணமலை

நான்கண்ணகியில்லை - பாலா சங்குப்பிள்ளை, 46/5, டன்பார் வீதி, ஹட்டன்.

அசலும் நகலும் - கே. எஸ். சுதாகர், 28, Throsby Crescent, Deer Park, Victoria - 3023, Australia.

பாப்பா புள்ள - சிவனு மனோகரன், இல. 86, சைட் வீதி, ஹட்டன்

அக்கரைகள் பச்சை - எச். எல். எம். நிசார், 70/3, புதிய கண்டிப்பாதை, மாவனல்லை.

வாழ்வியல் - திருமதி கமலினி சிவநாதன், இல. 3, அரசவீதி, கிறீன்ஸ் வீதி, மட்டக்களப்பு

இருண்ட வீட்டிற்கு - நெடுந்தீவு இரா. தர்மலிங்கம், 50/02/01, ஸ்ரீ சரணங்கர வீதி, களுபோவில, தெகிவளை.

*நடுவர்கள் -*

திருமதி பத்மா சோமகாந்தன்

புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்

திரு. மு. தயாபரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# POOBALASINGHAM BOOK DEPOT

**IMPORTERS, EXPORTERS, SELLERS & PUBLISHERS OF BOOKS, STATIONERS AND NEWS AGENTS.**

***Head Office :***

340, 202 Sea Street, Colombo 11, Sri Lanka.
Tel. : 2422321. Fax : 2337313
E-mail : pbdho@sltnet.lk

***Branches :***

309A-2/3, Galle Road, Colombo 06, Sri Lanka.
Tel. : 4-515775, 2504266

4A, Hospital Road,
Bus Stand, Jaffna.

# பூபாலசிங்கம் புத்தகசாலை

**புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்**

**தலைமை :**

இல. 340,202 செட்டியார் தெரு, கொழும்பு 11, இலங்கை.
தொ. பே. 2422321. தொ. நகல் 2337313
மின்னஞ்சல் : pbdho@sltnet.lk

*கிளை :*

இல. 309 A–2/3, காலி வீதி,
கொழும்பு 06, இலங்கை
தொ. பே. 4–515775, 2504266

இல. 4A, ஆஸ்பத்திரி வீதி,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

**புதிய வரவுகள்**

| | | | ரூபா |
|---|---|---|---|
| • தமிழர் பண்பாடும் தத்துவமும் | நா. வானமாமலை | - | 375/= |
| • மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் | மா. ராமையா | - | 600/= |
| • என் மனப் பதிவுகள் | வி. என். மதிஅழகன் | - | 468/75 |
| • இலங்கையில் சாதியமும் அதற் கெதிரான போராட்டங்களும் | வெகுஜனன், இராவணா | - | 375/= |
| • ஒரு பிரில்லியனுக்கு எத்தனை ஜீரோ | சூசனி ஜார்ஜ் | - | 487/50 |
| • தமிழ் மக்கள் வரலாறு | க.ப. அறவாணன் | - | 750/= |
| • எம்.சி. ஒரு சமூக விடுதலைப் போராளி | எஸ். சந்திரபோஸ் | - | 800/= |
| • பிரேம்ஜி கட்டுரைகள் | பிரேம்ஜி | - | 300/= |
| • மஹாகவியியல் | ஸ்ரீ. பிரசாந்தன் | - | 500/= |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டைப்பட அதிதி**



# படைப்பிலக்கியத் துறையுடன் வெளியீட்டுத் துறையிலும் சாதனை படைக்கும் கலாபூஷணம் புன்னியாமீன்

*- உடப்பூர் வீரசொக்கன்*

அமைதியாக அடக்கமாக காத்திரமான முறைமைகளில் பதிப்புத்துறை என்றால் என்ன, சிருஷ்டி ஆக்கப்படைப்பு என்றால் என்ன, தனக்கே உரியபாணியில் இலக்கியம் படைக்கும் ஓர் கர்த்தா கலாபூஷணம் புன்னியாமீன் என்றால் அது மிகையில்லை.

மத்திய மலைநாட்டின் கலை வளமும் இயற்கை வளச் செல்வங்களையும் கொண்ட கண்டி உடதலவின்னை என்றதும் இலக்கிய உலகத்தில் பேசப்படும் ஓர் அசுர இலக்கியம் படைக்கும் ஜாம்பவானாகத் திகழும் கலாபூஷணம் புன்னியாமீன் நாமமே ஞாபகத்துக்கு வரும் அளவுக்கு அகலக்கால் பதித்தவர்.

கவிஞராக, எழுத்தாளராக, ஊடகவியலாளராக, பேச்சாளனாக, பதிப்பாளனாக, வெளியீட்டாளனாக பல்துறை ஆற்றலுடன் திகழும் கலாபூஷணம் புன்னியாமீன் முஸ்லிம் மக்கள் சார்பில் பேசப்படும் முன்னணி எழுத்தாளராகத் திகழ்கின்றார்.

பத்தொன்பதாம் வயதிலே இலக்கிய உலகில் கால் பதித்து. இன்னும் ஓயாமல் ஆக்கப்பணி புரிந்து, தான் பிடித்த பேனாவை இன்னும் விடாமல் எழுதிவரும் கலா பூஷணம் புன்னியாமீன் ''தேவைகள்'' என்ற சிறுகதைத் தொகுதியின் மூலம் பிரவேசித்தார். இதுவரை அன்னார் ஏழு சிறுகதைத் தொகுதி, ஒரு நாவல், இலக்கியத் திறனாய்வுத் தொகுதி இரண்டு, வரலாற்று தொகுதிகள் ஆறு, ஆசிய வரலாறு ஒன்று, விளையாட்டு விமர்சனம் ஒன்று, கவிதைத் தொகுதிகள் மூன்று, வரலாறும் சமூகக் கல்வியும் எட்டுத் தொகுதிகள்; அரசியல் திறனாய்வு ஏழு தொகுதிகள்; அரசியல் 3 நூல்கள் 14 தொகுதிகள்; பொது அறிவு நூல்கள் மூன்று இத்துடன் தனது இல்லாள் மஸீதா புன்னியாமீனுடன் இணைந்து கலாபூஷணம் புன்னியாமீன் எழுதிய புலமை பரிசுகள் நூல்கள் 47 தொகுதி களை இலக்கிய உலகில் பிரகாசிக்க வைத்துள்ளார்.

ஒரு சில நூல்களை வெளியிட்டு தான் தான் இலக்கிய கர்த்தாவென்றும் தன்னைவிட மேலானவர்கள் இல்லையெனவும் பேசப்படும் இக்கால சூழ்நிலைகளில் கூட இதற்கெல்லாம் விதிவிலக்காக இருந்து அடக்கத்துடன் பணி செய்துவருபவர்களில் ஒருவராக புன்னியாமீனைக் காண்கின்றேன்.

ஒரு ஆணின் முன்னேற்றத்துக்கு ஒரு பெண் துணை போவதைப் போல தனது எழுத்துலக முன்னேற்றத்துக்கும், தன்னை வழிப்படுத்தி, நெறிப்படுத்தும் இல்லாள் மஸீதா வழி காட்டியாக இருந்து வருகின்றாள் என்பதை அடிக்கடி ஞாபகப்படுத்துவதை, பெருமையுடன் கூறுவதை, கேட்டு வருகின்றேன்.

இப்பணிகளை சமூக உணர்வுகளுடன்மேற்கொண்டு வருவதை தான் சார்ந்த சமூகம் இன்னும் இனம் காணாததை யிட்டும், தனது ஆற்றலை புரியாததையிட்டும் மனநெகிழ்ச்சி கொள்ளும் கலாபூஷணம் புன்னியாமீன், இதையிட்டு விசனப் படாமல் தான் எடுத்துக் கொண்ட முயற்சியை, பணியை எவ்வித தடங்கலுமின்றி செய்து வருகிறார்.

இலைமறைகாயாக இருந்து ஆக்கப்பணிபுரிந்து இனம் காணப்படாதவர்களை இனம் காணப்படுத்த வேண்டும் எனவும் அவர்களை வெளியுலகம் அறிய வேண்டும் என்ற நோக்குடனும் முஸ்லிம் சமூகத்துள்ள எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் கலைஞர்களை திரட்டி ஆவணப்படுத்த வேண்டி விபரத்திரட்டு ஐந்து தொகுதிகளாக வெளி யிட்டுள்ளார். இதில் 157 கலைஞர் கள், எழுத்தாளர்களின் விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதே வேளை இலங்கையில் ஏற்பட்ட இன வன்செயல் காரணமாக 1983 ஆம் ஆண்டு புலம் பெயந்து வாழும் எம்மவர் களை இனம் கண்டு, அப்பின்புலத்தில் இலக்கியம் படைத்த 25 தமிழ் எழுத்தாளர்கள், கலைஞர்களின் விபரங்களை திரட்டி தனது நூறாவது படைப்பாக கலாபூஷணம் புன்னியாமீன் வெளியிட்டுள்ளார். இது சிறுபான்மை இனமக்களின் பரிமாணத்தை எடுத்து காட்டுவதாக இருக்கின்றது.

என்னதான் இருந்தாலும் தான் சார்ந்த இனக் குழுமங் களின் படைப்புக்களை ஆவணப்படுத்தி வெளியிட்டாலும், அதன் சார்பான விமர்சனங்களையோ, திறனாய்வுகளையோ எந்த ஒரு முஸ்லிம் எழுத்தாளர்களும் எழுதவில்லை. இது விடயம் சம்பந்தமாக வெளியுலகத்துக்கு கொண்டு வரவில்லை. ஆனால் ஒரு சில தமிழ் அன்பர்கள் தன்னைப் பெருமைப்படுத்தி விமர்சனங்களை தீட்டி வெளியுலகம் காண வைத்துள்ளனர். இந்த ஆதங்கத்தை மன நெகிழ்வோடு கலாபூஷணம் புன்னியாமீன் துணிந்து தெரிவித்து வருகின்றார்.

தான் சார்ந்த சமூகத்துக்கு ஒரு சரியான அரசியல் கட்சி இல்லையென்ற வேதனையும் பல அரசியல் கட்டுரைகளின் வெளிப்பாட்டின் விம்பமாக 'முஸ்லீம்' கட்சி தோற்றுவிப்பதற்கு அடித்தளமாக அமைந்துள்ளதென்பதையும் அடிமன உணர்வு களுடன் கலாபூஷணம் புன்னியாமீன் தெரிவிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு கண்டி மண் தந்த அறிஞர் சித்திலெப்பை 1885 ஆம் ஆண்டு தந்த 'அசன்பேயின் கதை' இலங்கையில் முதல் நாவலாக பேசப்படுகின்றதோ, அதேபோல பல காலம் சென்று கலாபூஷணம் புன்னியாமீனின் ஆக்க இலக்கிய படைப்புக்கள் அதன் தார்ப்பரிய பெருமைகள் பின்னொரு கால் சொல்லப்படும், பெருமைபடுத்தப்படும் இது உண்மை.

கடந்த 25 வருட கால இலக்கிய பணியுடன் 12 வருட காலம் வெளியீட்டுத் துறையிலும் தன்னை அர்ப்பணித்த கலாபூஷணம் புன்னியாமீனை 1995 மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சு மத்திய மாகாண சலாசார விழாவில் கௌரவித்தது.

கண்டி மக்கள் கலை இலக்கிய பேரவை அகஸ்தியர் நினைவு விழாவில் பேராசிரியர் எஸ். தில்லைநாதனினால் பொன்னாடை போர்த்தி விருது வழங்கி சிறப்பித்தது.

கலை, இலக்கிய ஆற்றலுக்காக வேண்டி 2003 ஆம் ஆண்டு அரசவிருதான 'கலாபூஷண விருது' இவருக்கு வழங்கப்பெற்றது.

நாடக நடிகனாக, சிறந்த பேச்சாளனாக பல்பரிமாணங் களுடன் இலக்கிய உலகில் பவனிவரும் கலாபூஷணம் புன்னியாமீனின் இலக்கிய செல்நெறிகள் வியாபித்து நிற்பதுடன், அன்னாரின இலக்கிய செழுமைக்கு இவரின் சிருஷ்டிகள் கோடிட்டு காட்டுகின்றன.

# பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இலக்கிய ஆய்வுக்கு 'டாக்டர்' பட்டம் பெற்றார்



சுதேச மருத்துவம் பற்றிய இலங்கைத் தமிழ் நூல்கள் – பொருள் மரபும் இலக்கிய வளர்ச்சியில் அவற்றின் பங்கும் (Tamil Literature on Indigenous Medicine in Sri Lanka - Their Content and Contribution to Literary development) என்னும் ஆய்வுத் தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் ஆய்வை மேற்கொண்டு சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் (57) 'டாக்டர்' பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். இவர் தமது Ph.D இலக்கிய ஆய்வுக்கட்டுரையினை 2007ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்திற் சமர்ப்பித்திருந்தார்.

நாடறிந்த இலக்கிய, சமயச் சொற்பொழிவாளரும், பட்டிமன்றப் பேச்சாளரும், வானொலி தொலைக்காட்சிக் கதாப்பிரசங்கக் கலைஞரும், கல்விமானுமான இவரைப் பேராதனைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவரும், பழுத்த சிந்தனையாளரும், கல்விமானும், பேரறிஞருமான 'கலாகீர்த்தி' பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள் இத்தலைப்பில் ஆய்வு நிகழ்த்துவதற்கு அனுமதியளித்ததுடன் சிபாரிசும் செய்தார். 2000ஆம் ஆண்டுமுதல் 2007ஆம் ஆண்டுவரை இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டது. உயர்கல்வி நோக்கில் இலண்டன், சுவிஸ் ஆகிய நாடுகளிலும் இவரது ஆய்வுத் தேடல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவர் 1979ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே பேராசிரியர், கலாநிதி கனகசபாபதி கைலாசபதியவர்களின் மேற்பார்வையின் கீழ் "ஈழத்து நவீன தமிழ்க் காவியங்கள்" என்னும் தலைப்பில் ஆய்வு செய்து தமது தமிழ்ச் சிறப்புப் பட்டத்தைப் பெற்றார். அதன்பின் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துத் தமிழ்ச் சேவையில் பணியாற்றினார். 1988இல் "யாழ்ப்பாணத்து முருகப் பிரபந்தங்கள்" என்னும் ஆய்வுப் பொருளில் பேராசிரியர் கலாநிதி ஆ. வேலுப்பிள்ளையவர்களின் மேற்பார்வையின் கீழ் தமது முதுகலைமாணி (M.A)ப் பட்டத்தையும் பெற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 'டாக்டர்' பட்டத்திற்கான மேற்பார்வையாளர்களாகப் பேராசிரியர்கள் கலாநிதி சி. பத்மநாதன் அவர்களும் கலாநிதி க. அருணாசலம் அவர்களும் நியமிக்கப்பட்டனர். ஆய்வுப்பேரறிஞர்களும், வித்துவப் புலமையாளர்களுமான இவ்விருவரும் ஆய்வேட்டை நுண்ணாய்வு செய்து 'டாக்டர்' பட்டத்திற்கான சிபாரிசினை வழங்கியுள்ளனர். இவ்வாய்வேட்டின்படி பரீட்சகர்களாகக் கலாநிதி. செ. யோகராசா அவர்களும், கலாநிதி வ. மகேஸ்வரன் அவர்களும் இருந்தனர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இன்றைய தமிழ்த்துறைத் தலைவரும், இவ்வாய்வாளரின் விரிவுரையாளருமான கலாநிதி துரை. மனோகரன் அவர்கள் தமிழ்த்துறையின் தலைவர் என்ற முறையில் 'டாக்டர்' பட்டத்தைச் சிபார்சு செய்தார். கலைப்பீடாதிபதி உட்பட உயர்பட்டப்படிப்புக்கான குழுவினரின் முன்துறைத்தலைவர்களின் கூட்டத்தில் – பேராதனைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கடந்த 21.10.2008 அன்று Ph.D பட்டத்தை வழங்கிக் கையெழுத்திட்டார்; பெறுபேறு வெளியிடப்பட்டது.

'டாக்டர்' பட்டம் பெற்றுள்ள இவருக்கு முன்னதாகவே பல்வேறு ஆலயங்களும், நிறுவனங்களும் சிறப்புக் கௌரவப்பட்டங்களை வழங்கியுள்ளன. இவர் சித்தாந்த பண்டிதர், அருள்மொழிச் செல்வர், சொற்பேராழி, நவரஸக்கலைஞானி, செஞ்சொல்வாரி, மணிமொழிவாரி, செஞ்சொல்வாணர், அருட்கலைமாமணி, திருமுறைக்கலாநிதி, வாகீசகலாநிதி, செம்மொழிப்புலமையாளர் என்னும் கௌரவப் பட்டங்களையும் கொண்டவர். 'டாக்டர்' பட்டத்தைப் பெற்றுள்ள இவர் அகில இலங்கை சமாதான நீதவானுமாவார்.

இவர், நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலர் 'அருள்மாமணி' கந்தசாமி கனகசபாபதி (கனடா), வித்துவாட்டி ஸ்ரீமதி கோகிலாம்பாள் கனகசபாபதி (கனடா) தம்பதியின் சிரேஷ்ட புதல்வரும், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திரு. திருமதி பாலசிங்கம் பூமணி தம்பதியின் மருமகனுமாவார்.

டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களை ஞானம் வாழ்த்தி மகிழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008 தேசிய இலக்கிய - கலைப்போட்டிகளின் கீழ் நடத்தப்பட்ட
கவிதையாக்கத் திறந்த போட்டியில் முதலாமிடம் பெற்றுள்ள கவிதை

# விடிவு எப்போது

உ. நிசார்

இத்திரு நாட்டிலே இத்தனை காலம்
யுத்தம் நடந்திடவே – இங்கு
எத்தனை மாந்தர் சித்தம் குலைந்திட
நித்தம் பெயர்ந் தனரோ

வீட்டைத் துறந்தவர் காட்டினில் வாழ்ந்த
வேளைகள் கணக் கில்லை – இன்னும்
நாட்டைத் துறந்தவர் நாடுகள் சென்றது
நமது கணக்கில்லை

உடமை துறப்பதும் உறவைத் துறப்பதும்
உள்ளம் மகிழ்வ தல்ல – பெருங்
கடலைக் கடந்தவர் சென்றது கூட
உடல் உயிர் காத்திடவே

கொட்டிலைப் போலொரு மண்டபங் கொண்டு
கூட்டாய் அங்கே வாழ்ந்து – அவர்
பட்டது பாடங்கே தொட்டது சூன்யம்
நட்ட மடைந்ததே மிச்சம்

நாட்டுக்கு வெளியே சென்றவ ரெல்லாம்
நாதியற் றெங்கும் நின்று – தன்
பாட்டுக் கலைந்து தஞ்சம் புகுந்திட
நாட்டுக்கு வந்தது அவலம்

திக்குத் தெரியாத் திசைகளில் சென்று
செய்வ தறியாது திகைத்து – நம்
மக்களு முலகில் புலம் பெயர்ந்திட
மௌனம் காத்தது அரசு

மரபாய் இருப்போம் கொடியாய் இருந்து
உறவை வளர்க்கச் சொல்லி – அவர்
உறவை மறுத்துக் கொடியை அறுப்பது
உத்தமச் செயலொன் றல்ல

ஒற்றைக் குடைக்குள் ஆட்சி நடாத்த
ஒற்றுமை கொள்வோ மென்று – நிழல்
பற்றிப் பறித்திடக் குடையைச் சரிப்பது
பண்புள்ள செயலும் அல்ல

அல்லல் பட்டோரின் அவலக் குரலை
தொல்லை யாக நினைத்து – கடும்
கல்லு மனங்கொண்டு துப்பாக்கி யேந்தி
கலைப்பது வும் முறை யல்ல

இனங்களுக் கிடையே முறுகல் வருவது
இயற்கை யென்பதை யுணர்ந்து – நல்
மனமொன் றிணைந்து இலங்கை யராக
வாழ்வோம் என்றும் சிறக்க

**புதிய தலைமுறைப் படைப்பாளிகள் : அறிமுகம் 33**



கண்டி மாவட்டத்தில் உள்ள உடுநுவரை முறுவத்த கஹமுல என்ற இடத்தைச் சேர்ந்த உ. நிசார் (எச்.எல்.எம். நிசார்) கணித விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர். சிங்கள மொழி மூலம் கல்வி கற்ற இவர், தமிழ் மொழியைச் சுயமாகக் கற்றுத் தேறியவர். கவிதை, சிறுகதை ஆகிய துறைகளில் எழுதிவரும் இவரது படைப்புகள் தினகரன், தினபதி, சிந்தாமணி, நவமணி ஆகியவற்றில் வெளியாகியுள்ளன. "கனவுப் பூக்கள்", "ஓயாத அலைகள்" ஆகிய கவிதை நூல்களை வெளியிட்ட இவரது சிறுவர் பாடல்கள் அடங்கிய நூல்களாக 'நட்சத்திரப் பூக்கள்', 'வெண்ணிலா', 'மலரும் மொட்டுக்கள்' என்பன வெளிவந்துள்ளன. ஞானம் சஞ்சிகை நடத்திய அல்வாயூர் மு. செல்லையா ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி 2007, புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி 2008 ஆகியவற்றில் பரிசுச் சான்றிதழ்கள் பெற்றுள்ளார்.

இவரது தொடர்பு முகவரி: 70/3, புதிய கண்டிப்பாதை, மாவனல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்

# "இலங்கையை" விமர்சன ரீதியில் அணுக வேண்டும்!

எம். ஏ. நுஃமான்

(சென்ற இதழ் தொடர்ச்சி)



**வல்லினம் :** ஒரு இலக்கியப் படைப்புக்கான தகுதி காலத்திற்கு காலம் மாறுபடும்போது, விமர்சனத்திற்கான அவசியம்தான் என்ன?

**எம்.ஏ.நுஃமான் :** ஒரு இலக்கியப் படைப்புக்கான இடம் காலத்திற்கு காலம் மாறுபடுகின்றது என்பதே ஒரு விமர்சன நோக்குதான். விமர்சன ரீதியாகத்தான் நாம் இந்த வேறு பாட்டைத் தீர்மானிக்கின்றோம். இலக்கியத்தின் உடன் விளைவுதான் இலக்கிய விமர்சனம். இலக்கியம் தோன்றும் போதே இலக்கிய விமர்சனமும் தோன்றிவிடுகின்றது. இது உலகப் பொதுவான ஓர் உண்மை. கிரேக்க இலக்கியம் இல்லாவிட்டால் அரிஸ்டாட்டிலின் கவிதையில் கோட்பாடு இல்லை. தொல்காப்பியப் பொருளதிகாரம் சங்க இலக்கியம் பற்றிய விமர்சன அழகியல் கோட்பாடுகளைத்தான் பேசு கின்றது. காலம் தோறும் இலக்கியப் பொருளிலும் வடிவத்திலும் ஏற்படும் வேறுபாடுகள்தான் இலக்கியக் கோட்பாடுகள், விமர்சனப் பார்வைகள் என்பவற்றின் வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைகின்றன. அவ்வகையில் இலக்கியம் என்ற ஒன்று இருக்கும் வரை விமர்சனம் இருக்கும். இலக்கியத்தின் உள்ளார்ந்த அம்சங்களையும், அதன் இயக்க விசையையும் புரிந்து கொள்வதற்கு விமர்சனம் தேவைப்படும். இலக்கியத்தின் தேவையும் வளர்ச்சியுமே விமர்சனத்தின் தேவையையும் வளர்ச்சியையும் தீர்மானிக்கின்றது என்று நான் நினைக்கின்றேன்.

**வல்லினம் :** சுய அனுபவத்தைப் படைப்பாக்குதல், சமூக சீர்திருத்தத்திற்காக எழுதுதல், படைப்பை ஒரு புனைவாக மட்டுமே அணுகுதல் என படைப்பாளிகள் பல்வேறு அணுகுமுறையோடு இலக்கியத்தை நெருங்குகின்றனர். இதில் இன்றையக் காலத்தின் தேவையாக எதைக் கருதுகிறீர்கள்?

**எம்.ஏ.நுஃமான் :** எல்லாக் காலத்திலும் பல்வேறு இலக்கியப் போக்குகளுக்கு இடம் இருந்திருக்கின்றது. ஒரு காலத்தின் சமூக, அரசியல் சூழலை ஒட்டி இவற்றில் ஏதாவது ஒரு போக்கு, அணுகுமுறை முனைப்பாக இருக்கலாம்; மற்றவை பின்னடைந்திருக்கலாம். ஒரு குறிப்பிட்ட காலத்தில் இலக்கிய உற்பத்தியில் எத்தகைய சமூக சக்திகள் முன்னணியில் இருக்கின்றன, எத்தகைய சமூக அரசியல் முரண்பாடுகள் முனைப்புற்றிருக்கின்றன என்பதைப் பொறுத்து இது அமைகின்றது. ஒரு காலத்தில் மேலோங்கி இருக்கும் இலக்கிய மரபு இதன் விளைவு என்றுதான் கூற வேண்டும். தமிழ் இலக்கிய வரலாறும் இதனை உணர்த்துகின்றது. காதலும் போரும் சங்க இலக்கியத்தின் பிரதான பாடுபொருள் என்பது நமக்குத் தெரியும். இரண்டும் அன்றைய சமூக வாழ்வின் எதிர் வினைகள்தான். இரண்டும் ஒன்றுக்கு ஒன்று எதிர் நிலையானவை எனினும் ஒரு கவிஞனே இரண்டையும் கவிப்பொருளாகக் கொண்டிருக்கிறான். அதை அடுத்துவந்த காலத்தில் அறப்போதனையும் சீர்திருத்தமும் முனைப்பாக இருந்தாலும் அக உணர்வு புறந்தள்ளப்படவில்லை. அறமும் பொருளும் பாடிய வள்ளுவரே காமத்தையும் சுவைப்படப் பாடியிருக்கிறார். பண்டையப் புலவர்கள் இலக்கியத்தைக் கூறுபடுத்தி நோக்கவில்லை என்று தெரிகின்றது. தாம் இலக்கியம் படைக்கிறோம் என்ற பிரக்ஞையுடன் அவர்கள் படைப்பு முயற்சியில் ஈடுபட்டார்கள் என்றும் கூறமுடியாது.

இலக்கியம் சுய அனுபவ வெளிப்பாட்டுக்கு மட்டும் உரியது என்பதோ, சமூக சீர்திருத்தமே இலக்கியத்தின் பிரதான பணி என்பதோ, அல்லது இலக்கியம் வெறும் புனைவு விளையாட்டுத் தான் என்பதோ நம் காலத்துக்குரிய பிளவுண்ட மனதின் வெளிப்பாடுதான். இத்தகைய சித்தாந்தங்களுக்குப் பின்னால் உள்ள அரசியலையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சுய அனுபவம் மட்டுமே இலக்கியப் படைப்புக்கு உரியது என்னும் போது, அது தனிமனித அனுபவத்தையே பிரதானப் படுத்தி சமூக அனுபவத்தைப் புறக்கணித்து விடுகின்றது. இங்கு இலக்கியம் சமூகப் பிரச்சனைகளில் இருந்து விடுபட்ட ஒன்றாகிவிடுகின்றது. பதிலாக, சமூகச் சீர்திருத்தத்துக் காகவே படைப்பு என்று கூறும்போது இலக்கியம் மனித வாழ்வின் ஏனைய அம்சங்களை விட்டும் விலகிவிடுகின்றது. மறுபுறத்தில் படைப்பை ஒரு புனைவாக மட்டுமே அணுகுவோர் இலக்கியத்தை ஒரு சொல்வித்தையாகவே மாற்றி விடுகின்றனர். கோணங்கியின் பிற்கால எழுத்துக்கள் இத்தகைய சொல்வித்தைக்குச் சிறந்த உதாரணம் என்பேன். இலக்கியம் பற்றிய இத்தகைய பிளவுண்ட அணுகுமுறைகளில் எனக்கு உடன்பாடு இல்லை. இலக்கியத்தை வெறும் புனைவாக, சொல்வித்தையாக நான் கருதவில்லை. என்னைப் பொறுத்தவரை தனிமனித அனுபவத்தையும் சமூக அனுபவத்தையும் பிரித்து நோக்க முடியாது. படைப்பாளி சமூக வேர்களை அறுத்துக் கொண்டு புனைவு என்னும் வித்தையுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதையுண்டு போகக் கூடாது. ஒரு படைப்பு, வாழ்க்கை பற்றிய – மனித அனுபவத்தின் அர்த்தம் பற்றிய கண்டுபிடிப்பாக, வாழ்க்கை பற்றிய நமது புரிதலை வளப்படுத்துவதாக அமைய வேண்டும். இத்தகைய படைப்புகளே நமக்குத் தேவை. அவற்றையே நல்ல படைப்புகள் என்பேன்.

**வல்லினம் :** இலக்கியத்தில் 'இசங்களைப்' பற்றிய தங்களின் பார்வை அல்லது அபிப்பிராயம்....

**எம்.ஏ.நுஃமான் :** 'இசங்கள்' என்பது அறிவுத் துறைகளை, சமூகக் கோட்பாடுகளைக் குறிக்கின்றது. இவை சமூக இயக்கங்களின் உடன் விளைவுகள். வாழ்க்கையை மட்டுமின்றி, இலக்கியத்தைப் புரிந்து கொள்வதற்கும், இலக்கியம் பற்றிய நமது பார்வையை வளப்படுத்துவதற்கும் இலக்கியப் படைப்பை மேற்படுத்துவதற்கும் இந்த இசங்கள் வெவ்வேறு அளவில் உதவுகின்றன என்றே நான் கருதுகின்றேன். இலக்கியம் பற்றிய எனது சமூகப் பார்வையை வளப்படுத்துவதற்கு 'மார்க்சியம்' எனக்குப் பெரிதும் உதவியிருக்கின்றது. 1950க்குப் பிந்திய தமிழ் இலக்கிய உற்பத்தியில் இதன் செல்வாக்கு கணிசமானது. 1980க்குப் பிந்திய தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெண்ணியம் முக்கியப் பங்களிப்பு செய்திருக் கின்றது என்பதை நாம் மறுக்க முடியாது. மொழி, இலக்கியம் பற்றிய எனது பார்வையில் பெண்ணியம் தாக்கம் செலுத்தி யிருக்கின்றது என்பதை நான் உணர்ந்திருக்கின்றேன். 1960–களின் இறுதியில் 'கவிஞன்' என்ற இதழை நான் தொடங்கினேன். பெண்ணை வெளி ஒதுக்கும் – ஆண் முனைப்புள்ள இத்தலைப்பை இன்று நான் தேர்வு செய்ய மாட்டேன். அன்று இந்தப் பிரக்ஞை நமக்கு இருக்கவில்லை. இந்த பார்வை மாற்றம் பெண்ணியத்தின் செல்வாக்கு என்பதை மறுக்க முடியாது. ஆயினும் எல்லா 'இசங்களும்' எல்லா காலத்திலும் உடன்பாடான செல்வாக்கை செலுத்து கின்றன என்று கூறமுடியாது. ஒரு காலத்தில் ஒரு குறிப்பிட்ட சூழலில் முற்போக்கான விடுதலைக் கருத்தியலாக இருக்கும் ஒரு கோட்பாடு பின்னொரு காலத்தில் பிறிதொரு சூழலில் பிற்போக்கான அடக்குமுறை கருத்தியலாக மாறிவிடுவதுண்டு. மார்க்சியமும் இதில் இருந்து தப்பவில்லை. தேசியம் பயங்கரமான சமூக விளைவுகளை ஏற்படுத்தியதற்கு உலக வரலாற்றில் ஏராளமான உதாரணம் உண்டு. தமிழ்நாட்டில் சாதியத்தின் சமூக விளைவுகள் நாம் அறியாததல்ல. எந்த 'இசத்தையும்' வழிபாட்டு ரீதியில் அன்றி, விமர்சன ரீதியில் நோக்க வேண்டிய அவசியத்தையே இவை நமக்கு உணர்த்துகின்றன.

**வல்லினம் :** இலங்கை, தமிழகம் தற்பொழுது மலேசியா என நெடிய வாசிப்பு அனுபவம் உள்ள தாங்கள் இன்றைய தமிழ் இலக்கியப் போக்கு பற்றி என்ன கருதுகிறீர்கள்?

**எம்.ஏ.நுஃமான் :** இன்றைய தமிழ் இலக்கியப் போக்கு என்று ஒருமையில் கூறுவதை விட போக்குகள் என்று பன்மையில் கூறுவதே பொருத்தமானது. பன்முகப்பட்ட இலக்கியப் போக்குகளை நாம் இன்று காண்கின்றோம். தமிழ் பல்வேறு நாடுகளில், பல்வேறு சூழல்களில், பல்வேறு சமூகங்களில் வழங்கும் மொழி என்பதனால் தமிழ் இலக்கியமும் பல்வேறு பட்டதாக இருப்பது இயல்புதான். பல்வேறு இன, மத, சாதி வர்க்கப் பிரிவினரின் எழுத்துக்கள் தமிழ் இலக்கியத்துக்கு ஒரு பன்முகத் தன்மையைக் கொடுக்கின்றது. ஆயினும் இவை எல்லாவற்றையும் தாண்டிய வெகுசன ரசனைக்குத் தீனி போடும் ஜனரஞ்சக வர்த்தக எழுத்து பிரதானப் போக்காக இன்னும் நிலைத்திருக்கிறது. இது பிரதானமாகத் தமிழ் நாட்டின் வர்த்தக இதழ்களால் ஊட்டி வளர்க்கப்படுவது. தமிழ் சினிமா இதன் விளைதளமாக உள்ளது. தீவிர இலக்கியமும் தீவிர இலக்கிய இதழ்களும் நமக்கு இன்னும் சிறுபான்மை போக்குதான். வர்த்தக இதழ்கள் சில லட்சங்களை தாண்டும் போது, தீவிர இதழ்கள் சில ஆயிரங்களைத் தாண்ட முடியாத நிலை உள்ளது. தமிழ் பேசுவோர் தொகை சுமார் ஆறு கோடி என்றாலும் நல்ல நூல்கள் இன்னும் ஆயிரம் பிரதிகள்தான் அச்சிடப்படுகின்றன. வர்த்தக இலக்கியத்தின் முதன்மை, உலகப் பொதுவான ஒன்றுதான் எனினும் வர்த்தக எழுத்துக்கும் தீவிர எழுத்துக்கும் இடையிலான நுகர்வோர் இடைவெளி தமிழில் மிக மிகப் பெரிது என்றுதான் கூறவேண்டும்.

வர்த்தக எழுத்தை கணக்கில் எடுத்து நீங்கள் இந்தக் கேள்வியை கேட்டிருக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். என்றாலும் தமிழ் இலக்கியப் போக்குகள் பற்றி பொதுவாகப் பேசும்போது அதன் இருத்தலை புறக்கணித்துவிட முடியாது. தீவிர இலக்கியப் போக்குகள் பல்வேறு கருத்து நிலைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. 1960,70–களில் கவர்ச்சி காட்டிய மார்க்சிய கருத்து நிலையின் பின்னடைவு 1980க்குப் பிறகு தமிழ் தேசியம், தலித்தியம், பெண்ணியம் போன்ற கருத்து நிலைகளுக்கு வழிவிட்டிருக்கின்றது. அமைப்பியல், பின் அமைப்பியல் கருத்து நிலைகளும் இக்காலப்பகுதியிலேயே தமிழில் நிலை கொள்ளத் தொடங்கின. கடந்த சுமார் 20 ஆண்டுகளில் தமிழ் படைப்பிலக்கியத்திலும் விமர்சன சிந்தனையிலும் இவற்றின் செல்வாக்கு முனைப்பாகத் தெரிகிறது. தமிழ் நாடே இப்போக்குகளின் பிரதான தளமாக அமைந்தது. நவீனத்துவத்தை தாண்டி, எதார்த்தவாதத்தைத் தாண்டி பின்நவீன யுகத்துக்குள் நுழையும் ஒரு போக்கு – ஒரு சிறுபான்மை போக்காக தமிழக இளம் படைப்பாளிகளிடம் முனைப்பாக வெளிப்படுகின்றது. புனைவு தரும் போதையை எழுத்தின் பிரதானப் பணியாக இவர்கள் கருதுவதாகத் தெரிகின்றது. இது இலக்கியத்தின் சமூகப் பணியை நிராகரிக்கும் போக்கு என்றே நான் கருதுகின்றேன். பெண்ணிய, தலித்திய எழுத்துக்கள் பாலியல், சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான எழுச்சி என்ற வகையில் முக்கியமான இலக்கியப் போக்குகள் என்றே கருதுகிறேன். இலங்கையில் உக்கிரமடைந்த இனப்போராட்டம் 1980க்குப் பிறகு ஈழத்து இலக்கியத்தைப் பெரிதும் பாதித்திருக்கின்றது. அரசியல் உள்ளடக்கம் கொண்ட எதிர்ப்பு இலக்கியம் இலங்கையில் எழுச்சி அடைவதை இது ஊக்குவித்தது. இன்றைய மூன்றாம் உலகின் பொதுவான இலக்கியப் போக்குடன் ஈழத்து இலக்கியத்தை ஒன்றிணைத்ததில் இது பிரதான பங்களித்தது. சமகாலத் தமிழ் இலக்கியத்துக்கு ஒரு புதிய பரிணாமத்தை வழங்கும் புலம் பெயர்ந்தோரின் இலக்கிய முயற்சிகள் ஈழத்து இன முரண்பாட்டின் உப விளைவுதான். மலேசிய – சிங்கப்பூர் எழுத்தை நான் சமீபத்தில்தான் வாசிக்கத் தொடங்கினேன். அது வெளிபடுத்தும் வாழ்வு அனுபவம் வித்தியாசமானது. தமிழகத்தின் ஜனரஞ்சக எழுத்தின் செல்வாக்கில் இருந்து அது இப்போதுதான் விடுபட தொடங்கியுள்ளது என்று நினைக்கின்றேன். 'வல்லினம்' சஞ்சிகை அதன் ஒரு வெளிப்பாடு என்றே கருதுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லினம் : தாங்கள் வாசித்த வரையில் மலேசியாவில் பொருட்படுத்தும் படியான நாவல்கள் வந்துள்ளனவா?

எம்.ஏ.நுஃமான் : நான் வாசித்த மலேசிய நாவல்களின் எண்ணிக்கை மிகக் குறைவுதான். பெரும்பாலான நாவல்கள் கதையம்சத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பவையாக உள்ளன. வாசக ருசியைத் தூண்டும் கதைப் பின்னல் ஜனரஞ்சக நாவல்களின் அடிப்படை பண்பாகும். தீவிரமான தமிழ் நாவல் 1960-களிலேயே இதிலிருந்து விடுபட்டு விட்டது. மலேசிய தமிழ் நாவல் அப்போக்கிலிருந்து இன்னும் விடுபடவில்லை என்று நினைக்கிறேன். நான் படித்தவற்றுள் சீ. முத்துசாமியின் 'மண்புழுக்கள்' கோலலங்காட் ரங்கசாமியின் 'நினைவுச் சின்னம்' ஆகியவை வேறுபட்டவை எனலாம். 'மண்புழுக்கள்' வாசிக்க சிரமம் தருவது எனினும் கதை ருசியை புறந்தள்ளி சுதந்திரத்திற்கு முற்பட்ட தோட்டப்புற வாழ்வின் உண்மையான சித்திரத்தைத் தர முயல்கின்றது. 'நினைவுச்சின்னம்' ஓர் ஆவணத்தன்மை வாய்ந்த வரலாற்று பதிவு. இதனை 'documentary novel' என்று சொல்லலாம். யுத்தகால அவலம் பற்றிய அனுபவத்தை விவரிக்கும் நாவல் என்ற வகையில் தமிழில் இது ஒரு வித்தியாசமான முயற்சி என்பேன். மலேசிய எழுத்து தமிழுக்கு புதிய வளம் சேர்க்கும் என்ற நம்பிக்கையை இவை தருகின்றன. மலேசிய நாவல்கள் எல்லாவற்றையும் தேடிப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் இவை தூண்டுகின்றன.

வல்லினம் : இன்றைய மலேசிய இலக்கிய சூழலை ஒட்டிய தங்கள் பார்வை அல்லது விமர்சனம்....

எம்.ஏ.நுஃமான் : மலேசிய இலக்கியச் சூழலுடன் எனது பரிச்சையம் மிகவும் சொற்பம்தான் என்றாலும் நான் எதிர்பார்த்ததை விட அது ஆரோக்கியமானதாக இருக்கிறது. நான் சந்தித்த புதிய தலைமுறையைச் சேர்ந்த இளம் எழுத்தாளர்கள் உற்சாகத்துடன் இருக்கிறார்கள். மரபு சார்ந்த கட்டுப்பெட்டித்தனம் அவர்களிடம் இல்லை. ஒரு தேடல் இருக்கிறது. புதியவற்றைத் தேடி நிறையப் படிக்கிறார்கள். அரசியல், சமூகம் சார்ந்த விழிப்புணர்வு அவர்களிடம் இருக்கிறது. நான் படித்த 'வல்லினம்', 'காதல்', 'செம்பருத்தி' முதலிய இதழ்கள் நம்பிக்கை ஊட்டும்படியாக இருக்கின்றன. இவர்களின் எண்ணிக்கை குறைவுதான் எனினும் எதிர் காலத்தில் இவர்கள் அதிகம் சாதிக்க முடியும் என்று நம்புகின்றேன்.

தமிழ், மலாய், சீன மொழிகளுக்கிடையில் கொடுக்கல் வாங்கல் இல்லாமலிருப்பது ஏமாற்றமாய் இருக்கிறது. பிற சமூகங்களை புரிந்து கொள்வதற்கும் நமது இலக்கியத்தை வளப்படுத்துவதற்கும் இது அவசியம் என நான் நினைக்கின்றேன். 'வல்லினம்' இதில் முயற்சி எடுக்கலாம்.

வல்லினம் : எழுத்தைத் தவிர்த்து வேறு எந்த கலை வடிவங்களில் ஆர்வம் கொண்டிருக்கிறீர்கள்?

எம்.ஏ.நுஃமான் : இலக்கியம்தான் எனது கலை ஈடுபாட்டின் மையமாக இருக்கின்றது. ஆயினும் பிற எல்லா கலை வடிவங்களிலும் எனக்கு அக்கறையும் ஆர்வமும் உண்டு. இளமைக் காலத்தில் ஓவியம் வரைவதில் ஈடுபாடு கொண்டிருந்தேன். பள்ளிக் காலத்திலும் பிறகும் இரண்டொரு நாடகங்களில் நடித்திருக்கிறேன். இவற்றில் எனது நேர் பங்கு பற்றல் இவ்வளவுதான். ஆயினும் ஒரு கலைஞன் என்ற வகையில் இசை, நடனம், ஓவியம், நாடகம், திரைப்படம் ஆகியவற்றை ஆர்வத்துடன் நான் அனுபவிக்கின்றேன். அவைபற்றிய விமர்சன நோக்கை வளர்த்துக் கொள்ள முயல்கின்றேன்.

வல்லினம் : இன்றையச் சூழலில் இலக்கணத்தைத் தனி ஒரு பாடமாகப் போதிக்கும் கல்வித்திட்டம் ஏற்புடையதா? சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இலக்கணத்தைத் தனிப் பாடமாகக் கற்பிக்காமல் மொழிப்பாடத்துடன் இணைத்தே கற்பிக்கின்றனர். காலத்திற்கு ஏற்ப இலக்கணம் போதித்தலில் மாறுதல்கள் செய்வது முறையாகுமா?

எம்.ஏ.நுஃமான் : இலக்கண கல்வி பற்றிய நமது பார்வை முற்றிலும் மரபு சார்ந்ததாகவே இருக்கின்றது. மரபு இலக்கணத்தை – தொல்காப்பியம், நன்னூல் போன்றவற்றில் கூறப்படும் இலக்கண கருத்துகளை மாணவர்களுக்கு கற்பிப்பதையே இலக்கணக் கல்வி என்று நாம் பொதுவாகக் கருதுகின்றோம். மாணவர்களின் மொழித்திறன் வளர்ச்சியில் இதன் பங்கு என்ன என்பது பற்றி நமக்குத் தெளிவு இல்லை. இலக்கணம் பற்றிய நவீன சிந்தனையைத் தரும் மொழியியல் பற்றி நமது பள்ளிகளில் கற்பிப்போருக்கு எதுவும் தெரியாது. ஒரு வாய்ப்பாடு போல் பழைய செய்திகளை நம் மாணவர் களுக்கு சொல்லிக் கொடுக்கிறோம். அதனால் மாணவர்களுக்கு எவ்வித பயனும் இல்லை. அவ்வகையில் இலக்கணக் கல்வி அவர்களுக்கு ஒரு சுமையாகவும் இருக்கின்றது.

மொழியியல் நோக்கில் இலக்கணம் என்பது மொழியின் அமைப்பையே குறிக்கும். மாணவர்கள் அந்த அமைப்பை புரிந்து கொண்டு அதில் தேர்ச்சி பெறும் வகையில் மொழி கற்பிப்பதே அதிக பயனுடையது. அவ்வகையில் மரபு ரீதியான இலக்கணத் தைத் தனியாகக் கற்பிப்பதை விட மொழி கற்பித்தலின் உள்ளார்ந்த ஒரு அம்சமாக அதைக் கற்பிப்பது பயன் தரும் என்று நான் கருதுகின்றேன். சிங்கப்பூரில் இதை எவ்வாறு செய்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. ஆனால் இலக்கணத்தை தனியாக அன்றி மொழிப்பாடத்துடன் இணைந்ததாகக் கற்பிப்பதை நான் ஆதரிக்கிறேன். மேலை நாடுகளில் கற்பித்தல் இலக்கணம் (pedagogic grammar) என்ற ஒரு கருத்து உண்டு. பள்ளிகளில் கற்பிப்பதற்கு மரபு ரீதியான இலக்கணத்தை விட இது உகந்தது. ஆனால் தமிழ் சூழலில் நமக்கு அது இன்னும் அறிமுகமாகவில்லை.

காலம்தோறும் மொழி மாற்றமடைகின்றது. அந்த மாற்றத்தை புரிந்து கொண்டு, தற்கால மாணவர்களின் மொழித்தேவையை மனங்கொண்டு, தற்கால மொழியியலில் அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். அவ்வகையில் இலக்கணம் பற்றிய நமது சிந்தனையில், இலக்கணம் கற்பித்தலில் மாற்றம் வேண்டும். இது தொடர்பாக கடந்த 25 – 30 ஆண்டுகளாக நான் பேசியும் எழுதியும் வந்திருக்கிறேன். 'ஆரம்ப இடைநிலை வகுப்புகளில் தமிழ் மொழி கற்பித்தல்: ஒரு மொழியியல் நோக்கு' என்ற எனது நூலில் நான் இதைப்பற்றி விரிவாக எழுதியுள்ளேன். 'அடிப்படைத் தமிழ் இலக்கணம்' என்ற எனது நூலும் காலத்துக்கு ஏற்ப இலக்கணச் சிந்தனையில் ஏற்பட்ட மாற்றங்களை உள்வாங்கி உயர்வகுப்பு மாணவர்களுக்காக எழுதப்பட்டது. இலக்கணம் கற்பித்தலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட வேண்டிய மாற்றங்கள் பற்றி அந்நூலின் முன்னுரையிலும் நான் குறிப்பிட்டுள்ளேன்.

**வல்லினம் :** இலக்கணம் பற்றி நூல்கள் எழுதியுள்ள தாங்கள் இலக்கியத்தில் முற்றிலும் மரபு மீறிய ஒரு தளத்தில் பயணிக்கிறீர்கள். இது முரண் இல்லையா?

**எம்.ஏ.நுஃமான் :** நான் முன்குறிப்பிட்ட இரண்டு நூல்களும்தான் இலக்கணம் தொடர்பாக நான் எழுதியவை. இன்னும் சில நூல்கள் எழுதும் திட்டம் உண்டு. இலக்கணம் மொழி தொடர்பாக நம் மத்தியில் நிலவும் மரபு ரீதியான, பழமைவாத சிந்தனைகளை உடைக்கும் முயற்சிகள்தான் இவை. நான் ஒரு மொழியியலாளன் என்ற வகையில் மொழி பற்றிய அறிவியல் பார்வையையே முன்வைக்கிறேன். இலக்கியத்தில் மட்டுமன்றி மொழி இலக்கணம் பற்றியும் எனது பார்வை மரபான பார்வை அல்ல. இலக்கணம் மொழி பற்றிய எனது கட்டுரைகளைப் படித்தால் இது புரியும். இங்கு முரண் எதுவும் இல்லை.

**வல்லினம் :** ஒரு மொழியியலாளர் என்ற வகையில் மொழி பற்றிய, குறிப்பாகத் தமிழ் மொழி பற்றிய உங்கள் பார்வை என்ன?

**எம்.ஏ.நுஃமான் :** தமிழ் சூழலில் மொழி பற்றிப் பேசுவதே சிக்கலானதாக உள்ளது. இங்கு மொழி பற்றிய பார்வை அறிவு சார்ந்ததாக அன்றி உணர்ச்சி சார்ந்ததாகவே இருக்கின்றது. மொழியைத் தனது இனத்துவ அடையாளமாகக் கொண்ட ஒரு சமூகத்தில் மொழி ஒரு புனிதத்தன்மையையும் பெற்று விடுகின்றது. தாயாகவும் தெய்வமாகவும் வழிபடப்படுகின்றது. மொழியைப்பற்றிய ஏராளமான ஐதீகங்கள் கட்டமைக்கப் படுகின்றன. மொழிக்காக உயிரை கொடுக்கவும் தயாரான ஒரு கூட்டம் உருவாகி விடுகின்றது. இத்தகைய சூழலில் மொழி பற்றி அறிவு பூர்வமாகச் சிந்திப்பதும் பேசுவதும் அத்தனை எளிதல்ல. கடந்த நூற்றாண்டில் தமிழ் மொழி பற்றி நடந்த சர்ச்சைகளையும் போராட்டங்களையும் நினைத்துப் பார்த்தால் இது புரியும். என்றாலும், இந்த உணர்வு நிலையைத் தாண்டி மொழி பற்றி அறிவியல் பூர்வமாகச் சிந்திப்பதற்கு மொழியியல் நமக்கு உதவுகிறது.

மொழியியலைப் பொறுத்தவரை மொழி ஒரு கருவிதான்; சக்தி வாய்ந்த செய்தி பரிமாற்றக்கருவி அதற்கு வேறு புனிதத்தன்மைகள் இல்லை. அது ஒரு சமூகத்தின் படைப்பு என்ற வகையில் சமூகத்தின் மாற்றத்துடன், வளர்ச்சியுடன் மொழியும் மாற்றமும் வளர்ச்சியும் அடைகின்றது. அந்த வகையில் மொழி மாற்றம் இயல்பானது. தவிர்க்க முடியாதது. மாற்றம் அடையாத மொழி வளர்ச்சி அடையாது; வளர்ச்சி அடையாத மொழி இறந்துவிடும். சமஸ்கிருதத்திற்கு, லத்தீன் மொழிக்கு இதுதான் நடந்தது. தமிழ் இன்றும் வாழ்கிறது என்றால் அது தொடர்ச்சியாக மாற்றமடைந்து வளர்ந் திருக்கிறது என்று பொருள். பாரதி பாடல்களைப் படிப்பது போல் சங்க இலக்கியத்தை நம்மால் படித்துப் புரிந்து கொள்ள முடியவில்லை. காரணம் அன்றைய தமிழ் வேறு, இன்றைய தமிழ் வேறு. தொல்காப்பியர் இன்று வந்தால் நாம் பேசுவதையோ எழுதுவதையோ கொஞ்சமும் புரிந்துகொள்ள மாட்டார் என்று நிச்சயமாகச் சொல்லலாம். இது கால மாற்றத்தினால், சமூக மாற்றத்தினால் மொழியில் ஏற்படும் மாற்றத்தின் விளைவு.

இந்த மாற்றம் சொற்களில் மட்டுமின்றி, ஒலி அமைப்பு, இலக்கண அமைப்பு எல்லாவற்றிலும் நிகழ்கின்றது. 'நீ நல்லை அல்லை' என்றோ 'யான் நல்லேன் அல்லேன்' என்றோ நாம் இன்று எழுதுவதோ பேசுவதோ இல்லை. இவை இன்றைய தமிழில் மொழி பெயர்த்தால் 'நீ நல்லவன்/நல்லவன் அல்ல' என்றோ 'நான் நல்லவள்/நல்லவள் அல்ல' என்றோதான் அமையும். இது மொழி மாற்றத்தின் விளைவு.

தனித்தமிழ், மொழித்தூய்மை பற்றி பேசுபவர்கள் தமிழின் பன்முகத்தன்மையை மறந்து அல்லது மறுத்துவிடுகிறார்கள். தமிழின் வளத்துக்கும், பலத்துக்கும் இந்தப் பன்முகத் தன்மையையும் ஒரு முக்கிய காரணியாகும் என்பதை நாம் மறுக்க முடியாது. தமிழ்க் கல்வியைப் பொறுத்தவரை மொழிப் பழமைவாதம்தான் மேலோங்கி இருக்கிறது. இது ஆரோக்கியமான சூழல் அல்ல.

**வல்லினம் :** இன்றைய இலங்கை சூழலைப்பற்றி தங்கள் பார்வை? இதற்கு முன்பு அதன் அரசியல் சூழலில் தாங்கள் வைத்திருந்த விமர்சனத்திலிருந்து ஏதும் மாறுபடுகிறீர்களா?

**எம்.ஏ.நுஃமான் :** இலங்கை அரசியல் சூழல் தொடர்ச்சியாக மோசமடைந்துக் கொண்டே வருகிறது. நீண்டகால இன முரண்பாடும் யுத்தமும் நாட்டை அழிவுப்பாதைக்கே இட்டுச் சென்றிருக்கின்றது. எமது காலத்தில் இதற்கு ஒரு நியாயமான தீர்வு கிடைக்கும் என்பதில் இப்போது எனக்கு நம்பிக்கை இல்லை. நான் எப்போதுமே இனவாதத்தை இனத்தேசியவாதத்தை எதிர்த்து வந்திருக்கின்றேன். அது மக்களை கூறுபடுத்தி நாட்டு முன்னேற்றத்தை நாசப்படுத்திவிடும் என்பதற்கு இலங்கை ஒரு சிறந்த உதாரணம். இனங்களுக்கிடையே சமத்துவத்தை உறுதிப்படுத்தாமல் இனவாதத்தை நாம் அகற்ற முடியாது. சமத்துவம் இல்லாவிட்டால் சமாதானத்தை நிலைநாட்ட முடியாது. சமாதானம் இல்லாமல் நம் யாருக்கும் சுதந்திரம் இல்லை. சமத்துவம், சமாதானம், சுதந்திரம் மூன்றும் ஒன்றை ஒன்று வேண்டி நிற்பது. அரசியல்வாதிகள் இதைப் புரிந்து கொள்ளாமல் தங்களையும் மக்களையும் தேசத்தையும் அழித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் இலங்கையின் எதார்த்தம். இது தொடர்பான எனது பார்வையில் மாற்றம் இல்லை.

நேர்காணல் : ம. நவீன்

*நன்றி : வல்லினம் ஜுன் ஆகஸ்ட் 2008*

புரவலர் புத்தகப் பூங்கா

**மாதாந்தம் ஒரு நூல் இலவசு வெளியீட்டுத் திட்டம்**

*தொடர்பு முகவரி :*
*தேர்வுக் குழு,*
புரவலர் புத்தகப் பூங்கா
இல 25, அவ்வல் சாவியா ரோட், கொழும்பு – 14.
தொ.பே. 0774161616 ; 0785318503



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனக்கடகம் ஒரு மண்ணும்

- செ. சுதர்சன்

இன்றும் உதிராமல் இருக்கிறது
அன்று பெரும்புயலாய்
தீயெழுந்து பரவ
அடுத்தடுத்த குச்சொழுங்கை
முடக்குகளில் குறுகி
நீண்ட பெருவழிகளிடை நிமிர்ந்து
எத்தனையோ ஏற்றம்
அதைவிடவும் இறக்கம் என
அத்தனையும் தாண்டி
காலவீதியில் கால்கள் வீசினேன்
இருந்தும்
இன்றும் உதிராமல் இருக்கிறது

மண்ணில் எழுதியதும்
மலங்கழித்து முற்றமதில்
கோலம் வரைந்ததுவும்,
விண்கட்டி விட்ட பட்டத்தின்
அசைவுகளும், குத்தல்களும்,
முட்டி உடைத்துக்
கள்ளை மோந்ததுவும்,
முழுநிலவில் மணல்மீது தூங்கியதும்,
பூரான் பிளந்துண்ட பூரிப்பும்,
கம்பளிப் பூச்சிகளின் மென்மைதடவி
காதலியின் நினைவில் தூங்கியதும்,
பின்னர்; துண்டு துண்டாய்
உடைந்த கனவோடு
துயில் நீங்கி எழுந்ததுவும் என
எல்லாம் கோலி எடுத்த
மனக்கடகம்
கொண்டு அலைந்தேன்

தம்பாட்டில் எதையும்
சரியாக இசைக்கின்ற
செம்பாட்டு மண் துறந்தேன்,
துரத்தப்பட்டேன்,
ஊர் இழந்த துறவியெனப்

பல ஊர்கள் தாண்டினேன்,
நாடுகள் தாண்டினேன்,
கண்டங்கள் தாண்டினேன்.
என் ஊருக்கப்பாலே
எல்லாமே சுடலையென
விரிந்த இவ்வெளிகளிடை
மனக்கடகம்
கவுண்டு கொட்டுண்ட
நினைவுகளைத் துலைத்தேன்
மீண்டும் கோலி நிரப்ப முடியாதென
மனக்கடகம்
ஏங்கிக் கிடக்கிறது.

இருந்தும்.....
குண்டியிலே குதிக்காலடிக்க
காலம் விரையுமுன்னர்
முந்தி முந்தி ஓடியும்
இன்றும் உதிராமல் இருக்கிறது
குதிக்காலில் ஒட்டிய
என் நிலத்தின் ஒரு மண்.

## தேசிய சாகித்திய விழாவில் பரிசு பெற்ற தமிழ் எழுத்தாளர்கள்

மாத்தறை கம்புறு பிட்டியாவில் நடைபெற்ற விழாவில் தேசிய சாகித்திய விருதுகள் வழங்கப்பட்டன. இதில் ஒன்பது தமிழ் எழுத்தாளர்கள் விருதுகள் பெற்றனர். 'தமிழ்மொழி சாகித்திய ரத்னா' விருதினை பேராசிரியர் அ. சண்முகதாஸ் பெற்றார். மரபுக்கவிதை ஆய்வுக்கு சாரல் நாடன் எழுதி வெளிட்ட குறிஞ்சித் தென்னவன் கவிதைகள் நூலுக்கு விருது பெற்றார். 'வரால் மீன்கள்' என்ற சிறுகதைத் தொகுதிக்கு எம்.எஸ். அமானுல்லா பெற்றார். நவீன கவிதை ஆய்வுக்கான விருது கலாநிதி. செ. யோகராசா அவர்களுக்கு கிடைத்தது. கவிதைக்கான விருது திமிலைத் துமிலனுக்கு கிடைத்தது. மொழி பெயர்ப்பு நாவலுக்கான விருதை இரா. சடகோபன் பெற்றதுடன் சிறுகதை மொழிபெயர்ப்புக்கான விருதை திக்வெல்ல சப்வான் பெற்றார். சிறுவர் இலக்கியத்திற்கான விருது ஓ.கே. குணநாதனுக்கும், நாடகத்துறைக்கான விருது சிக்கோ அவர்களுக்கும் கிடைத்தது. பரிசு பெற்ற எழுத்தாளர்களை ஞானம் வாழ்த்தி மகிழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிறுகதை*

# உயிர்க்கசிவு

## ● சுதாராஜ்

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நேரத்தில் விடிகிறது. எப்போது வெளிக்கும் என்று வாசற்பக்கமே பார்த்துக் கொண்டு கிடப்பாள் அம்மா. சில இரவுகள் நேரத்தைக் கடத்திக்கொண்டு போவதுண்டு. நித்திரையின்றிப் புரள்வதைவிட எழுந்து உட்காரவேண்டும் போலிருக்கும். அல்லது ஹோலுக்குள்ளேயே இங்குமங்கும் நடக்கலாம். ஆனால், சாமத்தில் எழுந்து நடந்து திரிந்தால் மகன் ஏசுவான்.

''என்னம்மா இது?... ராவிருட்டியில?... பிள்ளையள் பயப்பிடப்போகுது... படுங்கோ!''

அம்மாவுக்கு வயதுபோய்விட்டது. கிழவி. யார் என்ன சொன்னாலும் கேட்கத்தான் வேண்டும்.

குளிரடித்தது. போர்வைக்குள் உறக்கத்தை இழுத்து மூடிக்கொண்டு படுப்பதற்கு அம்மா மிகவும் பிரயத்தனப்பட்டாள். விழிப்பு போர்வையை விலக்கி விலக்கி வெளியே வர எத்தனித்தது. யன்னல்களைப் பூட்டிவைத்தாலும் குளிர்காற்று ஹோலுக்குள் இலகுவாகப் புகுந்து விடுகிறது. சிறிய வீடு. இரண்டு சிறிய அறைகள். ஒரு அறையில் பேரப்பிள்ளைகள் படுக்கிறார்கள். மற்றதில் மகனும் மருமகளும். அதனால் அம்மாவின் படுக்கை ஹோலுக்கே வந்துவிட்டது.

உறக்கத்துக்கும் விழிப்புக்குமிடையிலான இழுபறியில் ஓரளவு கண்தூங்கும் வேளையிற்தான் அந்தக்குருவியின் குரல் கேட்கும் நிலம் விடியாத அதிகாலையிலேயே வந்திருந்து பாடும் குருவி! வெளியே இழை விரித்து நிற்கும் மரத்துக்கு நாட் தவறாது வந்துவிடும்.

யன்னலூடு சற்று வெளிப்புத் தெரிந்தது.

அம்மா ஒரு கையை நிலத்திலூன்றி மறு கையால் பக்கத்திலிருந்த கதிரையை பிடித்தவாறு மெல்ல எழுந்தாள். படுக்கையை ஒரு பக்கமாக எடுத்து வைத்தாள். பின்னர் சுவரோரமாக இருக்கும் தனது கதிரையிற் போய் அமர்ந்து கொண்டாள்.

அது தனிக்கதிரை பழசு. கணவர் இருந்தபோது வாங்கியது. எழுபதாம் ஆண்டு கொழும்பில் இந்த வீட்டை வாங்கியபோதே ஒரு செற் பின்னல் கதிரைகளையும் வாங்கிப் போட்டார் கணவர். சோடிக்கதிரைகள் உடைந்து தொட்டம் தொட்டமாகப் போய்ச் சேர்ந்து விட்டன. இதையும் அப்புறப்படுத்தித் தூக்கிப் போடும் முயற்சி வீட்டில் பல தடவை மேற்கொள்ளப்பட்டது. அம்மா விடவில்லை கெஞ்சாத குறையாக மகனிடம் சொன்னாள்; ''இந்தக் கதிரையாவது அவற்றை நினைவாய் இருக்கட்டும் தம்பி!''

கதிரைச்சட்டம் உடைந் தாலோ, பின்னல் பிரிந்தாலோ மகனிடம் கூறித் திருத்த எடுத்துக் கொள்வாள் அம்மா. மகனும், 'அது அம்மாவின்ர விருப்பப்படி ஒரு பக்கமாக இருக்கட்டும்! என மனைவியிடம் சமாதானம் சொல்லிக் கொள்வான். ஆனால் அது இந்த வீட்டில் இருப்பதற்குத் தகுதியற்றது போல ஒரு மூலையில் வைக்கப் பட்டிருக்கிறது. யாராவது நண்பர்கள் வீட்டிற்கு வருகிறார்கள் என்றால், அம்மாவுக்கும் சொல்லாமல் கொள்ளாமல் கதிரை மறைக்கப்பட்டுவிடும். பிறகு, வந்தவர்கள் போனதும் தான் அந்த ஆசனம் கிடைக்கும்.

அம்மா கதிரையிலிருந்தவாறே கைகளை உயர்த்தி அலுப்பு முறித்தாள். காலையில் எழுந்ததும் பாத்றூம் அலுவல்களை முடித்துக் குளித்துவிடவேண்டும் போலிருக்கும். ஆனால் இப்போது போய் பாத்றூமை அடைத்துக்கொள்ள முடியாது. மகனோ மருமகளோ எந்த நேரத்திலும் எழுந்து வரலாம். பிறகு சத்தம் போடுவார்கள்.

'வீட்டில் கிடக்கிற உங்களுக்கு இப்ப என்ன அவசரம்?'

பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் எழுந்து அலுவல்களை முடித்துப் புறப்படும் வரை அந்தச் சுவரோரக் கதிரைதான் அம்மாவுக்குத் தஞ்சம்.

குருவி குரலின் தொனியை மாற்றி மாற்றிப் பாடும் இனிமையை அம்மா கேட்டுக்கொண்டே இருப்பாள். நன்றாக இருள் விலகி விடியும் வரை அது அந்த இடத்தை விட்டுப் போகாது. அதன் குரல் அம்மாவின் மன உணர்வுகளை சோகமாக மீட்டுவது போலிருக்கும் – கணவனை வேலைக்கு அனுப்பவேண்டும், பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பவேண்டும் என அதிகாலையில் எழுந்து இயங்கும் அந்த நாட்கள் நினைவுக்கு வரும். குருவியின் பாடலும் கணவரது நினைவும் வாசற்கதவு பக்கம் கண்களைத் திருப்பியது. வாசற்கதவு அழைப்பு மணியும் ஒரு குருவியின் கீச்சுக் குரலைப் போலவே ஒலிக்கும்.

அதைக் கணவர்தான் வாங்கிவந்து பொருத்தினார்.

ஏதாவது அலுவலாக வெளியே போய்விட்டு வரும் வேளைகளிலும், வேலை முடிந்து மாலையில் வரும் வேளைகளிலும் அதை மூன்று முறை அழுத்தி ஒலிக்கச் செய்வார். அம்மா என்ன அலுவல்களில் ஈடுபட்டிருந்தாலும் அதை அந்தப்படியே விட்டு ஓடிவந்து கதவைத் திறப்பாள். சில வேளைகளில் பிள்ளைகள் கதவைத் திறப்பதற்கு ஓடுவதுபோல விளையாட்டுக் காட்டி... பின்னர் அம்மாவுக்கு விட்டுக் கொடுத்து விடுவார்கள்.

மூன்று முறை அழைக்கும் குருவியின் குரல் – அதுதான் அவரது சமிக்ஞை – வாசற்கதவையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் அம்மா...

...எண்பத்திமூன்றாம் ஆண்டு ஜூலையில் ஒருநாள் காலையில் வேலைக்கு போன கணவர் திரும்ப வீடு வந்து சேரவில்லை. அன்றுதான் மோசமான இனக்கலவரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் வெடித்தது. அவருக்கு என்ன நேர்ந்திருக்கும் என முடிவு தெரியாத குழப்பத்திலேயே அம்மாவின் காலங்கள் போயிருக்கின்றன. இருபத்தைந்து வருடங்களாகியும் அந்த நினைவுகள் அம்மாவைச் சும்மா விடுவதாயில்லை. எங்கு போனாலும் வந்தாலும் இருந்தாலும் புரண்டாலும் அவை சுற்றிச் சுற்றி வருகின்றன.

அன்றைய தினம் மாலை நேரம் அம்மா எவ்வளவு பயத்துடனும் பதட்டத்துடனும் வாசலைப் பார்த்துப் பார்த்து நின்றாள். வருவாரா... வருவாரா... எப்போது வருவார்? அவர் அப்போது வரவே இல்லை. நடக்கிற கோரங்கள் பற்றிய செய்திகள் அவை தரும் நடுக்கம்... பிள்ளைகளின் பாதுகாப்பு பற்றிய பயம் அவருக்கு என்ன நேர்ந்தது? ஏன் இன்னும் வரலில்லை? பொழுதும் பட்டுக் கொண்டிருந்தது. அயல் வீட்டு நண்பர் பியதாச வந்து வற்புறுத்தினார்; 'நிலைமை மோசம்... இனியும் இங்க இருக்கிறது நல்லதில்ல... வாங்க! எங்கட வீட்டுக்குப் போயிடலாம்?

'கொஞ்சம் பொறுங்க பியதாச அய்யா!... அவர் எப்பிடியும் வந்திடுவார்!'

'உங்கட பாதுகாப்பு முக்கியமில்லையா? பிள்ளையள நினைச்சுப் பாத்தீங்களா?... வாங்க!'

நடுங்கியபடி வீட்டுக்குள் பதுங்கியிருக்கும் பிள்ளைகளை எண்ணி பியதாசவுடன் அவரது வீட்டுக்கு போனாள் அம்மா. வீட்டைப் பூட்டிவிட்டுப் போவதா, திறந்துவிட்டுப் போவதா என்பதே குழப்பமாயிருந்தது. பியதாசதான் சொன்னார்; 'பூட்டியிட்டு வாங்க!. மண்கொள்ளை அடிச்சிடுவாங்கள்!

வீட்டைப் பூட்டிவிட்டுப் போனது தவறோ?... அவர் வந்து தேடியிருப்பாரோ? எங்கெல்லாமோ தேடி அலைந்திருப்பாரோ?

'அவர் எங்கயும் போகமாட்டார். வீடு பூட்டியிருந்தால் இங்கதான் வருவார்!' – பியதாச ஆறுதல் கூறிக் கொண்டிருந்தார். ஆனால் அவர் அங்கும் வரவில்லை.

கலவரம் உக்கிரம் அடைந்ததும் பியதாச, அம்மாவையும் பிள்ளைகளையும் ஒருவாறு பாதுகாப்பாகக் கொண்டுபோய் பாதிக்கப்பட்டோர் முகாமில் சேர்த்துவிட்டார். அங்கிருந்து கப்பலில் ஏற்றப்பட்டு யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டது. நாட்டில் கலவரம் அடங்கியதும் திரும்ப கொழும்புக்கு வந்து சேர்ந்தது, கணவரைத் தேடி அவரது அலுவலகம், நண்பர்கள், இன்ன பிற இடங்கள் என விசாரித்து அலைந்து திரிந்தது எல்லாம் அம்மாவின் மனதில் மாறாத வடுக்களாக நோவெடுத்துக் கொண்டிருக்கின்றன. அந்தக் கொடுமைகளைப்பற்றி யாருடனாவது பேசவேண்டும். கணவரின் நினைவுகளைப் பற்றி கதைக்கவேண்டும் போலிருக்கும். யாராவது அவரைப் பற்றிய ஏதாவது தகவலையேனும் தரமாட்டார்களா என மனது அங்கலாய்க்கிறது. சிலர் ஒவ்வொருவிதமான கதைகளைச் சொல்லி அம்மாவின் மனதைக் கிண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். 'அவரை அடிச்சுக் கொண்டிருப்பாங்கள், சுட்டுக் கொழுத்தியிருப்பாங்கள்!' என்றெல்லாம் வாய்கூசாமல் கூறுகிறார்கள். 'ஐயோ அப்பிடிச் சொல்லாதையுங்கோ!' என அம்மா காதுகளைப் பொத்திக்கொள்வாள்.

கணவன் காணாமற்போன அந்த நாட்களில் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கவேண்டுமென்ற உறுதியும் பயமும் தான் அம்மாவின் மனதிலிருந்தது. அப்போதெல்லாம் அம்மா யாருடனும் அதிகம் பேசுவதுமில்லை. கணவரின் பிரிவாற்றாமையை ஒரு விரதம்போல் நெஞ்சில் சுமந்துகொண்டு பிள்ளைகளின் வளர்ச்சியில் கவனம் செலுத்தினாள். அம்மாவின் மூத்த சகோதரர் மிக உதவியாக இருந்தார். அவரது பண உதவியுடனும் தையல் வேலைகள் போன்ற அம்மாவாலான சிறுசிறு சம்பாத்தியங்களுடனும் கஷ்டங்களுக்கும் கவலைகளுக்குமூடாக காலங்கள் போயின.

இப்போது வயதின் தளர்ச்சியும் தனிமையுணர்வும் தான் அம்மாவின் போக்கையும் கோலத்தையும் மாற்றிவிட்டன.

அம்மாவின் மூத்தமகள், கனடாவுக்குக் குடிபெயர்ந்து விட்டாள் – அண்ணர் தனது மகனுக்கே அவளை மணமுடித்து வைத்தார். அம்மாவை வந்து தங்களுடன் இருக்கும்படி பிள்ளைகள் கேட்பதுண்டு. ஆனால் அம்மாவுக்குக் கொழும்பை விட்டுப் போகும் உத்தேசம் இல்லை. அது என்னவோ, அவரோடு இருந்து வாழ்ந்த இந்த வீட்டை விட்டுப் போக மனமுமில்லை – இரண்டாவது மகனுடன் கொழும்பிலேயே தங்கிவிட்டாள்.

குருவியின் கீதம் யாரையோ அழைப்பதுபோன்ற உணர்வைத் தரும். எழுந்துபோய் கதவைத் திறந்தாள். மரக்கிழைகளில் மாறி மாறி இருந்து அங்குமிங்கும் திரும்பித் திரும்பி பார்த்தவாறு கத்திக்கொண்டிருந்தது. இந்த அதிகாலையில் வந்து யாரைத் தேடுகிறதோ?

''என்னம்மா இது? விடிய வெள்ளன? வெளியில குளிர்காத்துக்கை நிண்டு வருத்தத்தைத் துவக்கிறதுக்கா? உள்ளுக்கு வந்து இருங்கோ!'' – மகனது சத்தத்தில் திரும்பக் கதிரைக்கு வந்தாள் அம்மா. மகன் தனக்காக இரக்கப்படுகிறவன் என்பதும் தெரியும். சில வேளைகளில் தேற்றுவது போலவும் கூறுவான்.

''எந்த நேரமும் அப்பாவையே நினைச்சுக் கொண்டிராமல் ஆறுதலாய் சந்தோஷமாய் இருங்கோ அம்மா! அப்பா உயிரோட இருந்தால் இவ்வளவு நாளும் வராமல் இருப்பாரே?'' இந்தக் கேள்வி அம்மாவைப் போட்டுக் குடைந்து எடுத்திருக்கிறது. ஒரு முறையல்ல பலமுறை... பல நாட்கள்... பல வருடங்கள் ஒருவேளை அப்படியும் நேர்ந்திருக்குமோ? அந்தக் கடைசி நேரத்தில் அவர் யாரை நினைத்திருப்பார்? எப்படி அவலப்பட்டிருப்பார்? எனினும் சட்டென மனதை மாற்றிக்கொள்வாள் – அவர் இறந்திருப்பார் என்பதை அம்மாவால் ஒத்துக்கொள்ள முடியவில்லை.

காணாமல் போனவர்களைக் கண்டுபிடித்துக் கொடுப்பதற்கு ஒரு குழு அமைத்திருப்பதாக சில செய்திகளை அம்மா பத்திரிகைகளிற் பார்த்திருக்கிறாள். மகனிடம் இந்த விஷயத்தை கேட்டாள்.

'மெய்யேடா தம்பி! காணாமல் போனவையைக் கண்டுபிடிச்சுக் குடுக்கிறதுக்கு ஒரு குழு இருக்காம்! அவையிட்டைப் போய்ச் சொல்லுவமே? அப்பாவைத் தேடித் தருவினமே?'

மகன் சினந்து விழுந்தான்; 'உங்களுக்கு என்னம்மா விசரே? எண்பத்தி மூண்டாம் ஆண்டு காணாமல் போனவரைப் பற்றி இப்ப போய்க் கேட்கலாமா?'

'இவன் ஒரு சுடுதண்ணி! ஒண்டும் கேக்கேலாது!' என அம்மா மனதுக்குள் நொந்து கொண்டாள்.

''கிறான்ட்மா!'' சடுதியான சத்தத்தில் திடுக்குற்று அம்மா கனவுகள் கலைந்தாள். பேரப்பிள்ளைகள் எழுந்துவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு உறக்கத்திலிருந்து விழித்துவிட்டது. ஏற்கனவே எழுந்த மகன் உடுப்புகள் கழுவும் அலுவலில் ஈடுபட்டிருந்தான். காலையில் எழுந்ததும் முதல் அலுவலாக வீட்டில் எல்லாருடைய உடைகளையும் கழுவுவது அவன் வேலை. மருமகள் சமையல் வேலையைக் கவனித்துக்கொண்டும் பிள்ளைகளை அதட்டிக்கொண்டும் இருந்தாள்... 'பிறஷ் பண்ணுங்க!... குளியுங்கோ!... நேரம் போகுது!'

'வேலைக்குப் போகிறவள்... பாவம், விடிய வெள்ளன எழும்பிக் குசினியில் கஷ்டப்படவேண்டியிருக்கு' என அம்மா தனக்குள்ளே நினைத்துக் கொள்வாள். ஏதாவது கூடமாட உதவிசெய்யலாமென்றால் அது மருமகளுக்கு ஒத்துவராது. 'நான் செய்யிறன்... நீங்கள் போய் உங்கட பாட்டில இருங்கோ!' என்று முகத்துக்கே சொல்லிவிடுவான்.

அம்மா தனது பாட்டிற்தான் இருக்கிறாள் – ஒரு பக்கத்திற் தூக்கிப் போடப்பட்ட பழைய கதிரையைப் போல, நெஞ்சிற் கவலைச் சுமையுடன், இப்படியே இருந்து வீட்டில் நடக்கும் கூத்துக்களையெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பாள். ஏதாவது ஞாயம் நீதி பேசப்போனால் பொல்லாப்பு வந்துவிடும் –

மகன் பாத்றூமிலிருந்து மனைவியை அழைக்கும் குரல் கேட்டது. மருமகள் ஏனென்றும் கேட்காமல் சமையல் வேலையிலிருந்தாள். அவனுக்குச் சன்னதம் வந்துவிட்டது. வெளியே வந்து கத்தத் தொடங்கிவிட்டான்.

"இவ்வளவு நேரமும் கூப்பிடுறன். உமக்குக் கேட்கவில்லையா?"

"நான் என்ன இஞ்ச சும்மாவா நிக்கிறன்?" பாத்திரங்கள் தடாங் புடாங் என அடிபட்டன. மகனது சத்தம் வீடு கொள்ளாது உச்சத்தை எட்டியது. பிள்ளைகள் மிரண்டு ஒதுங்கினார்கள். மருமகள் விடுவிடென வெளியே வந்து உடைகொழுவிகளை எடுத்துவந்து கணவனுக்கு முன்னே போட்டாள்.

"இந்தாங்கோ! இதுக்குத்தானே கத்துறியள்?... போய் எடுக்கேலாதா?... இதுக்கும் நான்தானா வேணும்?" அந்தக் கையுடன் பிள்ளைகளின் முதுகில் 'படார் படார் என இரண்டு போடு போட்டாள்; விடுப்புப் பார்த்துக்கொண்டு நிக்காமல் போய் குளியுங்கோ!"

அம்மா விடுப்புப் பார்ப்பதில்லை. எதையும் கண்டும் காணாதவள் போலத்தான் இருப்பாள். கவலையாயிருந்தது. 'இவன் சரியான கொதியன்!' என மகன்மேல் கோபமும் ஏற்பட்டது. 'அந்தாள் ஒருநாள் கூட சத்தம் போட்டு அறியமாட்டன்!' எது நடந்தாலும் அதில் கணவனின் நினைவும் சேர்ந்துவிடுவது அம்மாவுக்குத் தவிர்க்கமுடியாததாயிருந்தது.

சமையல் வேலைகளை முடித்துக்கொண்டு, மருமகள் நடந்து நடந்தே பிள்ளைகளுக்கு சாப்பாடு ஊட்டிவிட்டாள். அவர்களுக்கு வாய் கழுவிவிட்டு, உடை அணிவித்து, தானும் ஆயத்தமாகிக்கொண்டு அவரவர் சாப்பாட்டுப் பார்சல்களுடன் வெளிக்கிட்டார்கள்.

அம்மா பார்த்துக்கொண்டே இருந்தாள்.

காலையில் ஏற்பட்ட கொதிப்பினால் முகங்கள் வெதும்பிப் போய் வேறு வேறு பக்கங்களிற் திருப்பிக் கொண்டு போனார்கள். 'போயிட்டு வாறமம்மா... கவனமாய் இருங்கோ!' என மகனோ மருமகளோ கூறிவிட்டுப் போவதுண்டு. இன்று ஒரு மூச்சுப் பேச்சும் இல்லை. ஒருதரம் திரும்பிப் பார்த்துவிட்டுப் போனாலாவது ஆறுதலாயிருக்கும்; 'நான் என்ன செய்தன்? ஏன் என்மேல் கோபத்தைக் காட்டிக்கொண்டு போகினம்?

வேறு வேறு ஆட்களைப்போலப் போனாலும் எல்லாரும் ஒரு காரில்தானே போகப் போகிறார்கள் என அம்மா கொஞ்சம் ஆறுதலடைந்தாள். பிள்ளைகளை ஸ்கூலில் இறக்கிவிட்டு, பின்னர் மனைவியையும் அலுவலகத்தில் விட்டு மகன் தனது ஒபீசுக்குப் போவான். பிள்ளைகள் ஸ்கூல் முடிந்ததும் ஒட்டோவில் வந்து சேரும் ஒழுங்கு உண்டு. மாலையில் கணவனும் மனைவியுமாகச் சேர்ந்து வருவார்கள். முகங்களை உம்மென்று வைத்துக்கொண்டு போனாலும் மாலையில் சிரித்துப் பேசி, கல கலப்பாக வருவார்கள்; இது அவ்வப்போது நடக்கிற சங்கதிதானென்றாலும் அவர்கள் வாய்க்கு வாய் ஏச்சுப்படுவதைப் பார்க்கும்போதெல்லாம் அம்மாவுக்கு நடுக்கம் தான் ஏற்படுகிறது.



அம்மா கதிரையை விட்டு எழுந்து பாத்றூம் பக்கம் போனாள். குளித்து வந்து சாமி கும்பிட்டாள். கணவரை நினைத்து வணங்கினாள். வெளியே வந்து சமையற் கட்டுப் பக்கம் போனாள். பிறகு வந்த விஷயத்தை மறந்து வாசலிலே நின்று யோசித் தாள். மீண்டும் கதிரைக்கு வந்தாள். இனி, பிள்ளைகள் திரும்ப வரும்வரை அம்மா வுக்கு வீடும் தனிமையும் தான்.

யாருமின்றி வீட்டி லிருக்க அம்மாவுக்குப் பயம். அடிக்கடி யன்னலூடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே எட்டிப் பார்ப்பாள். யாரைப் பார்க்கிறாள், எதற்காகப் பார்க்கிறாள் என்பது அம்மாவுக்கே தெரியாது. யோசித்து யோசித்து நிற்பாள். பிறகு, ஒன்றும் புத்திக்கு எட்டாமல் வந்து கதிரையில் அமர்வாள்.

அம்மா வெளியே எங்கும் போவதில்லை. யாருமில்லாமல் வீட்டை விட்டுப் போகக்கூடாது என எச்சரிக்கையாயிருப்பாள். மகனும் கட்டுப்பாடு போட்டிருக்கிறான் – 'வெளியில எங்கயும் போகவேண்டாம்! வெளியில போய் தேவையில்லாத கதைகள் அலட்டாமல் வீட்டோட இருங்கோ! அம்மாவுக்குத் தெரியும். கணவரைப் பற்றிய கதைகளைப் பேசுவதைத்தான் மகன் அலட்டுவது எனக் குறிப்பிடுகிறான்.

சிலவேளைகளில் மகன் ஒபீசிலிருந்து ரெலிபோன் எடுத்துக் கேட்பான்; அம்மா எப்பிடி இருக்கிறீங்கள்?"

"எப்பிடியோ? அப்பிடித்தான் தம்பி இருக்கிறன்!" அம்மா 'டக்' கென ரெலிபோனை வைத்துவிடுவாள். அம்மா ரெலிபோனில் கதைப்பதையெல்லாம் விட்டுவிட்டாள் – ரெலிபோன் பில் கூடுகிறதாம்! போகும் போது அதை 'லொக்' பண்ணி விட்டுப் போவார்கள். அம்மாவுக்கு வேதனையா யிருக்கும் எல்லாத்துக்கும் என்னில பழி போடுகினம்?'

அம்மாவுக்கு வயிறு புகைந்தது. 'எட! சாப்பிட வெல்லோ குசினிக்குப் போனனான்... பிறகு அயத்துப்போய் வந்திட்டன்! நான் சரியான விசரிதான்" – அம்மா இப்படித் தனக்குத் தானே பேசிக்கொள்வதுண்டுதான். பல தடவைகளில் பேரப் பிள்ளைகளே கேட்டிருக்கிறார்கள்.

"என்ன கிறான்ட்மா... ஆரோட கதைக்கிறீங்கள்?"

"உங்களோடதான்!..." அம்மா சமாளித்துவிடுவாள். பிள்ளைகள் ஸ்கூல் விட்டு வர இரண்டு மணியாகும். அவர்கள் வந்தால் கொஞ்சம் பிராக்காக இருக்கலாம்.

எழுந்து குசினிப்பக்கம் போனாள். அம்மாவின் கோப்பையில் சாப்பாடு போட்டு மூடி வைக்கப்பட்டிருந்தது. அதை எடுத்துக்கொண்டு திரும்பவும் கதிரைக்கே வந்தாள். மெல்ல மெல்ல மென்று மென்று சாப்பிடத் தொடங்கினாள். சாப்பிடுவதும் யோசிப்பதுமாக குறிப்பிட்டளவு நேரம் கடந்தது.

இனி என்ன செய்வது? பழைய பத்திரிகைகளை எடுத்து அந்தப் பக்கமும் இந்தப் பக்கமுமாகப் புரட்டினாள். எதையாவது வாசிப்பதா அல்லது வாசிக்கவேண்டுமா என்றும் தோன்றவில்லை. காணாமல் போனவர்களைப் பற்றிய செய்திகள் தென்பட்டால் அதைப் பிடித்துக்கொள்வாள். மீண்டும் மீண்டும் வாசிப்பாள். அவர்கள் திரும்பக் கிடைத்து விட்டார்களா என அறிய அடுத்தநாட் பத்திரிகைச் செய்திகளைத் தேடிப் பார்ப்பாள்.

பத்துப் பதினொரு மணிக்கு ஸ்விச் போட்டது போல அம்மாவுக்கு நினைவு வந்து விடும் – கணவரின் உடைகளை கழுவவேண்டும். முன்னர் கணவர் அலுவலகத்துக்குப் போகும் நாட்களில், அவருக்கு அடுத்தநாட் தேவையான உடைகளைக் கழுவி வைப்பது வழக்கம். அது இப்போதும் தொடர்கிறது! அம்மாவின் பெட்டியில் கணவரது சில உடைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் சிலதை எடுத்துக் கழுவி உலர்த்தி அயன் செய்து வைப்பாள். அதில் ஒருவித திருப்தி. உடைகளைக் கழுவும்போது சில சமயங்களில் கண்கள் கசிந்து கண்ணீர் அவற்றின் மேல் விழுந்து கரையும். கழுவி உலர்த்திய ஆடைகளை தனது கைகளாலேயே தடவித் தடவி அயன் செய்வாள் அம்மா. எலக்றிக் அயன் பாவிப்பதால் நிறைய கரண்ட் செலவாகிறதாம் – அதனால் அம்மாவின் இந்தத் தேவையில்லாத வேலைகளுக்கெல்லாம் அயனைப் பாவிக்கக்கூடாது என தடை போட்டுவிட்டான் மகன்.

கணவரின் சேர்ட் ஒன்றைக் கழுவி எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள் அம்மா. வெளியே போட்டால் பிள்ளைகள் வருவதற்கு முதல் வெளியில் வெயிலில் காய்ந்துவிடும் – எடுத்துவிடலாம்... எல்லாத்துக்கும் பயப்பட வேண்டியிருக்கு! என மனது அலுத்துக் கொண்டது.

கதவைத் திறந்து வெளியே வந்தபோது யாரோ 'சீக்கா' அடித்து அழைப்பது போல கீச்சிடும் குரல். அம்மா நிமிர்ந்து பார்த்தாள்.

குருவி! மரக்கிழையிலிருந்தது. தொனியை மாற்றி வேறு ஒரு குரலில் விசிலடித்தது!

"சிட்டுக்குருவி... சிட்டுக்குருவி... சேதி தெரியுமா என்னை விட்டுப் பிரிந்து போன கணவர் வீடு திரும்பல்லே..."

சட்டென அம்மாவுக்கு அந்தப் பாட்டு வந்தது. குரலெடுத்துப் பாடினாள். மனம் கசிந்தது. தொண்டை நோவெடுத்து அடைத்தது. விக்கித்தது. விசும்பி அழுதாள். அது கணவரை நினைத்தா அல்லது தனது நிலைமையை நினைத்தா என்றும் புரியவில்லை.

மனசு லயித்துப் பாடக்கூடிய நிலைமையிலா நான் இருக்கிறேன்? – பாடக்கூடாது' என மௌனித்தாள். ஆனால் அந்தப் பாட்டு திரும்பத் திரும்ப மனதை உலைத்தது. வீட்டுக்குள்ளே எங்கு உலாத்தினாலும்... கதிரையிற் போய் அமர்ந்தாலும்... அந்தப்பாட்டு அம்மாவை விட்ட பாடில்லை. திரும்பவும் வாய் அசைந்து பாடியது... "சிட்டுக்குருவி... சிட்டுக்குருவி... சேதி தெரியுமா என்னை விட்டுப் பிரிந்து போன கணவர் வீடு திரும்பல்லே..."

'உங்களைத் திருத்தேலாது!' என மகன் அடிக்கடி கூறுவான். அதுதான் இப்போது அம்மாவுக்கு நினைவு வந்தது. 'இது திருத்தமுடியாத கேஸ்தான்!' அம்மா தன் பாட்டிற் சொல்லி தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

அம்மாவை ஒருமுறை மனநல வைத்தியரிடம் அழைத்துச் சென்றார்கள் மகனும் மருமகளும். வைத்தியரம்மா பல கதைகளையும் விடுத்து விடுத்துக் கேட்டார். அம்மாவும் சந்தர்ப்பம் வாய்த்ததுபோல, தனது கவலைகளையெல்லாம் சொன்னாள். கணவரைப்பற்றிய ஒவ்வொரு நினைவுகளையும் கூறினாள். அவர் திரும்ப வராமற் போன நாள்... தான் அடைந்த பயம்... பதட்டம்... துடிப்பு... அம்மாவுக்கு அழுகை உடைந்து வந்தது. அப்படி ஒருபோதும் அம்மா உரத்து அழுததில்லை.

'விசரி... விசரி... என்று சொல்லுகினம். இந்த விசர் அம்மாதான் இவையளை வளர்த்து ஆளாக்கினது!'

'உங்களுக்கு ஒன்று மில்லையம்மா!... நல்லாய்த் தான் இருக்கிறீங்கள்!' என டொக்டரம்மா கூறினார்; "நான் உங்களை அடிக்கடி வந்து பார்ப்பன்... கவலைப்படாதையுங்கோ!" அம்மாவுடன் எப்படி அனுசரித்து பழகவேண்டுமென பிள்ளைகளுக்கு ஆலோசனை வழங்கினார். அதெல்லாம் பழைய கதை. அதை அவர்கள் ஒரு பொருட்டாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்திருப்பார்களோ தெரியாது. அதுபற்றி அம்மாவுக்குக் கரிசனையும் இல்லை. டொக்டரம்மாவும் பிறகு இரண்டொருதரம் வந்து கதைத்து ஆறுதல் கூறிவிட்டுப்போனார். பிறகு வருவதுமில்லை.

கிறான்ட்மா! – பேரப்பிள்ளைகள் ஸ்கூல் விட்டு வந்து விட்டார்கள். அம்மாவுக்கு அடைபட்டுக்கொண்டிருந்த மூச்சு விடுபட்டு வந்தது போலிருந்தது.

"வாங்கோடி! வாங்கோ!... என்ர செல்லங்கள்!" ஒவ்வொருவராக உடை மாற்றி அவர்களைச் சாப்பிடச் செய்தாள். அவர்களது விளையாட்டுக்களையும் குழப்படிகளையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதே அம்மாவுக்கு நல்ல பிராக்காக இருக்கும். பேரப்பிள்ளைகளின் துள்ளல்களும், 'கிறான்ட்மா!' என அழைக்கும் கொஞ்சும் குரல்களும் அம்மாவின் நோகும் மன உணர்வுகளுக்கு ஒத்தடம் கொடுத்து ஆற்றுவது போலிருக்கும். அப்போதும் கணவரின் நினைவுதான் முன்னுக்கு வரும் – "அவருக்கு இதுகளையெல்லாம் பார்க்கப் குடுத்து வைக்கயில்லையே!" என மனம் உளைச்சல் எடுக்கும்.

அப்போது அந்தக் குருவியின் குரல்!

மூன்று முறை ஒலிக்கும் அழைப்பு மணி!

அம்மா திடுதிப்பென்று எழுந்தாள். விழுந்தடித்துக் கொண்டு ஓடினாள். பிள்ளைகள் போய் திறப்பதற்கு முன்னர் தானே முந்திக்கொண்டு வாசற் கதவடிக்கு ஓடினாள். நெஞ்சு படபடத்தது. கைகள் தடுமாறிக் கொண்டே கதவைத் திறந்தாள்.

"என்னம்மா...? மனுசன் வந்திட்டாரென்று நினைச்சீங்களோ?" – மருமகள் ஒரு நமட்டுச் சிரிப்புடன் உள் நுழைந்தாள். பின்னே மகன் வந்தான்.

மருமகளும் எப்போதாவது இப்படி விளையாட்டுக் காட்டுவதுண்டு அப்படி எத்தனைமுறை ஏமாந்து போனாலும் அந்த அழைப்பு மணியின் சமிக்ஞை ஒலி கேட்டதும், அது கணவராக இருக்குமோ என்ற அங்கலாய்ப்புடன்தான் ஓடிச்சென்று கதவைத் திறக்கிறாள் அம்மா.



கல்லா தெனதருமைக் காலங்கள் போயினவென்
றெல்லோரும் என்னை இகழ்ந்தாரே! – கல்லானாய்
வாழ்ந்தே மடிவதுதான் வல்விதியோ மூடனெனச்
சூழ்ந்ததெல் லாமே துயர்.

அள்ளிக் கொடுப்பதற்கு ஆகும் பொருளிருந்தும்
நல்ல மனமின்றி நாட்கழித்தேன் – உள்ள
நிலைக்காத செல்வங்கள் நிம்மதியை நீக்கித்
தொலைத்ததே நெஞ்சச் சுகம்

கண்ணின்றிக் காலின்றிக் காப்பதற்கோர் ஆளின்றி
மண்ணிற் பிறந்தோர்க்கு வாழ்வளிக்க – இன்னமும் நான்
அன்பாய் ஒரு வார்த்தையேனும் அளித்ததில்லை
என் சோகப் பாடல் இது!

வாழ்க்கை நெறிதவறி வாழ்விற் சுவையிழந்து
காழ்ப்புற் றலைவோர்க்குக் கைகொடுத்துத் – தூக்கிவிட
என்று நினைத்தேன் நான்? எல்லாம் சுயநலமே
அன்றிப் பிறிதொன்றும் இல்.

கண்ணில் ஒளிகுறைந்து காலும் நடைமறந்து
திண்மை உடல்சுடத் தேய்ந்ததுவே! – பின்னாலே
கூற்றுவனும் என்னுயிரைக் கொண்டு செல்ல வந்திடுவான்
மாற்றார்க்கும் வேண்டாமென் வாழ்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமராட்சி நாடகப் பாரம்பரியம் சில அனுபவக் குறிப்புகள்...

- வதிரி-சி. ரவீந்திரன்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

அம்பலத்தாடிகளின் 'கந்தன் கருணை' மிகப் பிரமாண்டமான நாடகமாக வடபகுதியில் அரங்கேறியது. தீண்டாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்த நாடகமாகும். இந்நாடகத்தை பத்தண்ணா தயாரித்தளித்தார். இந் நாடகத்தின் கதைக்கருவை எழுதியவர் எழுத்தாளர் N. ரகுநாதன் அவர்கள். அரங்க அமைப்பு, ஒளியமைப்பு, ஒலியமைப்பு, ஆடைகள், இசையமைப்பு, இவற்றுடன் ஒப்பனையும் பாராட்டக்கூடியதாகவிருந்தது. இந்நாடகத்தை மூன்று தடவைக்கு மேல் பார்த்து மகிழ்வடைந்தேன். காத்தான் மெட்டிலமைந்த பாடலாகும். உடுக்கடியுடன் நாடகம் மிகப்பிரமாதமாகவிருந்தது.

பாரதத்தின் எல்லையிலே வள்ளிநாயகி – எங்கள்
வள்ளிநாயகி போனாவாம் புயலாக – என்ற பாடலும்

மந்தி மறைக்குதய்யோ வாசலிலே குந்தியிருந்து
வாலில்லாத மந்தி மறைக்குதல்லோ
வாலில்லாத மந்தியைப் பார்த்து
சந்தி சிரிக்குதல்லோ – என்ற பாடலும் நினைவுகளுடன் சங்கமிக்கின்றன. இந்நாடகத்தின் முக்கிய பாத்திரமான நாரதர் பாடல்களாலும், நடிப்பாலும் பாராட்டைப் பெற்றவர். முருகனாக நடித்த கோ. லோகநேசனும் நன்றாகவே நடித்தார். முருகனும் வள்ளியும் தோன்றும் காட்சி தேவலோகத்து காட்சியமைப்பை சினிமாவில் காட்டுவதுபோல அமைந்திருந்தது. இந்நாடக ஒத்திகைகளுக்கு கோ. லோகநேசனுடன் நானும் பலமுறை சென்றிருந்தேன். இந்நாடகம் கொழும்பில் வேறு கலைஞர்கள் நடித்ததாகத் தகவல்கள் உண்டு. இதே காலத்தில் 'நவீன அரிச்சந்திரா' என்ற நாடகத்தையும் பார்த்தேன். சந்திரமதி வேடமேற்று நடித்த ரகுபதி அருமையாகப் பாடி நடித்தது நினைவில் வந்து போகிறது. எழுபத்தெட்டு எண்பதுக்குள் யாழ்ப்பாணத்தில் அலிமா நாடகமே நான் கடைசியாகப் பார்த்த நாடகமாகும்.

நான் படித்த தேவரையாளி இந்துக்கல்லூரியில் நடைபெற்ற பாடசாலை நாடகங்களை அதிகமாகப் பார்த்துள்ளேன். அங்கும் சிறந்த நாடக அளிக்கைகள் இடம் பெற்றதை அவதானிக்க வேண்டும். 1963ம் ஆண்டிலிருந்து தான் அப்பாடசாலையின் பரிசளிப்புவிழா நாடகங்களைப் பார்க்க முடிந்தது. 1964ல் தான் அங்கு கல்வி கற்க ஆரம்பித்தேன். எனக்குப் பத்து வயது; நாடகமென்றாலே என்னை மறந்த நிலையில் ரசிப்பவன் அன்றும் இன்றும் இதே நிலைதான். நாடகம் பார்க்கும் ஆசையில் ஏச்சுக்கள் நிரம்ப வாங்கியிருக்கிறேன். டாக்டர் போஸ்ரர் என்ற நாடகம்; (இளவரசு) ஆழ்வாப்பிள்ளை ஆசிரியர் தயாரித்தளித்த நாடகம். மொழிபெயர்ப்பு நாடகமாகும். பாடசாலை மாணவர்களைப் பார்க்கும்போது பிரம்மிப்பாக இருந்தது. ஒவ்வொருவரும் விறுவிறுப்பாக நடித்தனர். போஸ்ரராக நடித்த விவேகானந்தன், மற்றும் மு. பாக்கியநாதன், கோ. லோகநேசன் ஆகியோரின் நடிப்பு மனதைக் கவர்ந்தது. அடுத்த வருடம் அருணகிரிநாதர் என்ற நாடகம் மேடையேறியது. இதனை கலாவினோதன் பெ. அண்ணாசாமி ஆசிரியர் தயாரித்தளித்திருந்தார். அருணகிரி நாதராக திருப்புகழ் நடித்திருந்தார். பாடல்களைப் பாடி நடித்தார். குஸ்டரோகியாக கோ. லோகநேசன் நடித்து மனங்களை கலங்கவைத்திருந்தார். இதனால் இவர் சிறந்த நடிகனாகவும் தெரிவு செய்யப்பட்டார். இவர் பற்றி முதலிலும் கூறியிருந்தேன். இதற்கடுத்தவருடம் இலங்கேஸ்வரன் என்ற நாடகத்தை பெ. அண்ணாசாமி ஆசிரியரே தயாரித்திருந்தார். ந. சுந்தரலிங்கம் மிகச் சிறப்பாக நடித்திருந்தார். இவருடன் பலர் நடித்திருந்தனர். இந் நாடகத்தை பின்பொரு தடவை நடிகமணி வி.வி. வைரமுத்து நடித்ததையும் பார்க்க முடிந்தது. 'வீரசிவாஜி' என்ற நாடகத்தில் சிறப்பாக நடித்தமை யால் இ. யோகராஜாவும் சிறந்த நடிகராகத் தெரிவு செய்யப்பட்டார். 'புதுமுகம் புஸ்பா' என்ற துப்பறியும் நாடகத்தில் புதியவர்களே பலர் நடித்திருந்தனர். தவராஜா, வேலும் மயிலும், தங்கராசா, தேவன் போன்ற மாணவர்கள் நடித்திருந்தனர். இப்பாடசாலையில் கலா வினோதன் பெ. அண்ணாசாமி, ஆழ்வாப்பிள்ளை ஆகிய இருவரும் கலைத்துறைக்கு தங்கள் பங்களிப்பை கணிசமான அளவு வழங்கியவர்கள். அண்ணா சாமி ஆசிரியர் பாடசாலை மாணவிகளை வைத்து நடனங்களை மேடையில் வழங்கியவர். மிகச் சிறப்பாக மாணவிகள் நடன நிகழ்ச்சிகளில் தங்கள் திறமைகளைக் காட்டி வைத்தனர். இங்குதான் செல்வராஜா ஆசிரியர், மகேஸ்வரன் – அமிர்தலிங்கம் ஆசிரியர்கள், காரை செ. சுந்தரம்பிள்ளை, ஜே. எஸ். கிறிஸ்ததாஸ் ஆசிரியர்களும் தங்கள் கலை வெளிப்பாட்டை வெளிக்காட்டியவர்கள். அவர்கள் பற்றி பின் குறிப்பிடுவேன்.

கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளைக்கு பல பரிசில்களையும் புகழாரங்களையும் பெற்றுக்கொடுத்த இடம் கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியாகத் தானிருக்கும். கவிதைப்போட்டிகள், சாகித்திய மண்டல விருதுகள் என்று 'தேவரையாளி இந்து' காலத்திலேயே கிடைத்தது. அவரது நாடகமுயற்சியும் இங்குதான் தொடங்கியது என நம்புகிறேன். பாடசாலை மாணவர்களை வைத்து 'தம்பி படிக்கிறான்' என்ற நாடகத்தை எழுதித் தயாரித்தார். இதில் மா. லக்சுமிகாந்தன் போன்றவர்கள் நடித்தார்கள். லக்சுமிகாந்தனே முக்கிய பாத்திரமாக நடித்தார். மிகப் பொருத்தமான பாத்திரத்தில் நடித்து பாராட்டுகளும் பெற்றார். சுந்தரம்பிள்ளையின் அரங்க ஆற்றுகையாக இதுவே முதலாவதாக இருக்கலாம். அடுத்த வருடம் 'சாத்திரியார்' என்ற நாடகத்தை தயாரித்தார். இது கவிதை – இசை நாடகமாகும் இதில் வெள்ளிமலை, கோபால், கிருபானந்தன், புஸ்பராஜன் ஆகியோருடன் நானும் நடித்தேன். நகைச்சுவை நாடகம்; கவிதையும் – இசையும் சேர்ந்ததாக இருந்தது. சாத்திரத்தை பொதுவாக எடுத்துக் கூறுபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு ஏற்படும் பிரச்சனை, அதனை சாத்திரம் கூறுபவர் எப்படிச் சமாளிக்கிறார் என்பதுதான் கதையில் வரும் முக்கிய நிகழ்வாகும். இதுவே எனது முதல் மேடை நாடகமாகவும் அமைந்தது. இந் நாடகத்தை யாழ் திறந்த வெளியரங்கில் பௌர்ணமி நிகழ்விலும் நாங்கள் நடித்தோம். நவாலியூரானின் 'காலவாவி' நாடகப்பிரதியினை J.S.கிறிஸ்ததாஸ் ஆசிரியர் அவர்கள் எங்களை வைத்து பயிற்றுவித்து மேடையேற்றினார். அதில் குணசேகரன், ரூபானந்தன், புஸ்பராஜன் ஆகியோருடன் நானும் இன்னும் பலரும் நடித்தோம். நாடக நுணுக்கங்கள் பலவற்றை நவாலியூரானிடம் இருந்து பெற்றுக்கொண்ட திறனால் இவரும் நாடக முயற்சியில் ஈடுபட்டார். இதே பாடசாலையில் கலைஞானம் மிக்க ஒரு ஆசான் இருந்தார். மிகவும் அமைதியானவர். இவருக்குள் கலையாற்றல் உள்ளதா? என்று எண்ணும் அளவுக்கு வெளியில் எதுவும் பேசாத ஒரு கலைஜீவன் என்றே கூறவேண்டும். அவர்தான் த. செல்வராசா என்ற ஆசிரியர். இசை, நாடகம் பற்றி நன்றாக அறிந்து வைத்திருந்தார். மாணவிகளைத் தெரிவு செய்து நாடகங்களை மேடையேற்றுவார்(1964). ஒளவையார் என்ற நாடகத்தை தயாரித்தளித்தார். ஒளவையார் கணீரென்ற குரலில் பாடி நடித்தார். சுந்தராம்பாள் போன்ற குரலே எனது காதினுள் ஒலித்தது. அற்புதமான பாடகியாகும். ஒளவையாராக நடித்தவர் சந்திராதேவி என்ற மாணவியாவார். பின்பு இந்தக் குரலை அல்வாயில் நடைபெறும் நாடகங்களிலும் கேட்க முடிந்தது. அடுத்த வருடம் 'ஸ்ரீவள்ளி' என்ற நாடகத்தை தயார்செய்தார். வள்ளியாக இ. ஜீவரேகா சிறப்பாக நடித்தார். வள்ளி தினைப்புலத்திற்கு செல்லும் காட்சி ஞாபகத்தில் வருகிறது.

கொஞ்சும் கிளி குருவி மைனாவே; கூட்டமாய் இங்கே வராதே
சோ – சோ

என்ற பாடலை ஜீவரேகா அருமையாகப் பாடி நடித்தார். முருகனாக புஸ்பமலரும் நடித்தார். ஜீவரேகாவின் பாடலை பின்பு ஒரு முறை கவிஞர் மு. செல்லையாவின் முதலாவது நினைவு தினவிழாவில் கேட்க முடிந்தது. 'உன்னை நாம் காண்பதெங்கே – கவிஞரே' என்ற பாடலை அரங்கிலே மனமுருகிப் பாடினார். இதன்பின் கண்ணகி என்ற நாடகத்தைத் தயாரித்தார். கண்ணகியாக வ. யோகேஸ்வரி என்ற மாணவி நடித்தார். வீரமான பேச்சு மேடையை அதிரவைத்தது. செல்வராஜா ஆசிரியர் வாய் பேச முடியாதவர்களையும் வாய் பேச வைத்து நடிக்க வைப்பார். சிறந்த நாடக அறிவு மிக்க ஆசானான இவர். தனது திறமைகளை கல்லூரி நாடகங்களுடன் நிறுத்திக் கொண்டாலும் தேவரையாளி இந்துவின் நாடக வரலாற்றினை புரட்டிப்பார்க்கும்போது அவருக்கு தனி இடம் உண்டு என்பதை மறக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மையாகும். கல்லூரி அதிபர் மூ.சி. சீனித்தம்பி அவர்களால் 1972ல் 'சித்தார்த்தர்' என்ற வார்த்தைகளற்ற நாடகமும் பாடசாலை மாணவிகளால் மேடையேற்றப்பட்டது. இந்நாடகமே நாடக வரலாற்றில் வார்த்தைகளற்ற நாடகமாக மேடையேறிய நாடகமாகலாம். இதற்குப் பின் 'அசோகா' என்ற நாடகத்தை திருமறைக் கலாமன்றத்தினர் 1992ல் மேடையேற்றியதைப் பார்த்தேன். சித்தார்த்தர் நாடகத்தில் ஆ. கபிலவதி, கே. லோகராணி, சு. புனிதசிகாமணி, கா. சிவராணி எனப் பலர் நடித்தனர். புத்தபகவானின் பிறப்பு – யோகம் – ஞானம் என்பவற்றை சித்தரித்தது. நாடக மாந்தர்கள் நடிக்கும்போது வசனங்கள் ஒலியாக பேசப்பட்டு காட்சிப்படுத்தப்படும். இந்நாடகம் யாழ் நகரிலும் மேடையேற்றப்பட்டது. இப்பாடசாலையில் வே. அமிர்தலிங்கம் – வே. மகேஸ்வரன் எனும் ஆசிரியர்கள் இருந்தனர். இவர்களை இரட்டையர்கள் என அழைத்துக் கொண்டனர். இவர்கள் சிறுவர் நாடகங்களை தயாரித் தளித்தனர். மார்க்கண்டேயர், பாதுகா பட்டாபிஷேகம் என்று பல நாடகங்களை ஆரம்பவகுப்பு மாணவர்களை வைத்து மேடையேற்றினர். பா. மணிவண்ணன், இரத்தினராசன், தி. வரதராசன், த. யோகலிங்கம் ஆகியோரும் சண்முகநாதன், சிதம்பரநாதன் என்ற இரட்டையர்கள் இராமன், இலட்சுமணர் களாக நடித்ததும் ஞாபகத்தில் உள்ளது. இங்கு வ. யோகேஸ்வரி என்ற மாணவி பக்கவாத்தியமான ஆர்மோனியம் வாசிப்ப திலும் பாடல்களை பாடுவதிலும் பங்கேற்றார். இன்று ஆசிரியையாக அதே பாடசாலையிலிருந்து கலைத்துறைக்கும் பங்களிப்புச் செய்கிறார். தேவரையாளி இந்துவின் நாடகங்கள் நான் பார்த்தவைகளே பதியப்பட்டுள்ளன. அதற்கு முற்பட்ட காலத்தில் மா. கிருஷ்ணகாந்தன், சீ. இந்திராதேவி, கோ. கலைச்செல்வி இன்னும் பலர் பற்றிய நாடகப்பங்கை அறிந்துள்ளேன். அதுபற்றி விரிவான வரலாறு எழுதப்பட வேண்டும்.

1980ல் வதிரி தமிழ் மன்ற மாதர் சங்க கலைவிழாவொன்று நடப்பதாக நண்பன் குணசிங்கம் எனக்குச் சொன்னார். இருவரும் விடுமுறை பெற்று வதிரிக்குச் சென்றோம். நண்பனின் வற்புறுத்தலின் பேரில்தான் நானும் சென்றேன். அல்வாய், கொற்றாவத்தை, வதிரி கிராமங்களிலிருந்து நாடகங்கள் வந்திருந்தன. வட அல்வாயிலிருந்து 'சரஸ்வதி சபதம்' என்ற நாடகம் மேடையேறியது. காட்சியமைப்பு நன்றாக இருந்தது. நடிகர்கள் அனைவரும் பாடும் திறமை கொண்டவர் களாக இருந்தனர். இந்த நாடகத்தில் நடித்தவர்கள் கவிஞர் மு. செல்லையாவின் பாடசாலை நாடகங்களில் நடித்தவர்களாவர். அவர்களது நாடகம் மிகச் சிறப்பாகத்தான் இருந்தது. அடுத்து வதிரி தமிழ் மன்ற மாதர் அணியினரின் 'சாம்ராட் அசோகன்' நாடகம் மேடையேறியது. அசோகனாக நடித்தவர் மேடையில் வீரத்துடன் துடிப்பாக நடித்தார். இவருக்கு எப்படி பேச முடிந்தது? நடிக்கமுடிந்தது என்று நண்பன் குணசிங்கத்திடம் கேட்டேன். அவன் சிரித்துவிட்டு மௌனமாகி விட்டான். வாய்திறந்து பேசமுடியாதவர்களும் வாய்பேசுவதை இந் நாடகத்தில் தான் பார்த்தேன். நடித்தவர்கள் நன்றாக நடித்தனர். அசோகனின் நடிப்பே எனக்கு மிகப்பிடித்துக் கொண்டது. நண்பன் குணசிங்கம் முடிவில் கேட்டான் நாடகமெப்படி என்று. அசோகனின் நடிப்பு நன்றாகத்தானிருந்தது என்றேன். பின்நாளில் இந்நாடகமே என் வாழ்வில் ஒரு திருப்பத்தையும் ஏற்படுத்தியது. பலர் பாடசாலை நாடகங்களினாலேயே நடித்து முன்னே வந்துள்ளனர். இன்றும் சிலர் பாடசாலை நாடகங்களோடு நடிப்பதை மறந்தும் விடுகின்றனர். பாடசாலை நடிப்புடன் முன்னே வந்தவர்கள்தான் கொடிகட்டி முன்னே வந்திருக்கின்றனர் என்பதும் உண்மைதான். ஏனெனில் அங்குதான் அவர்களது திறமை வெளிக்கொணரப்படுகிறது.

இங்கு நாடகங்கள் பற்றி பேசுபவர்கள் நடிகர்கள் பற்றி பேசுவார்கள். ஆனால் அதன் பங்காளிகள் பற்றிப் பேசுவதில்லை. இங்கு நான் குறிப்பிட வருவது ஒரு ஒப்பனைக் கலைஞரைப் பற்றித்தான்; இந்த ஒப்பனைக் கலைஞனை எனது சிறுவயது முதல் அறிந்தவன்; பழகியவன். அ. வேலும் மயிலும் என்பவராகும். ஆண்களை பெண்களாக்குவதில் மகாகெட்டிக்காரன். யாழ்ப்பாணத்தில் எல்லாப்பகுதியிலும் ஒப்பனையாளனாகக் கடமை புரிந்தவர். இவருக்கு 'ஈழத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரிபாபு' என்ற பட்டமும் உண்டு. இவரிடம் ஒப்பனைக் கலையைக் கற்றவர்கள் பலர். அவர்களுக்கு இவரை ஞாபகத்திலிருக்குமோ தெரியாது. வதிரியைச் சேர்ந்தவர். கிராமத்தில் நடைபெறும் கலைநிகழ்ச்சிகளுக்கு முன்னின்று உதவுபவர். அவரும் காலமாகிப் பல காலமாகிறது. அவர் பற்றி யாருமே பேசுவதாக இல்லை. இப்போ நான் ஞாபகப்படுத்த வேண்டிய நிலை. கலைஞன் வாழும்போது கௌரவிக்கப்பட வேண்டுமென்பது உண்மை என்பதை உணருகிறேன். கலைஞன் ஒருவன் ஏழையாகப் பிறந்து விட்டால் அவனைப் பற்றிய சிந்தனை யாருக்குமே வருவதில்லைத்தான். இப்படிப் பல கலைஞர்கள் கவனிக்கப்படாமல் இருப்பதும், நினைவு படுத்தப்படாமல் இருப்பதும் வேதனைக் குரிய விடயமாகும்.

1979ல் தேசிய நாடக விழாவைப் பார்த்த எனக்கு கொழும்பில் நாடகங்களைப் பார்க்க அதிக வாய்ப்புக் கிடைக்க வில்லை. நான் பார்த்த தொழில் எங்கும் என்னை அசையவிடவில்லை. கலை இலக்கியத்தை ஒதுக்கி வைத்திருந்தேன். ஆனாலும் சிலசமயங்களில் பங்கேற்றுக் கொள்வேன். நண்பன் மேமன்கவியை கொழும்பில் சந்தித்தால் இலக்கிய கூட்டங்கள், வகவம் கவியரங்கு ஆகியவற்றிற்கு தவறாது பங்குகொள்வேன். டவர்மண்டபம் திருத்தியமைக்கப்பட்டபோது தமிழ் நாடகங்கள் மேடையேற்றப் படவில்லை என்ற குறை இருந்தது. இதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் கேள்வி கேட்டிருந்தார். அவ்வேளையில் பிரதமராகவிருந்த கௌரவ பிரேமதாச அவர்கள் அனுமதி கொடுத்தார். அதன்பின் மூன்று நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இங்கு முதல்நாள் நடிகமணி வைரமுத்துவின் அரிச்சந்திரா மயான காண்டம் மேடை யேற்றப்பட்டது. எதிர்க்கட்சித்தலைவர் அமிர்தலிங்கம் அவர்களும் வந்திருந்தார். மொத்தத்தில் நாற்பத்தேழு பேர் வந்திருந்தனர். முதல்நாள் என்ற போது விளம்பரம் போதாமல் போனதோ என்றும் யோசிக்கவைத்தது. அனுமதிச்சீட்டுக் கூட அதிக விலையில் இருக்கவில்லை. நாடகம் பார்க்க வந்தவர்கள் அனைவருமே ரசனையாளர்களாகவே இருந்தனர். வைரமுத்து வின் நாடகங்களுக்கு யாழ்ப்பாணத்தில் எவ்வளவோ மக்கள் பெரும் திரளாக வந்து ரசிப்பார்கள். அன்று மிகக் குறைந் தளவில் ரசிகர்கள் வந்திருந்ததை பார்த்தபோது மிகக் கவலையாக இருந்தது. ஆனால் வைரமுத்துவின் நடிப்பும், அவரோடிணைந்து நடித்தவர்களும் மிகச்சிறப்பாகத்தான் நடித்தனர். வைரமுத்துவின் பூதத்தம்பி, சத்தியவான்சாவித்திரி, பக்தநந்தனார் ஆகிய நாடகங்களை வடபகுதியில் பார்த்த எனக்கு இங்கு வந்திருந்த ஜனத்தின் எண்ணிக்கையை பார்த்தபோது கவலையாக இருந்தது. கலைஞன் என்பவன் எந்த நேரத்திலும் சோர்ந்து போக மாட்டான் என்பதை மட்டும் அன்றைய நாடக நிகழ்வு புரியவைத்தது. அடுத்தநாள் 'சங்காரம்' மேடையேறியது. கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை, சி. மௌனகுரு ஆகியோரின் குழுவினர் நடித்தனர். அன்றும் இதைவிடச் சற்று அதிகமாக ரசிகர்கள் கூடியிருந்தனர். சங்காரம் நாடகமாந்தர்களின் ஆட்டமும், நடிப்பும், கதையின் கருத்தும் மிகவாகக் கவர்ந்திருந்தது. அடுத்த நாள் வேல் ஆனந்தன் குழுவினரின் நாட்டிய நாடகம் இடம்பெற்றது. இதுவும் ரசிக்கவல்ல உயர்ந்த ரகத்தில் மனதைக் கவர்ந் திருந்தது.

1990க்கு பின்பே நான் நாடக விமர்சனங்கள் எழுத ஆரம்பித்தேன். 1991க்கு யாழ் திருமறைக்கலாமன்றம் தங்கள் கிளையொன்றை கொழும்பில் ஆரம்பித்தனர். கொழும்பில் கால்பதித்த இவர்கள் 'சத்தியவேள்வி' என்ற நாடகத்தை முதலில் அரங்கேற்றினர். இந்நாடகத்தை திரு செ. சிவலோக நாதனும் நானும் மருதானை எல்பின்ஸ்டன் அரங்கில் பார்த்தோம். தைரியநாதன் அரிச்சந்திரனாகவும், கமலினி செல்வராஜன் சந்திரமதியாகவும் நடித்தனர். நாடகப்பிரியர் களுக்கு நல்ல விருந்தாக அமைந்திருந்தது. நாடகம் முடிந்த தும் விமர்சனம் எழுதவேண்டுமென்ற ஆவலுடன் இருந்தேன். எனது விமர்சனத்தை வீரகேசரி பிரசுரித்தது. அப்போ வீர கேசரி வாரவெளியீட்டில் திருமதி பற்றீசியா ஆரோக்கியநாதன் அவர்கள் கடமையாற்றிக் கொண்டிருந்தார். திருமறைக் கலாமன்றத்தின் வளர்ச்சியில் பங்கு கொண்டவர். இப்போதும் அவர்களது பங்காளியாக இருக்கிறார். அவரிடம் யார் எழுதியது என்று திருமறைக்கலாமன்றத்தினர் வினா எழுப்பியிருந்தனர். அவருக்கோ என்னை அறிமுகமில்லை. வாரமலர் ஆசிரியர் அமரர் பொன். ராஜகோபால் அவர்களுடன் நெருங்கிய நட்பு இருந்தது. நான் வீரகேசரி அலுவலகம் சென்ற போது திரு ராஜகோபால் என்னை திருமதி பற்றீசியா ஆரோக்கிய நாதருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவரூடாக வண பிதா பேராசிரியர் சவேரி அடிகளாரின் தொடர்பு கிடைத்தது. திருமறைக்கலாமன்றத்தில் நாடகங்கள் உட்பட எல்லாக் கலைநிகழ்வுகளையும் விமர்சனம் செய்தேன். ஆரம்பத்தில் நானே இவர்களது கொழும்பு நிகழ்வுகளை எழுதிவந்தேன். திருமறைக்கலாமன்றம் பெருவிருட்சமாக நாட்டின் சகல பகுதிகளிலும் விரிந்து வளர்ந்தது. எனது வேலைப்பளு காரணமாக அவர்களுடன் தொடர்ந்து இணைய முடியவில்லை. இவர்கள் தயாரித்த அசோகா, ஞானசவுந்தரி, கி.பி. இரண்டாயிரம், சமாதான கலைநிகழ்வுகள் எல்லாம் என்மனதிலே பதிந்திருந்தன. நர்த்தகி நளாயினியின் வில்வித்தை கற்பித்தல், யேசுதாசனின் ஆர்மோனிய இசை, கொலின், யோன்சன் ராஜ்குமார், சாம் பிரதீபன் ஆகியோர் இன்றும் நம் மனதில் பதிந்துள்ளனர். ஜோன்சன் ராஜ்குமாரின் 'கட்டியக்காரன்' நடிப்பைப் பாராட்டி எழுதிய நான் இவருக்கு நல்ல எதிர்காலமுண்டு என எழுதியிருந்தேன். இவர் இன்று மிகச் சிறந்த கலைஞனாக முன்னே வந்து கொண்டிருக்கிறார். நாடகப்பிரிவில் முக்கியமானவராகவும் விளங்குகின்றார். எவ்வளவோ செலவுகள் செய்து நாடகங்களையோ, கலை நிகழ்வுகளையோ ஒருங்கமைத்தாலும் கொழும்பில் பார்வையாளர்களின் வருகை மிகக் குறைவாகவே இருந்தது. ஆனால் திருமறைக்கலாமன்றத்தின் கிளை அமைப்புகள் இணைந்து விழாவை ஏற்பாடு செய்கையில் அரங்கம் நிறைந்தே காணப்படுகிறது. நாட்டில் சமாதானத்தை வலியுறுத்தி கலைநிகழ்வுகளை தயாரிப்பவர்களும் திருமறைக்கலா மன்றத்தினர்தான் என்பதையும் மறப்பதற்கில்லை. இன்று கலையுணர்வோடு தொடர்ந்து நாடகங்களை அரங்கேற்றியும் வருகின்றார்கள். திருமறைக்கலாமன்றத்தினதும், வணபிதா சவேரி அடிகளதும் நாடகப்பங்களிப்பை பல ஆய்வாளர்களும், விமர்சகர்களும் இருட்டடிப்புச் செய்துள்ளனர். காத்திரமான கலைப்பங்களிப்பு என்னவென்பது சில ஆய்வாளர்களுக்கு புரியாமல் போகிறது. தேசிய நாடக விழாக்கள், தெலுங்கு காங்கிரஸ் நடாத்திய நாடகவிழா, இன்னும் பல மேடை நாடகங்களையும் கொழும்பில் பார்த்துள்ளேன்.

*(மிகுதி அடுத்த இதழில்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைபடும் விளம்பரத் தட்டி

கருணாகரன்

மிகப் பிரமாண்டமான விளம்பரத்தட்டிகள்
எல்லாம் ஒன்று கூடி
கேலிசெய்தன நகரத்திலிருந்த
அத்தனை பிச்சைக்காரரையும்
என்னையும்

யாரையும் அழைத்துக் கொள்ளும்
அவற்றின் வண்ணவெளிகளில் இருக்கவில்லை
நமக்கான எந்தச் சிறுவாசலும்
அவற்றின் கொல்லைப்புறத்துக்குச் செல்லவும்
விருந்தினர் விடுதிக்குப் போகவும்
வரவேற்பறையில் தங்கவும்
ஏன் கழிப்பறைக்குக் கூட

மையல் நிரம்பிய அந்த
விளம்பரத்தட்டிகளுக்கு
ஒரு போதும் அன்பும் கருணையும் இல்லை
என்றான் அருகில் பேருந்துக்காக காத்துநின்ற
யாரோ ஒருத்தன்
என் கண்களிலிருந்து வெளியேறிய
உலர்ந்த விருப்பங்களைக் கண்டு.

நைந்து போன சிறிய நோட்டுகள்
சில அவனிடம் இருக்கலாம்
குழந்தைகளுக்காக திராட்சையையும்
இனிப்பையும் வாங்கிப்போக முடியாமல்
நான்கைந்து நாட்களாகவே
திணறியபடி.

இன்னும் அவனிடம் எந்தத்தீர்மானமுமில்லை
அந்தக்காசு குழந்தைகளுக்கான பழமாகுமா
கடன்காரனின் பேச்சையடைக்குமா என்று

ஒரு சல்லிக்காசு இல்லாதவனை
சிறிய பற்பொடிப் பையும்
கவனங்கொள்வதில்லை
கடையிலிருக்கும் எல்லாப்பொருட்களும்
அவனை தொலைவிலேயே நிறுத்தும்போது
அவனைக்கடந்து போகின்றன
விரைவாக எல்லா ஊர்திகளும்
விலக்கப்பட்ட பொருளொன்றை விலக்கிக் கொண்டதாக.

விரைந்து செல்லும் வண்டிகளுக்கிடையில்
நடந்து செல்வோருக்கென்று
விதிக்கப்பட்ட இடத்தில்
கிடைக்கும் சிறு அவகாசத்தில்
அவனுடைய உயிரும் வாழ்வும்
இந்தப்பக்கமிருந்து அந்தப்பக்கமாக
கடந்து விடவேணும்.

அப்போதும் அந்த விளம்பரத்தட்டிகள்
நம்மைப்பார்த்து கேலிசெய்கின்றன
காசில்லாதவரின் கைகளை
எப்படி அவற்றுக்குத் தெரிந்து விடுகிறது
பிச்சைக்காரருக்காக தாம் ஒரு போதும்
புன்னகைக்கவில்லை என்றும்
அவை சொல்லிக்கொண்டிருக்கின்றன.

எனக்கும் தான் அந்தச் சொல்.

# யார்க் கெடுத் துரைப்போம்?

அனலை.க.சௌந்தரராஜன்

அன்னை கருவறை உருவான பிஞ்சும்,
அவள்மடி தவழ் திருவான மழலையும்,
முன்னை பெற்றிட்ட முழுதான பிள்ளைகளும்,
மூத்தவர், இளையவர் முழுக் குடும்பமும்,
இன்னலு றுங்காலம்; இங்கிருக்கும் நிலையில்
இதயத்து வேதனையில் இருவிழி நீர்சோர
என்னே வாழ்க்கை! எங்குதான் போவதென
எல்லோரும் எக்கணமும் ஏங்கிடுங் காலம்.


ஒருவேளை உணவுமில்லா உறுபசிக் காலம்;
ஊட்ட ஒருவரில்லா ஓட்டாண்டிக் கோலம்;
தருவோனைத் தடுத்திடும் தறுகணாளக் கூட்டம்;
தங்கிட நிழலுமில்லாத் தவிப்பாலே வாட்டம்;
கருதியது எய்தலென்றே களமாடும் நிலையினூடே
காண்கின்றோம்; கேட்கின் றோம்கவல் கின்றோம்;
பெருநிதி; பேணிட உறுபொருள்; தருமனம்;
பெற்றிட்டும், பேதலித்தல் தவிர வேறென்ன?

காசைத் தான்காணாது கவலை யுறுங்காலம்;
கடல்மேவு தொழிலாளர் இடர்கூடு கோலம்;
பேசத் தான்முடியாது; பேதலிக் குங்காலம்;
மோசங்கள் செய்வோரே மேன்மை யுறுங்காலம்;
நேசங் கள்உறவுகள் நெருங்கிடாக் காலம்;
நெடும் பாதை அடைப்பாலே உருவான தாகும்;
ஏசத் தான் செய்வோம்; ஏமாற்று வாழ்வை
எவர் தாமோ ஏற்றிடுவார்? இயலாமை கூட

செல்லிடப் பேசிகள் செயலிழந்த காலம்;
சிந்தித் தாலே சினமூட்ட லாகும்;
அல்லன செய்வோர்க்கு ஆகிவந்த காலம்;
அனுதினமு மனுபவித்தே அவலப் படுங்காலம்;
வல்லமை, திறன்கள் வெளிவராக் காலம்;
வெளியிடஞ் செல்வதை வெறுக்கின்ற காலம்;
நல்லன செய்திட நேரில்லாக் காலம்;
நாட்டிலே நடப்பவை யார்க் கெடுத்துரைப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முள்ளிப்பொத்தானையைச் சேர்ந்த ஜுல்பர் சவுர்தீன் 1981.05.07 இல் பிறந்தவர். தற்போது ஆசிரியராக தி/ஸிராஜுநகர் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். இவரது ஆக்கங்கள் தேசிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. தி/அல்ஹிஜ்ரா ம.ம.வி, தி/கிண்ணியா ம.ம.வி, ஆகிய பாடசாலைகளில் கற்ற இவர், உயர் கல்வியை அட்/தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்றார். 2005இல் "மலர்களிடம் கேட்கின்றேன்" என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார். கவிதைத்துறையில் மட்டுமல்ல ஓவியத்துறையிலும் ஈடுபாடு கொண்ட இவர் அட்/தேசிய கல்வியியற் கல்லூரியில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் (சித்திரம்) பெற்றுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகள் கற்கை நெறியில் தேசிய சான்றிதழ் பெற்றுள்ளார்.

இவரது வதிவிட முகவரி: J. Saburdeen, 285/7, Mullipothana, Kantale., தொலைபேசி: 072-4084739

சுவனமே
என் இலக்காக
இருக்கும் போது
அதை நோக்கி.......

சுவரான கத்தியின்
மேற்பரப்பில்
எனது பாதங்கள்
தொலை தூரம்
புதைந்து புதைந்து
நடக்க வந்தாலும்.....

பழுக்கக் காய்ச்சிய
பாறையின் மீது
தணல் படிந்த
என் கைகள்
தவழ்ந்து தவழ்ந்து
நடக்க வந்தாலும்

கண்கள் இரண்டும்
சருகாகிக் காய்ந்து
சருகாகி நிலத்தில்
உதிர வந்தாலும்

வீரியமற்று
என் விரல்கள்
விறகாகி
துண்டு துண்டாய்
நிலத்தில்
விழுந்து வந்தாலும்

அதை நோக்கி
என் பாதங்கள்
நடந்து கொண்டே இருக்கும்

நான்
நான் தான் என்று
எனக்கு ஞாபகம்
உள்ள வரை

என் இருதயத்தில்
இறுதி மூச்சு
உள்ள வரை

மரணம் வந்து
தொண்டைக்
குழியடைக்கும் போது
என் கண்களின்
இமைகளை அசைக்க

எனக்கு
ஒரு துளி
நேரமிருக்குமெனில்

அதை நோக்கியே
என் பாதங்கள்
நடந்து கொண்டிருக்கும்

தொழுகையின்
'நடு இருப்பில்'
கலிமா விரலை உயர்த்தி
எவனுக்காக - நான்
சத்தியம் செய்தேனோ
அவன் மீது
சத்தியமாக

இன்னும் அது
தொலை தூரமானாலும்
அதை நோக்கியே
என் பாதங்கள்
நடந்து கொண்டிருக்கும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே தலைப்பில் அமைந்த சிறுகதைகளில் ஈழத்துப் படைப்பாளிகளின் பன்முகத்தன்மை - ஒரு கண்ணோட்டம்

*- சின்னராஜா விமலன்-*

தமிழ் இலக்கிய புனைகதை வடிவங்களுள் சிறுகதைக்கு தனித்துவமான ஓர் இடமுண்டு. சிறுகதைகள் பொதுவாக மனித உணர்வுகளையும், நடத்தைகளையும் சமூக நடப்புக் களையும், சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சனைகளையும் ஒரு சிறு சம்பவத்தின் மூலம் அல்லது உணர்வுத் தெறிப்பின் மூலம் எடுத்துக்காட்டி வாசிப்போர் மனதில் ஒரு அதிர்வை ஏற்படுத்தும் வல்லமை வாய்ந்தவை. இன்றைய காலகட்டத்தில் சிறுகதைகள் யதார்த்த வாதம், மாயா யதார்த்தவாதம் போன்ற இசங்களின் பின்னணியில் பல்வேறுபட்ட கருப்பொருள்களில் புதிய பரிமாணத்தைப் பெற்றிருப்பது கண்கூடான விடயம்.

சிறுகதைகள் எழுதும் பொழுது கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்களாக பேராசிரியர் சிவத்தம்பி "சிறுகதையின் அமைப்பு முறைமைக்கான 'பார்வை', அந்தப் பார்வையை வெளிக் கொண்டுவரும் மொழி, இவை இரண்டுக்கும் அடித்தளமாக அதே வேளையில் அவற்றிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாதவையாக அமையும் உணர்வின் உண்மைத்தன்மை (Genuineness). உளநேர்மை (Sincerity). ஆழம் (Depth) ஆகியன வற்றின் ஒருங்குநிலை" என்பவற்றை குறிப்பிடுவார்.

அந்த வகையில் மொழி என்ற வரையறைக்குள் சிறுகதைக்கு இடப்படும் தலைப்பும் இன்றி அமையாததாகிறது. வாசகர்களை கதையின் பால் ஈர்ப்பதற்கு அது உதவுகின்றது. சிறுகதைப் படைப்பொன்றுக்கு தலைப்பிடுகின்ற பொழுது எழுத்தாளர்கள் இரண்டு விதமாக அதனைக் கைக்கொள்வர். ஒன்று சிறுகதையின் மையக் கருத்தைப் புலப்படுத்தும் படியான வகையில் நேரடியாக தலைப்பு இடப்பட்டிருக்கும். மற்றையது குறியீட்டுருவாக்கத்தில் தலைப்பு அமைந்திருக்கும். தரமான பல சிறுகதைகளை அதன் பெயரை வைத்துக் கொண்டே ஊகித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். விதிவிலக்குகளாக கதைக்குச் சம்பந்தமில்லாது பெயர் இடப்படுகின்ற சம்பவங்களும் நடைபெறத் தவறுவதில்லை. பெரும்பாலும் இளநிலை எழுத்தாளர்களின் சிறுகதைகளில் இதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கும்.

சிந்தனை ஓட்டங்கள் தனிநபருக்குத் தனிநபர் வேறுபடுவதனால் எழுத்தாளரின் அகவயப்பட்ட சிந்தனையில் தோன்றும் கருத்தோட்டங்கள் சில சமயங்களில் வாசகரின் அறிகைத் தூண்டலுக்கு சவாலாகி விடுவதும் உண்டு. இதனால் சொல்லவந்த விடயத்தில் எதிர்மறையான சில விளைவுகளையும் எழுத்தாளன் சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையையும் அது ஏற்படுத்தி விடலாம். இது சிறுகதைக்கு தலைப்பு இடுகின்ற சந்தர்ப்பத்துக்கும் பொருந்தும். அண்மையில் ஞானம் சஞ்சிகையில் வெளியான போட்டிச் சிறுகதை ஒன்றிற்கு எழுத்தாளரால் இடப்பட்ட "பரிணாமம்" என்ற பெயரை மாற்றி "வேரடிமண்" என ஆசிரியரால் இடப்பட்டது வாசகர்கள் அறிந்ததே.

அந்த வகையில் ஈழத்துசிறுகதைகளில் ஒரே தலைப்பில் வெளியான பல்வேறு எழுத்தாளர்களின் சிறுகதைகள் பற்றி அலசமுற்படுகிறது இக்கட்டுரை. இதுவரை காலமும் புனை கதை இலக்கிய வரலாற்றில் அது கவிதையாகட்டும், சிறுகதை யாகட்டும், நாவல் ஆகட்டும் பல கட்டுரையாளர்கள் ஒரே விடயதானத்தில் அமைந்த பல்வேறு எழுத்தாளர்களால் பல்வேறு விதமாய் சித்தரிக்கப்பட்ட புனைகதை இலக்கியங் களை ஆய்வுக்கு உட்படுத்தியே பல கட்டுரைகளை வரைந்துள்ளனர்.

எடுத்துக்காட்டாக பேராசிரியர் கைலாசபதியின் "தமிழ் நாவல்களில் மனித உரிமைகளும் மக்கள் போராட்டங்களும்" என்ற கட்டுரையை சுட்டிக்காட்டலாம்.

இந்தக் கட்டுரை சற்று மாறுபட்டதாக ஈழத்து சிறுகதை களில் பல்வேறு படைப்பாளிகள் ஒரே தலைப்பில் படைத்த பன்முகச் சிறுகதை ஆக்கம் பற்றி விபரிக்கின்றது. இவ்வகை யான கதைகள் ஒரே காலகட்டத்திலும், வெவ்வேறு கால கட்டங்களிலும் எழுதப்பட்டவையாக காணப்படுகின்றன. ஒரே பெயரில் அமைந்த இவ்வகை சிறுகதைகள் தோற்றம் பெறுவதற்கு நான்கு காரணங்களைச் சுட்டிக்காட்ட முடியும்.

1) முன்பு அப்பெயரில் சிறுகதை வெளிவந்திருந்தாலும் தங்களது சிறுகதையின் பொருத்தப்பாடு கருதி எழுத்தாளர்கள் அதனை சூட்டுவது.

2) மூத்த படைப்பாளிகளது ஆக்கங்கள் பற்றிய போதிய தேடல் இன்மையால் தாம் தான் முதலில் அப்பெயரை சூட்டுகிறோம் என்றதொரு இளைய தலைமுறையினரின் அறியாமை.

3) தன்னுடைய ஆதர்ஸ எழுத்தாளரின் எழுத்துக்களால் கவரப்பட்ட இளம் தலைமுறையினர் அதே பெயரில் தானும் சிறுகதை ஒன்றை எழுத வேண்டுமென்ற படைப்பூக்க உந்துதல்.

4) இன்றைய அவசரயுகத்தில் ஒரு சில பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளின் ஆசிரியர்கள் புதிய படைப்பாக்கப் பற்றாக்குறை ஏற்படும் பொழுது இவர்களே படைப்பாளிகளை நாடி நெருக்குவாரத்தை கொடுக்கின்றனர். இதனால் அந்தப் படைப்பாளர்கள் என்ன பெயரிட்டு எதை எழுதினாலும் அதனை பிரசுரிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகின்றனர். அவ்வாறான தருணங்களில் சிறுகதைகளின் பெயர்கள் முன்பு வந்ததாக தெரிந்தாலும் கேட்டுவாங்கிய குற்றத்திற்காக அப்படியே பிரசுரிப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒன்றும் தண்டனைக்குரிய குற்றமில்லை. ஏனென்றால் மொழி என்பது தனிஒரு நபரின் ஏகபோக உரிமைப் பொருளல்ல. எனினும் ஒரு எழுத்தாளரின் மொழி ரீதியான ஆளுகைக்குட்பட்ட கருத்துக்களையோ அல்லது அவர் பயன்படுத்திய சில வார்த்தைப் பிரயோகங்களையோ கூறியது கூறலாகக் கூறுவதை ஏனைய படைப்பாளிகள் இயலுமானவரை தவிர்த்தே வருவர். பெரும்பாலான எழுத்தாளர்கள் தங்களுடைய படைப்புக்களில் தமக்கிருக்கும் தனித்துவத்தைப் பேணவே பெரிதும் விரும்புவர்.

இதனடிப்படையில் இந்த ஆய்வுக்காக நான் எடுத்துக் கொண்ட சிறுகதைகள் பற்றி கூறுவது இவ்விடத்தில் அவசியமா கின்றது. பக்க வரையறை கருதி இதுவரை காலமும் வெளி வந்திருக்கும் வகை தொகையான சிறுகதைகள் அனைத்தையும் கருத்தில் கொள்ளாமல் சிலசிறுகதை தொகுப்புக்களை மட்டும் ஆதாரமாக கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இந்தப்பீடிகையுடன், இனி சிறுகதைகளை நோக்குவோம்.

'உள்ளும் புறமும்' என்ற பெயரில் சிறுகதைகள் படைத்தவர்களாக வரதர், மு. பொன்னம்பலம், தி. ஞானசேகரன், க. நவம், நாகேசு தர்மலிங்கம் ஆகியோர் காணப்படுகின்றனர். பாவகாரியத்தின் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு படோபமாக கோயில் திருவிழாக்களை நடத்தி தம்மை பக்த சிரோன்மணிகளாக அடையாளம் காட்டிக்கொண்டு போலி வாழ்வு வாழும் சுந்தரமூர்த்தி பற்றி விபரிக்கிறது வரதரின் உள்ளும் புறமும சிறுகதை.

1970 இல் வெளியான மு. பொன்னம்பலத்தின் 'உள்ளும் புறமும்' சிறுகதையானது கம்பனியில் வேலை செய்து முதலாளித்துவத்திற்கு எதிராக போராட்டம் செய்ததனால் வேலை பறிபோன ஒருவனின் மனநிலையை கரிக்குருவி தலைமையில் காக்கை. கணவாய் என்பன ஒன்று சேர்ந்து தம்மை இரையெடுக்க முயலும் பருந்தை எதிர்கொள்ளும் நிலைக்கு குறியீடாக்கி சித்தரிக்கிறது.

1971இல் வெளியான தி. ஞானசேகரனின் 'உள்ளும் புறமும்' சிறுகதையானது தலைநகர் ஹோட்டலில் சாப்பாடு பரிமாறிய கிராமத்து சிறுவன் குறைந்த சாதியை சேர்ந்தவன் என்று தெரிந்ததும் சாப்பிடுவதை நிறுத்தி விட்டு செல்லும் திருநாவுக்கரசுக்கு முதலாளி சீவரத்தினம் அவன் மீதான நம்பிக்கையையும், பிழைக்க வந்த இடத்தில் இதையெல்லாம் பார்க்க இயலாது எனக் கூறி அவரைச் சிந்திக்க வைப்பதாக முடிகிறது.

1972இல் வெளியான க. நவத்தின் 'உள்ளும் புறமும்'' சிறுகதையானது உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் போலித்தன்மையான வாழ்வை இயம்பி நிற்கிறது. சமயத்தோடு சாதியையும் கட்டிக்காப்பதாய் மார்தட்டிக் கொள்வதும் இருட்டிலே கள்ளுக் குடிப்பதற்காய் சமத்துவம் பேசுவதையும் செல்வராசா மாஸ்ரர் என்ற பாத்திரத்தின் மூலம் தோலுரித்துக் காட்டுகிறது.

1996இல் வெளியான நாகேசு தர்மலிங்கத்தின் அந்நியம் தொகுப்பில் இடம்பெற்ற 'உள்ளும் புறமும்' கதையானது (இக்கதை எழுதப்பட்ட ஆண்டு அதில் இடப்படவில்லை) சாமிமட ஆயுட்கால உறுப்பினராகவும் சமூக அந்தஸ்தில் வசதிவாய்ப்புகளுடன் உயர்ந்தவராகவும் வெளிப்பார்வைக்கு பகட்டுவேஷம் போடும் மாமன் சங்கக்கடை மனேச்சராக இருந்து புரியும் ஊழல்களையும் அநியாயங்களையும் புட்டுவைக்கிறது.

அடுத்து 'வெறி' என்ற பெயரில் வரதர். சு. வேலுப்பிள்ளை (சு. வே) நயிமா ஏ. பஷீர் ஆகியோர் சிறுகதைகளை புனைந்துள்ளனர்.

தேர்தல் வெறியினால் மகளின் கல்யாணத்திற்கென சேர்த்து வைத்த பணத்தை எல்லாம் செலவளித்து விட்டு திண்டாடும் நல்லசிவத்திற்கு அவர் மகள் மேல் ஏற்பட்ட காதலினால் பெற்றோருக்குத் தெரியாமல் பணம் கொடுத்து கல்யாணத்தை நடத்த உதவுகிற சம்பந்தன் என்னும் பாத்திரம். இதனை வரதரின் 'வெறி' சிறுகதையில் தரிசிக்க முடியும்.

1958இல் வெளியான சு. வேயின் 'வெறி' சிறுகதையில் தன்னலம் கருதாது பிறருக்கு உதவி செய்வதையே இலட்சியமாய் மனதில் வரித்துக் கொண்டு வாழ்ந்து இறுதியில் அந்த இலட்சிய வெறிக்கே பலியாகும் முத்து என்ற பாத்திரம் சித்திரிக்கப்பட்டுள்ளது.

1964 இல் சுதந்திரனில் வெளியான நயிமா ஏ. பஷீரின் (தற்போது நயிமா சித்திக்) 'வெறி' சிறுகதையானது இராணுவத்திலிருந்து விலக வேண்டுமென மனைவி பலதடவைகள் நிர்ப்பந்தித்தாலும் அது சாத்தியப்படாமல் இறுதியில் தனது மனைவியை பலிகொடுத்த பின்னரே அப்பதவியை ராஜினாமா செய்யும் ரஹீம் என்னும் பாத்திரம் பற்றி சித்திரிக்கின்றது.

அடுத்து சிற்பி, வீ. சீத்தாராமன், தி. ஞானசேகரன், ராணிசீதரன் ஆகியோர் 'பிறந்தமண்' என்ற பெயரில் சிறுகதை ஆக்கங்களைப் படைத்தளித்துள்ளனர். இதில் 1959இல் வெளியான சிற்பியின் 'பிறந்தமண்' சிறுகதையானது தனக்கு உயிரூட்டி, உணர்வூட்டி, உரமூட்டிய தமிழ் மண்ணை பட்டுப்பை யினுள் போட்டு பாதுகாத்து வருகிறான் வேலை நிமித்தம் பொலநறுவையில் வசிக்கும் சிவலிங்கம். இந்நிலையில் இனவெறிக் கலகத்தில் முரடன் ஒருவனால் கத்தியால் குத்தப்பட்டு இறக்கும் பொழுது பட்டுப்பையிலுள்ள அந்தத் தாய் மண்ணை கொட்டி அதன் மீது உயிரை விடுவதாய் உணர்வு பூர்வமாய் சித்திரிக்கிறது.

சுதந்திரனில் 1966இல் வெளியான வீ. சீத்தாராமன் என்பவரின் 'பிறந்த மண்' சிறுகதையில் அரசாங்க சலுகையில் மேற்படிப்புக்காக சென்னைக்குச் செல்லும் தேயிலை தோட்ட கணக்குப் பிள்ளையின் மகனான மூர்த்தி பத்து ஆண்டுகள் கழித்து தான் பிறந்த மண்ணையும் குடும்பத்தினரையும் காணப் போகும் பேருவகையோடு இலங்கை வருகின்றான். ஆனால் அப்பொழுதுதான் தெரிகிறது பிரஜாஉரிமை இல்லாத காரணத்தால் தனது குடும்பத்தையே நாடு கடத்தியதான துயரம்.

1972இல் தினகரனில் வெளியான தி. ஞானசேகரனின் 'பிறந்த மண்' சிறுகதையானது இந்தியாவில் பிறந்த தந்தை யாரான மாணிக்கத்தேவரும் இலங்கையில் பிறந்த அவரது மகனான இருளப்பனும் மலையக கூலித்தொழிலாளிகளாக வேலை செய்து வருகிறார்கள். இந்நிலையில் மாணிக்கத் தேவர் தன் இறுதிக்காலத்தை தான் பிறந்த மண்ணான இந்தியாவில் கழிக்க விரும்புவதற்காக மகனையும் கூட அழைத்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளப்பனும் தான் பிறந்த மண்ணான இலங்கையை விட்டு தானும் பிரியமாட்டேன் என்பதாக சித்தரிக்கப்படுகிறது.

ஞானம் இதழில் வெளியான ராணிசீதரன் என்பவரின் 'பிறந்தமண்' சிறுகதையில் இடம் பெயர்ந்து பத்து வருடங்களின் பின்னர் சொந்தவீட்டுக்கு வரும் பாக்கியம் பாழடைந்து கிடக்கும் வீட்டைப்பார்த்து ஏங்கித்தவிப்பதும், இறுதியில் துப்பாக்கி வேட்டுக்கு பலியாகி அநாதரவாக பிறந்த மண்ணில் இறந்து கிடப்பதாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

அடுத்து 'ஒரு பிடிசோறு' என்ற பெயரில் 1945ஆண்டு ஈழகேசரியில் ரசிகமணி கனகசெந்திநாதனின் சிறுகதையும், 2003 ஆம் ஆண்டு தினக்குரலில் ச. முருகானந்தனின் சிறுகதையும். ஞானம் இதழில் ஓ. கே. குணநாதனின் சிறுகதையும் வெளிவந்துள்ளன.

ரசிகமணி கனக செந்திநாதனின் சிறுகதையில் சந்நிதி மடத்தில் கொடுக்கப்படும் அன்னதானத்தில் ஒருபிடி சோறு வேண்டுவதற்காக கிழவி ஒருத்திபடும் அவஸ்தையையும், சீமாட்டி ஒருத்தி தனிப்பட்ட கோபதாபங்களை சாதிக்கும் இடமாக அச்சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதையும் சமூக ஏற்றத்தாழ்வின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ச. முருகானந்தனின் 'ஒருபிடி சோறு' சிறுகதையானது சிறைச்சாலையில் கைதியாய் வாடும் அப்பாவித் தமிழ் இளைஞன் ஒருவன் விடுதலை கோரி உண்ணாவிரதம் இருப்பதை தனது தாய்க்கு கடித வடிவில் எடுத்துரைத்து தான் இறப்பதற்குள் உன்கையால் 'ஒருபிடி சோறு' ஊட்ட வேண்டும் என்ற உருக்கமான பாத்திரவார்ப்பாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறே ஓ. கே. குணநாதன் என்பவர் எழுதி ஞானம் இதழில் வெளிவந்த 'ஒருபிடி சோறு' சிறுகதையில் வன்னிப் பெருநிலம் மீது அரசாங்கம் விதித்த பொருளாதாரத் தடையினால் ஒருபிடி சோற்றுக்காக அன்றாடம் காய்ச்சியாய் விளங்கும் ஒரு குடும்பம் படும் அவஸ்தை கலாபூர்வமாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

அடுத்து 'சங்கமம்' என்ற பெயரில் 1959இல் ஈழநாடு பத்திரிகையில் கே. வி. நடராஜன் எழுதிய சிறுகதையும், 2006 இல் வெளியான யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் சிறுகதைத் தொகுப்பான 'மனம் விந்தையானதுதான்' என்பதில் ஒரு சிறுகதையும் வெளிவந்துள்ளன. (சிறுகதை எழுதப்பட்ட ஆண்டு இடப்படவில்லை)

கே. வி. நடராஜனின் சங்கமம் சிறுகதையில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் என்றோ ஒருநாள் மரணத்துடன் சங்கமித்தே ஆகவேண்டும். இந்த நியதிக்கு இணங்க மரணப் படுக்கையில் இருந்து கொண்டு இன்பத்தை துய்க்காத தனது வாழ்வை நினைந்து துயருறும் ஒரு ஜீவனின் கதை சித்திரிக்கப்பட்டுள்ளது.

யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் 'சங்கமம்' சிறுகதையில் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்து பிரிந்து சென்றவர்கள் பல வருடங்களின் பின்னர் மீண்டும் சந்திப்பதற்காக ஒன்றுகூடல் ஒன்றை ஒழுங்கு செய்து தங்களுடைய மலரும் நினைவுகளையும் மன அவசங்களையும் வெளிப்படுத்தி இன்புறுவதாக சித்திரிக்கப்பட்டுள்ளது.

அடுத்து 'வாழத்துடிக்கிறாள்' என்ற பெயரில் 1973 ஆம் ஆண்டு மல்லிகையில் தெணியான் எழுதிய சிறுகதையும். 1990 ஆம் ஆண்டு வெளியான ஜோசப்பாலாவின் 'திருப்பம்' சிறுகதை தொகுப்பிலும் 'வாழத்துடிக்கிறாள்' என்ற பெயரிலான சிறுகதை ஒன்றும் வெளிவந்துள்ளன. (இச்சிறுகதை எழுதப்பட்ட ஆண்டும் தரப்படவில்லை)

தெணியானின் 'வாழத்துடிக்கிறாள்' சிறுகதையில் திருமணமாகி கணவனுடன் பாலியல் திருப்தி காணமுடியாத சிவகாமி விரகதாபத்தினால் வாடி ஒழுக்கப் பிறழ்வான சிற்றின்ப நுகர்தலில் ஈடுபடுவதை நியாயப்படுத்தி சித்திரிக்கப் பட்டிருக்கும்.

ஜோசப்பாலாவின் சிறுகதையானது திருமணவயதை தாண்டி முதிர் கன்னியாய் வாழும் பவானி தனக்காக வாழ்வதை விடுத்து, தாதிப்பயிற்சி பெற்று சமூகத்தின் தேவைக்காகத் தன்னை அர்ப்பணிப்பு செய்வதை சித்திரிக்கின்றது.

அடுத்து 'ஞாயிற்றுக்கிழமை' என்ற பெயரில் 1989 ஆம் ஆண்டு ஈழநாடு பத்திரிகையில் செம்பியன் செல்வன் எழுதிய சிறுகதையும், நாகேசு தர்மலிங்கம் எழுதிய சிறுகதையும் வெளி வந்துள்ளன. (எழுதிய ஆண்டு இல்லை)

செம்பியன் செல்வனின் சிறுகதை ஆனது கச்சேரியில் நிதிக்கிளையில் அக்கவுண்டனுக்கு அடுத்து நிலையில் இருக்கும் மயில்வாகனத்தார் லீவு நாளான ஞாயிற்றுக்கிழமை குவார்ட்டஸில் தண்ணி அடித்துவிட்டு பியோனுடன் ஏற்றத் தாழ்வின்றி பழகுவதாக தன்னை வெளிப்படுத்துகின்றார். மறுநாள் காலை பியோன் நடந்த உண்மையை போட்டுடைக்க அவனை மரியாதை இன்றி தரக்குறைவாய் பேசுவதை எடுத்தியம்புகின்றது.

இதற்கு எதிர்மறையாக அமைவது நாகேசு தர்மலிங்கத்தின் 'ஞாயிற்றுக்கிழமை' சிறுகதை. கொழும்பு கடை ஒன்றில் சிப்பந்தியாய் வேலை செய்யும் முருகவேள் ஞாயிற்றுக்கிழமை கூட லீவு கிடைக்காததால் சிறைத்தண்டனை என்று கூறி முதலாளியைத் திட்டித் தீர்க்கின்றான். காலப் போக்கில் முருகவேளும் முதலாளி ஆகியபோது பழைய முதலாளி செய்த அதே தவறை அவனும் செய்து தொழிலாளி களை சுரண்டுகின்றான்.

அடுத்த 'பலி' என்ற பெயரில் 1963ஆம் ஆண்டு சுதந்திரனில் மருதூர் பாரியின் சிறுகதையும், 1970ம் ஆண்டு சிந்தாமணியில் தி. ஞானசேகரனின் சிறுகதையும் வெளி வந்துள்ளன.

மருதூர் பாரியின் சிறுகதை குழந்தையின் வருத்தத்திற்காய் பண உதவி கேட்ட பாத்திமாவுக்கு உதவி செய்யப்போகும் போடியார் அவளை தனது காமவெறிக்கு பலியாக்குவதை சித்தரிக்கின்றது.

தி. ஞானசேகரனின் 'பலி' சிறுகதையில் கந்தையா கமக்காரனின் தயவில் அவரது தோட்டத்தில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட சாதியை சேர்ந்த வள்ளி அவரின் காமப்பசிக்கு இரையாவதை வெளிப்படுத்துகின்றது.

அடுத்து 'சிறை' என்ற பெயரில் சிறுகதை படைத்தவர் களாக துரைமனோகரன் மற்றும் ஜோசப்பாலா ஆகியோர் காணப்படுகின்றனர்.

1971இல் மல்லிகையில் வெளியான துரைமனோகரனின் சிறை சிறுகதையானது திருமணத்திற்கு முன்னர் பிரபல்யம் பெற்ற எழுத்தாளராய் விளங்கிய பேரின்பநாதன் பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம் என்ற சிறைக்குள் சிக்கித்தவித்து தனது படைப்பிலக்கியப் பயணத்தை தொடர முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்படுவதை எடுத்தியம்புகின்றது.

ஜோசப்பாலாவின் 'சிறை' சிறுகதை வீட்டில் தந்தையின் அளவுக்கு மீறிய கட்டுப்பாட்டினால் மனமுடைந்து அதை தகர்த்தெறிவதாய் சட்டியிலிருந்து அடுப்பில் விழும் இளம்பெண்ணில் துர்லபநிலையை வெளிப்படுத்துகின்றது.

இவைதவிர 'மனிதம்' என்ற பெயரில் மல்லிகையில் தெணியானின் சிறுகதையும் 2004 ஆம் ஆண்டு ஈழநாடு பத்திரிகையில் செங்கை ஆழியானின் சிறுகதையும் வெளி வந்துள்ளன. 'மனிதர்கள்' என்ற பெயரில் 1978ஆம் ஆண்டு ஈழநாடு பத்திரிகையின் ச. முருகானந்தனின் சிறுகதையும், 1995ஆம் ஆண்டு 'நான்' சஞ்சிகையில் செம்பியன் செல்வன் எழுதிய சிறுகதையும் வெளிவந்துள்ளன.

'புதைகுழி' என்ற பெயரில் 1998ஆம் ஆண்டு வெளிச்சம் இதழில் ச. முருகானந்தனின் சிறுகதையும். 2000ஆம் ஆண்டு தினக்குரலில் பத்மா சோமகாந்தனின் சிறுகதை ஒன்றும் ஒரே பெயர்களில் வெளிவந்தள்ளன. எஸ். பொவின் மித்ரபதிப்பகம் வெளியிட்ட 'பனியும் பனையும்' சிறுகதைத் தொகுதியில் லெ. முருகபூபதியினுடைய 'மழை' என்ற சிறுகதை வெளி வந்துள்ளது. இதே 'மழை' என்ற பெயரில் பன்னிரு எழுத்தாளர் களின் தொகுதியான 'இங்கிருந்து' சிறுகதை தொகுப்பில் தாட்சாயணியினுடைய சிறுகதை ஒன்றும் வெளிவந்துள்ளது.

'சொந்த மண்' என்ற பெயரில் 1998ஆம் ஆண்டு தினக் குரலில் சு. இராஜநாயகத்தின் சிறுகதையும் 2001ஆம் ஆண்டு அதே பெயரில் சிற்பி அவர்களின் சிறுகதையும் வெளி வந்துள்ளன.

1996 காலப்பகுதியில் 'சோதனை' என்ற பெயரில் தி. ஞானசேகரனின் சிறுகதையும், 2005 ஆடி – புரட்டாதி 'புலரி' சஞ்சிகையில் சி. கதிர்காமநாதனின் சிறுகதை ஒன்றும் இதே பெயரில் வெளிவந்துள்ளன.

முடிவாக ஈழத்துச் சிறுகதைகளில் ஒரே பெயரில் அமைந்த சிறுகதைகளை ஒரு ஒப்பியல் நோக்கில் ஆராய்வதற்காக இந்தக் கட்டுரை எழுதப்பட்டதே தவிர, ஒரு படைப்பாளியினுடைய சிறுகதைப் பெயரை பின்னால் வந்த ஏனைய படைப்பாளிகள் எவ்வாறெல்லாம் பயன்படுத்தி உள்ளனர் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்காக அல்ல. இது குறித்த விரிவான ஆராய்ச்சிக்கான ஓர் படிக்கல்லாகவே இக்கட்டுரையை கருத வேண்டும்.

*(இந்த ஆய்வுக்காக பயன்படுத்திய சிறுகதை தொகுப்பு களும் சஞ்சிகையும் வருமாறு – சுதந்திரன் சிறுகதைகள், ஈழத்து முன்னோடி சிறுகதைகள். மல்லிகைச் சிறுகதைகள், வரதர் கதைகள், தி. ஞானசேகரன் சிறுகதைகள், இரசிகமணி கனக செந்திநாதனின் 'வெண்சங்கு', சிற்பியின் 'சத்தியதரிசனம்', சு. வேயின் 'பாற்கடல்' செங்கை ஆழியானின் 'குந்தி இருக்க ஒரு குடிநிலம்', தெணியானின் 'மாத்துவேட்டி', செம்பியன் செல்வனின், 'சர்ப்பவியூகம்', பத்மா சோமகாந்தனின் 'வேள்வி மலர்கள்', ச. முருகானந்தனின் 'இது எங்கள் தேசம்', நாகேசு தர்மலிங்கத்தின் 'அந்நியம்' ஜோசப்பாலாவின் 'திருப்பம்', கே. வி. நடராஜனின் 'ஊரும் உலகமும்' யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் 'மனம் விந்தையானதுதான்', க. நவத்தின் 'உள்ளும் புறமும்', 'புலரி' ஆடி – புரட்டாதி 2005 இதழ், 'இங்கிருந்து', 'பனியும் பனையும்' 'போர்க்காலக் கதைகள்')*


## 'ஞானம்' சந்தா விபரம்

**உள்நாடு**

| | |
|---|---|
| தனிப் பிரதி | : **ரூபா 50/=** |
| ஆண்டுச் சந்தா | : **ரூபா 600/=** |
| ஆறு ஆண்டுச்சந்தா | : **ரூபா 3000/=** |
| ஆயுள் சந்தா | : **ரூபா 20000/=** |

சந்தா காசோலை மூலமாகவோ, மணியோடர் மூலமாகவோ அனுப்பலாம். மணியோடர் ***வெள்ளவத்தை*** தபால் நிலையத்தில் மாற்றக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

**இலகுவாக மேலதிகச் செலவின்றி சந்தா அனுப்பும் வழி :-**
உங்கள் பகுதியில் உள்ள ஹட்டன் நஷனல் வங்கியில்
**T. Gnanasekaran, Hatton National Bank - Wellawatte**
நடைமுறைக் கணக்கு இலக்கம் – 0090672606 என்ற கணக்கில் வைப்பு செய்து வங்கி ரசீதை எமக்கு அனுப்புதல் வேண்டும்.
**வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்ப : Swift Code : HBLILKLX**

**அனுப்ப வேண்டிய பெயர்/ முகவரி :**
**T. Gnanasekaran**
**Gnanam Branch Office**
3-B, 46 th Lane, Wellawatte.

**ஞானம் விளம்பர விகிதம்**

| | |
|---|---|
| பின் அட்டை | : **ரூபா 10000/=** |
| முன் உள் அட்டை | : **ரூபா 8000/=** |
| பின் உள் அட்டை | : **ரூபா 8000/=** |
| உள் முழுப்பக்கம் | : **ரூபா 5000/=** |
| உள் அரைப்பக்கம் | : **ரூபா 3000/=** |

| *வெளிநாடு* | ஓராண்டு | இரண்டு ஆண்டு | மூன்று ஆண்டு |
|---|---|---|---|
| **Australia (AU$)** | **35** | **70** | **100** |
| **Europe (• )** | **25** | **50** | **70** |
| **India (Indian Rs.)** | **500** | **950** | **1400** |
| **Malaysia (RM)** | **50** | **95** | **140** |
| **Canada ($)** | **35** | **70** | **100** |
| **UK (£)** | **15** | **30** | **40** |
| **Other (US $)** | **25** | **50** | **70** |

மூன்று சந்தாதாரர்களைச் சேர்த்துத் தருபவர்களுக்கு ஒரு வருடம் 'ஞானம்' இனாமாக அனுப்பப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஒளிப்பரண்

தாழை செல்வநாயகம்

"மாலினி! கெதியாச் சாப்பாட்டப்போடு... இண்டைக்கி கொஞ்சம் நேரத்தோட 'சிறாம்பிக்குப்' போகவேணும். இப்ப முன்னிருட்டுக்காலம், எண்டபடியா, மிருகசாதிகள் நேரத்தோட மடுவுக்கு வரும்... ரெண்டு மூணுநாளா நமக்கு நல்ல கறி கிடைக்கல்ல... இண்டைக்கி எப்படியும், ஏதாச்சும் மிருகசாதிகள், வந்துபடும்".

என்றவாறு, வாயிலிருந்த சுருட்டை அணைத்து, காதில் சொருகினான் நல்லதம்பி – அந்தச் சேனை வட்டையில், அவன் ஒருவன் தான், தீர்ந்த வெடிக்காறன்.

எந்த நாளும் இறைச்சி தின்பதால், அவனுக்கு கட்டுமஸ்தான உடற்கட்டு. தலையில் கொண்டை; 'தம்பானை' ஆதி வாசிகள் போலிருப்பான். 'ஊர்வரிகே வன்னி எத்தோ' மாதிரியான தோற்றம். இடுப்பில் சாரன் ஒன்றை மாத்திரம் உடுத்திருப்பான் –

கடைகண்ணிக்குச் செல்வதானால், மல்வேட்டியும், தோளில் சால்வையினையும் மாத்திரம் அணிந்து கொண்டு, சைக்கிளில் ஏறிடுவான். எதுவிதமான மதுக்குடிப்பழக்கமும், அவனிடம் இல்லை – வாய் நாற்றமடிக்காமல் இருக்கத்தான், இந்தச் சுருட்டை மாத்திரம், புகைக்கப் பழகிவிட்டதாக தனது இன சனங்களிடம் கூறுவான்.

அவனுக்குத்தெரியாது, சுருட்டுப்புகைப்பவர்களின் வாய்தான் நாற்றமடிக்கும் என்ற சங்கதி – அந்தச் சேனை வட்டையில், இறைச்சிக்குப் பஞ்சமில்லை. அந்த வட்டையில் உள்ள பொடியனுகள், இரண்டு மூன்று பேராகச் சேர்ந்து, வேட்டை நாய்களுடன், உடும்புக் காட்டிற்குச் செல்வார்கள். இன்று ஒரு கூட்டம் காட்டிற்குச் சென்றால், நாளைமறு கூட்டம், செல்வார்கள்.

'படிவெட்டியமலை'க் காட்டையும், 'நாகம்பூமலை'க் காட்டையும், சுற்றிவந்தால்போதும், பத்து உடும்புகளுக்குமேல், பிடித்து விடுவார்கள். அதற்குமேல் பிடிபடும் உடும்புகளை அவர்களால் சுமந்து கொண்டு வரமுடியாது, களைத்துப் போய்விடுவார்கள். பிடித்த உடும்புகளை, நாய்க்காறரின் வாடிகளுக்கும், தங்களுக்கும், பங்கிட்டுவிட்டு மிஞ்சிய உடும்புகளைப் பக்கத்து வாடிக்காறர்களுக்கு கொடுப்பார்கள்.

"மாலினி...! சோத்தக் குறைச்சிப்போடு, உடும்பு இறைச்சி போட்டு ஆக்கின கிளங்கு நசியல் கறில, கொஞ்சம் கூடப் போடு... அப்பதான் விடிய விடிய நிண்டு பிடிக்கும்" என்றான், நல்லதம்பி.

மயண்டையாவதற்குமுன்னர் ஒளிப்பரணில், ஏறிவிட வேண்டும். மிருகங்களுக்கு மனிதர்கள் நடமாடும், அசிப்புத் தெரிந்து விட்டால், அல்லது துவக்கின் மணம் அடித்து விட்டால் அந்தப் பக்கமும் வராது.

சேனைக்காடுகளில் உள்ளவர்களுக்கு குடிக்க குளிக்க நீர் பெறுவது என்பது முடியாத காரியம். நீரோடைகளை, ஊற்றுக்களை, அல்லது மடுகளை நாடித்தான் செல்லவேண்டும். 'காயானடிமடு', கரடிகுத்தினமடு, 'உதுமான்ட ஊத்து,' 'சிங்கன்ட ஊத்து' ஆகிய உற்றுக்களில், நீர்களுக்குப் பஞ்சமில்லை – பகலில் சேனைக்காரர்களுக்கும் இரவில் மிருகசாதிகளுக்கும் இந்த ஊற்றுக்கள் தான் கைகொடுப்பது

'சிங்கன்ட ஊற்றில்', எக்காலத்திலும் நீர் குறைவதில்லை. அதனைச் சுற்றிவர, நாவல்மரங்கள் உள்ளன. அந்த மரங்களின் மேல், நூறு அடி உயரமளவில் கம்புகளால் ஒளிப்பரண்கள் அமைக்கப்பட்டிருக்கும்.' பரணின் மேல்பகுதி ஓலைக் கிடுகுகளால், அல்லது இலை குழைகளால் வேயப்பட்டிருக்கும்.

நான்கு திசைகளுக்கும் நான்கு பரண்கள் அமைக்கப்பட்டிருக்கும். காற்று எந்தப்பக்கம் வீசுகின்றதோ அதற்கு எதிர்த் திசையில்தான் வெடிக்காறர்கள், ஒளித்துக் கொண்டிருப்பார்கள்.

"இண்டைக்கு... என்னோட, ஒளிப்பரணுக்குப்போக, ஆரிடி வாற?..." என்று சாப்பிட்டவாறு மாலினியிடம் கேட்டான், நல்லதம்பி.

கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்க, வெடிக்காற மஹத்தயா! நம்மட பக்கத்து வாடி பரிசாரியாரிடமகன், பரமன் தான் வாறானாம்! சாப்பிடுறானாம்" என்று தமாசாகக் கூறினாள் அவனது பத்தினி.

ஒளிப்பரணில் இருப்பவர்கள், எதுவும் கதைக்கமுடியாது. உரத்து மூச்சுக்கூடவிட முடியாது. ஊமைப்பாசைதான், கதைக்க வேண்டும்.

மடுவுக்கு தண்ணீர் குடிக்கவரும் மிருகங்களுக்கும் அதேபோன்று மௌனப் பாசைகள் தெரியும். வெடிக்காறர்களின் நடமாட்டத்தையறிந்துதான், அவையும் பயந்து பயந்து வரும்... ஒன்று குடித்து விட்டுச் செல்ல பின்னால் வந்து, மற்றது குடித்துவிட்டுச் செல்லும். மிருகங்கள், தண்ணீர் குடிக்க தனியனாக வரும், இணையலுடன் வரும், இல்லையெனில் குட்டிகளுடன் வரும்... பெரிய மிருகங்களான மரை மான் முதலியன அதிகாலை வேளையில், இருள்பிரியமுதல், மடுவுக்கு வந்து செல்லும்.

சிலவேளைகளில் பற்றைக் காட்டுக்குள் ஒளித்திருந்து விட்டு, வெடிக்காறர்கள் விடிய விடிய, பரணில் இருந்து விட்டு வேட்டை ஒன்றுமில்லையென அலுப்புடன் இறங்கிச் சென்ற பின்னரும் வந்து, மடுவில் தண்ணீர் குடித்து விட்டுச் செல்லும் – அவ்வளவு தந்திரம் படைத்த மிருகங்களும் உள்ளன.

நல்லதம்பியும், பரமனும், வாடியிலிருந்து கிளம்புவதற்கு ஆயத்தமானார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பரமா! வில்லுக்கத்திய எடுத்தநீயா?”

“ஓம், சித்தப்பா! இடுப்பில சொருகிற்றன்...”

“அஞ்சிகட்ட ரோச்ச மட்டும் எடு...!”

வெடிக்காறர்கள், இரண்டு ரோச்லைற்றுகளைப் பொருத்தி, ஐந்து பெற்றி போடுவதற்கு ஏற்றவாறு சரிப்பண்ணி தலையில் கட்டுவார்கள்.

ஒளிப்பரணில் போட்டு இருப்பதற்கு, வாடி மூலைக்குள் கிடந்த ஆளுக்கு ஒரு சணல் சாக்குகளையும், எடுத்துக் கமுக்கட்டினுள் இடுக்கிக் கொண்டார்கள்.

சுருட்டினைப் பற்றவைத்து, காற்றடிக்கும் திசையினைப் பார்த்து, பரணில் ஏறிவிட்டார்கள்.

அன்று அந்தக்காடு நிசப்தமான நிலையிலிருந்தது, “சில்லூறுகள்” மாத்திரம், மரத்திற்கு மரம் கத்திக் கொண்டிருந்தன.

கண்ணுக்குள் குத்தினால் கூட தெரியாத அளவிற்கு, இருட்டாகிவிட்டது. மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்குச் செல்லும் இரவுப்புகையிரதம், புணானை ஸ்ரேசனை நெருங்கிவிட்டது. இரவு பத்துமணியாகிவிட்டது. காடுகள் கலகலக்கும் சத்தம் கேட்கிறது. மரக் கொப்புகள், முறிந்து விழும் சப்தமும் கேட்கின்றது.

ஒளிப்பரணில் உள்ள இருவருக்கும் விளங்கிவிட்டது, “ஆளடியன்யானை” தான், வருகிறது என்ற சங்கதி. அந்த யானை கூட்டத்துடன் சேராது, தனியாகத்தான் காட்டில் நடமாடித்திரியும். அதன் காலில் ஒரு சங்கிலியும் உள்ளது. மரவாடி ஒன்றில், மரம் இழுத்த யானைக்கு, மதம் பிடித்து, ஓடி வந்த யானை என்று சிலர் கதைத்த ஞாபகம் – சேனைக் காட்டில் உள்ள கனபேர்களை அடித்து காலால் மிதித்து கொன்று, அட்டூழியங்கள் செய்த யானை அது.

‘காத்தான்’ ‘கண்டுமணியர்’ என்று இந்த யானையினால், கொல்லப்பட்டவர்களின், பட்டியலே உள்ளது.

பரமனின் கண்களிரண்டும் முண்டக்கண்களாகி வெளியில் வரும் நிலையிலிருந்தது. நல்லதம்பிக்குப் பயமில்லை. அவன் அனுபவசாலி – யானைகள் முன்னால் மேய்ந்து கொண்டிருக்கும்போது, அதன் பின்னால், அசிப்பில்லாமல் சென்றவன்.

இலேசாக பரமனை நோட்டம் விடுகிறான் நல்லதம்பி... பரமன் உமிரியை விழுங்கிய நிலையிலிருக்கிறான். பயப்படாதே என்று பரமனுக்குத்தலையால் சைகை செய்கிறான்.

பரமன் பிறந்து, பதினைந்து வருடங்களாகிவிட்டன. தனது வாழ்நாளில், தூரத்தே, யானைகள் கூட்டமாகச் செல்வதனைக் கவனித்திருக்கிறான். குளத்திற்கு வந்து, யானைகள் நீர்குடிப்பதனைப் பார்த்திருக்கிறான். யானைகளால் அடியுண்டு, மிதியுண்டு, செத்தவர்களைப் பார்த்திருக்கிறான். யானைகள், அழித்த சேனைகள், வாடிகளையெல்லாம் பார்த்திருக்கிறான். ஆனால் இப்போதுதான், ஆளடியான் யானையினைப் பரணிலிருந்து, காணப்போகிறான்.

தான், தீர்ந்த வெடிக்காறன், ஒருவனின் பக்கத்தில் இருப்பதில், ஒரு திருப்தி அவனுக்கு. அவனது நெஞ்சினுள் எழும், படக்... படக்... என்ற சப்தம், அவனுக்கு, மட்டுமன்றி, நல்லதம்பிக்கும் கேட்டது.

அவனுக்கு மூத்திரம் வரப்பார்க்கிறது... என்ன செய்யமுடியும்... அடக்கிக்கொண்டிருக்கிறான்.

துவக்கினுள் போட்டிருந்த ஆறாம் நப்பர் (எஸ்.ஜி) தோட்டாவைக்களட்டி இடுப்பில், சொருகிவிட்டு, துவக்கினுள் குண்டுத்தோட்டாவை, மாட்டினான், நல்லதம்பி.

யானை, கெக்களித்தது...

காடு கரம்பைகள், அதிர்ந்து போய்விட்டன. ஒளிப்பரனும், சிறிது ஆட்டம் கொடுத்தது.

பரமனது சாரன் நனைந்து விட்டது.

ஆளடியன் யானைக்கு மனிசமணம் அடித்திருக்க வேண்டும். நல்லதம்பி துவக்கின் வில்லினை, ஏற்றுவோமா? என நினைத்தான்.

இல்லை... பற்றைக்குள்ளிருந்து, யானை வெளிப்படட்டும் என்று காதினைக் கூர்மையாக்கி கொண்டிருந்தான்.

பரமனின் நிலை அந்தரங்கமாயிருந்தது. நாய்பிடித்த ‘உக்குளானின்’ நிலையிலிருந்தான். மலேரியாக் காய்ச்சல் பிடித்தவன்போல், நடுங்கிக் கொண்டிருந்தான். இதுதான் கடைசிமுறை. இனிமேல், ஒளிப்பரண் பக்கம், தலை வைத்துக்கூடப் படுப்பதில்லை எனத் தீர்மானித்து விட்டான்.

“திருக்கொன்றைக் காயை” உண்ட, கரடியின் நிலைபோலாகிவிட்டான். பரணிலிருந்து குதித்து, வாடிப்பக்கம், ஓடித்தப்பிவிடுவோமா? என்று அவனது மனம் மறுபக்கம் எண்ணியது.

யானையால் அடிபட்டுச் செத்தாலும் பறவாயில்லை. பரணிலிருந்து தரையில் குதித்து, கால் கை முறித்து, ஆஸ்பத்திரியில், சோறு தண்ணியில்லாமல், என்னால் படுக்க முடியுமா?

பிள்ளையார், யானையாக உருவெடுத்து வந்து, தனது தம்பி முருகனுக்கு கைகொடுத்து, வள்ளியைத் திருமணம் செய்ய உதவியர்.

பரமனும், வெள்ளிமலைப் பிள்ளையாரே! வெள்ளிமலைப் பிள்ளையாரே! என ஜெபித்துக் கொண்டிருந்தான்.

என்ன அதிசயம்!... எதுவித சத்தமும் இல்லை. யானை, அதே இடத்தில், உசும்பாமல் நின்று விட்டது.

‘முள்ளம் பன்றி’ ஒன்று, மடுவுக்குத் தண்ணீர் குடிக்க வந்து கொண்டிருக்கிறது. நல்லதம்பி பரமனின் முதுகில், மெதுவாகத்தட்டி, முள்ளம்பன்றி, தண்ணீர் குடிப்பதனைக் காட்டுகிறான்.

அது தண்ணீர் குடித்து விட்டுப் போகட்டும்... என்று, சைகை செய்கிறான். முள்ளம் பன்றி மட்டும்தான், காடுகளிலிருந்து முதன்முதலில் மேய்ச்சனுக்கு வெளிக்கிடும் பிராணி.

தண்ணீர்குடித்து விட்டு, முதுகை ஒருதரம், சிலிர்ப்பி விட்டுச் சென்று விட்டது.

ஆறாயிரம்வெள்ளி உச்சிக்கு வந்துவிட்டது. மணி இரவு பன்னிரெண்டாகிவிட்டது என நல்லதம்பிக்குத் தெரியும். காடுகளுக்கும், கடலுக்கும் செல்பவர்கள் வானத்து வெள்ளியையும், பொழுது கிளம்பி மறையும் பக்கங்களையும் மட்டிட்டுத்தான் தாம் நிற்கும் இடங்களை அறிவார்கள். நடுச்சோலைக் காட்டில், நிற்பவர்கள் மரத்தின் உச்சிக்கு ஏறி, பொழுதையும், வெள்ளியையும், வாகனங்களின், இரை வினையும் அவதானிப்பார்கள்.

அட்டகாசம், பண்ணி வந்த யானை, செவியினை, அடிக்கும் சத்தம், நல்லதம்பியின், செவிகளுக்கு கேட்டது.

காட்டினுள், சிறிய மிருகங்கள், நீர் நிலைகளுக்கு, தண்ணீர் தாகத்துடன், வரும் பொழுது, யானைகள் வழிவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிற்குமாம். அந்த யானையும் அதைத்தான் செய்து கொண்டிருந்தது.

இப்பொழுது, 'அணுங்கு' ஒன்று மடுவிற்கு, ஊர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

பரமன் 'கொட்டாவி' விடுகிறான்... நல்லதம்பி அவனை முறைத்துப் பார்க்கிறான். காற்றின் அசைவு குறைந்துவிட்டது. நுளம்புகள் கிணு... கிணு... என்ற சப்தத்துடன் படையெடுத்து வந்து கொண்டிருந்தன.

பரணிலிருப்பவர்கள் நுளம்பு கடித்தால், அடிக்க முடியாது. துரத்திவிடவேண்டும். பரமன் அவ்வாறு செய்து கொண்டிருந்தான்.

'கலப்பை வெள்ளி' அடிவானத்தை நெருங்கிவிட்டது. நான்கு மணிச்சாமமாகிவிட்டது. இன்னும் அரைமணி நேரத்தில் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு வரும் 'உதயதேவி' புகையிரதம், புணானை ஸ்டேசனுக்கு வந்துவிடும்.

'புலுட்டுமான்' ஒன்று தண்ணீர் குடிப்பதற்கு, மடுவில் இறங்குகின்றது. அதற்குப்பின்னால் அதன் இணை யனான, கலைமான், கொம்புகளை ஆட்டியவாறு, வருகின்றது.

தூங்கிக் கொண்டிருந்த பரமனை உசார்படுத்திவிட்டு, நல்லதம்பி தயாராகின்றான். இருட்டுவேளையிலும், அவனது ஆந்தைக்கண்களுக்கு, மடுவடியில், என்ன என்ன சம்பவங்கள் நடக்கின்றன என்ற சங்கதி புரிந்துவிடும். இவைகளையும் விட்டால் வேறு ஒன்றும் அம்பிடப் போவதில்லை. துவக்கினுள் கிடந்த குண்டுத் தோட்டாவைக் களட்டிவிட்டு, எஸ். ஜீ. தோட்டாவை மாட்டுகிறான்.

'ரோச்லைற்றை' துவக்குடன் அணைத்து, மான்களிரண்டிற்கும், குறிவைத்து வில்லினை ஏற்றி, இழுத்து விட்டான்.

'டுமீர்... என்ற சத்தமும், நெருப்பும், புகையும் எழுகின்றன...

பரணிலிருந்த பரமன்... "ஐயோ! கடித்து விட்டதே..." என்று சுருள்கின்றான்.

ஆளடியன் யானை காடுகளை முறித்து... ஓடும் சத்தம் கேட்டுக் கொண்டிருக்கின்றது. நல்லதம்பி, லைற்றினை, பரமனின் பக்கத்திற்கு, அடித்துப் பார்க்கிறான்.

உணர்ச்சியற்ற நிலையில் மயங்கியவாறு அவன் கிடந்தான். மூச்சு மாத்திரம்... வந்து... வந்து... போய்க்கொண்டிருந்தது.

அவன் படுத்த சணல்சாக்கினை நல்லதம்பி நோட்டம் விடுகின்றான். உள்ளே சாக்கு மூலைக்குள் 'கருவளலைப் பாம்பு ஒன்று, படுத்துக் கிடந்தது...'

'உதயதேவி' ஸ்டேசனுக்கு வந்துவிட்டது. பரமனைத் தோளிலிருந்து இறக்கி, அதற்குள் கிடத்துகின்றான்...

மட்டக்களப்பு நோக்கி, புகையிரதம் பயணித்துக் கொண்டிருக்கிறது. துவக்கு, ஒளிப்பரணில், கவனிப்பாரற்ற நிலையில் கிடக்கிறது... ஊத்து மடுவடியில், மான்களிரண்டும், செத்துக்கிடக்கின்றன...

(கற்பனை)

## குறிப்பு :

1. சிறாம்பி – வரிச்சிக்கம்புகளால் கட்டப்படுவது – பரணின் மறுபெயர்.
2. தம்பானை – மகியங்கணையில் உள்ள, வேடுவர் கிராமமொன்று.
3. அசிப்பு – நடமாட்டம்.
4. ஒளிப்பரண் – மறைந்திருக்கும் இடம்.
5. கெக்களிப்பு – யானைகளின் உறுமல்சத்தம்.
6. இணையன் – ஆண், பெண் இரண்டினதும் ஜோடி.
7. கருவளலை – கரிய, மெல்லிய, விசப்பாம்பு இனம்.
8. படிவெட்டினமலை, நாகம்பூமலை – கோறளைப்பற்று மேற்குப் பிரதேசப்பிரிவில் உள்ள பொலநறுவை இராசதானியுடன் சம்பந்தப்பட்ட மலைகள். இதில் கல்வெட்டுக்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பின் தாய்வழி உறவுக்குடும்ப முறையும் சமூக அமைப்பும்

*- கணநாத் ஒபயசேகரவின் கருத்துக்கள்*
*தமிழில் : க. சண்முகலிங்கம்-*

மட்டக்களப்பு சமூக அமைப்புப்பற்றி ஆராய்ந்தவர்களுள் கணநாத் ஒபயசேகர என்னும் மானிடவியலாளர் முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டியவர். 1960களின் நடுப்பகுதியிலும் 1960களின் பிற்பகுதியிலும் மட்டக்களப்பில் கள ஆய்வு வேலைகளை கணநாத் ஒபயசேகர நிகழ்த்தினார். The Cult of Goddess Pattini (பத்தினி வழிபாடு) என்னும் இவரது ஆய்வு நூலின் அத்தியாயம் 15 மட்டக்களப்பு பற்றிய தகவல்களைக் கொண்டது. 35 வருடங்களுக்கு முன்னர் தாம் நிகழ்த்திய களஆய்வுத் தரவுகளையும் பிற ஆய்வாளர்கள் தெரிவித்த கருத்துக்களையும் ஆதாரமாகக் கொண்டு 2004ம் ஆண்டில் இவர் மட்டக்களப்பின் தாய்வழிக்குடும்ப முறையும் சமூக அமைப்பும் என்னும் பொருளில் எழுதியிருப்பவை இக்கட்டுரையில் சுருக்கமாகத் தரப்படுகின்றன.

### மட்டக்களப்பின் திருமண முறையும் 'குடி' முறையும், சாதி அமைப்பும்

மச்சான் – மச்சாள் திருமணம் திராவிட திருமண உறவு முறையின் விசேட அம்சம். இம்முறையில் தாயின் சகோதரனின் மகளை அல்லது தந்தையின் சகோதரியின் மகளை ஒரு ஆடவன் மணக்கலாம். இந்த மச்சான் – மச்சாள் திருமண முறை இலங்கையின் சிங்களவரிடையிலும் முஸ்லிம்களிடையிலும் உள்ளது. இருந்தபோதும் இலங்கையின் தென் பகுதியில் சிங்களவரிடையிலும் முஸ்லிம்களிடையும் திராவிடர்களின் மச்சான் – மச்சாள் திருமணமுறை இப்போது மறைந்து கொண்டு போகிறது. முஸ்லிம்களைப் பொறுத்தவரை மச்சான் – மச்சாள் திருமணம் முஸ்லிம் பண்பாட்டிற்கு அந்நியமானது. ஏனெனில் மத்திய கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் தந்தையின் சகோதரனின் மகளை திருமணம் செய்யும் வழக்கத்தைக் கொண்டவர்கள். ஆனால் இலங்கை மக்களிடை இது தகாப்புணர்ச்சி என விலக்கப்பட்ட ஒன்றாகும். பண்பாட்டுத் தளத்தில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே சில வேறுபாடுகள் உள்ளன. இந்தியாவில் உள்ளது போல் இலங்கையில் அதிக எண்ணிக்கையான சாதிகளும் உட்சாதிகளும் இல்லை. சிங்களவரிடமும் தமிழர்களிடமும் உள்ள சாதிகள் எண்ணிக்கையில் சிலவே. அத்தோடு சைத்திரியர் என்ற வம்சம் இங்கு கிடையாது. பிராமணர்களும் இங்கு கவனத்தில் எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு பிரிவாக இல்லை. வட இலங்கையில் பிராமணர் சிறு தொகையினர்.

நால்வருண முறையில் வேளாளர்கள் சூத்திரர்களே. சிங்களப் பகுதிகளில் முற்காலத்தில் குடியேறிய பிராமணர்களும் காலப்போக்கில் நிலத்தை உழுது பயிர்செய்பவர்களாக மாறி கொவிகம என்ற சிங்களச் சாதியுடன் சங்கமமாகி விட்டனர். யாழ்ப்பாணத்தில் வேளாளரும் சிங்களப்பகுதியில் கொவிகம என்னும் சாதியும் மேலாண்மைச் சாதிகளாகும்.

சிங்களவர் வாழும் பகுதிகளின் கரையோர பிரதேசங்களில் 'கராவ' என்ற சாதியினர் கணிசமான தொகையினர் உள்ளனர். தமிழ்ப்பகுதிகளில் 'கரையார்' சாதி உள்ளனர். தமிழ்ப்பகுதிகளின் 'கரையார்' சாதிக்கு ஒப்பானவர்கள் தான் இந்தக் கராவசாதி. கராவ – கரையார் யாவரும் மீன்பிடிப்பவர்கள் என்று நினைப்பது தவறு. இவர்கள் கடலோடிகளாகவும், போர்வீரர்களாகவும் வேறு பல தொழில்களில் ஈடுபட்டோராயும் இருந்தனர். சிங்களப் பகுதியில் 'இராஜகாரியம்' என்னும் சேவை முறை சிங்கள அரசர் காலத்தில் இருந்தது. கராவ சாதியினர் இராஜகாரிய முறைக்கு உட்படாதவர்களாக இருந்தனர். அவர்களுக்கு சேவைகளைச் செய்யும் சில சாதிகளும் இருந்தன. போர்த்துக்கீசர் காலத்தில் கராவ சாதியினரில் பெரும் தொகையானோர் கத்தோலிக்கர்களாக மாறினர். தமிழ்ப்பகுதிகளிலும் கரையோரங்களில் வாழ்ந்தவர்களான கரையார்களிடம் கத்தோலிக்கம் வேகமாகப் பரவியது. இவர்களை மதம் மாற்றியது போர்த்துக்கீசர்களுக்கு தம் அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்கு உதவியது. யுத்தங்களின் போது கராவ சாதியினரும், கரையாரும் போர் வீரர்களாகப் பயன்பட்டனர். மீன்பிடித்தொழிலுக்கான பாதுகாப்பும் இவர்களுக்குக் கிடைத்தது. பிரிட்டிஷ் ஆட்சியின் போது சிங்களப்பகுதிகளின் கராவ சாதியினர் வர்த்தக தொழில் முயற்சிகளில் முன்னேறிப் பெரும் பணக்காரர் ஆகினர். இது போன்ற வளர்ச்சி தமிழர் பகுதிகளில் நிகழவில்லை.

### முக்கிய அம்சங்கள்

பிற பகுதிகளின் சாதிக்கட்டமைப்பில் இருந்து மட்டக்களப்பு சில அம்சங்களில் அடிப்படை வேறுபாட்டைக் கொண்டுள்ளது.

1. முக்குவர்சாதி இப்பகுதியின் மேலாண்மைச் சாதியாக உள்ளது.
2. மிக அண்மைக்காலம் வரை கோவில் பூசைகளில் பிராமணர் பங்குபற்றும் வழமை மட்டக்களப்பில் இருக்கவில்லை. வீரசைவம் எனப்படும் சீர்திருத்த வாத சமயப் பிரிவின் குருக்கள் பூசகர்களாக இங்கு இருந்தனர். கி.பி 12ம் நூற்றாண்டில் இப்பிரிவினர் மட்டக்களப்பின் சமய வாழ்வில் இடம் பிடித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மக்ஜில்வ்றே கருத்துப்படி மட்டக்களப்பில் இன்று முக்குவர், வேளாளர், குருக்கள் என்ற மூன்று பிரிவினரும் ஒருங்கிணைந்து மேலாண்மைச் சாதிகளாக உள்ளனர். மட்டக்களப்பில் பல சேவைச் சாதிகளும் உள்ளன.

4. மட்டக்களப்பின் தாய்வழிக் குடும்பமுறையிலான 'குடி' முறை அப்பகுதிக்கே உரிய சிறப்பு இயல்பாக உள்ளது. இலங்கையின் பிற பகுதிகள் யாவற்றிலும் தாய்வழி, தந்தை வழி என்ற இருவழிகளின் கலப்பான இருபக்க உறவுமுறை (Bi-Lateral Kinship) உள்ளது. அவற்றில் தந்தை வழியின் அழுத்தம் கூடியதாய் உள்ளது. மட்டக்களப்பின் 'குடி' முறை தாய் வழி முறையாகும். ஆச்சரியத்திற்குரிய இன்னொரு விடயம் மட்டக்களப்பு முஸ்லிம்களிடமும் தமிழர்களிடம் காணப்படும் குடிமுறை இருப்பதுதான். கணவன் தனது மனைவியின் வீட்டில் வதியும் வழக்கம் (Uxorilocal Residence) மட்டக்களப்பில் உள்ளது. மலாயாவின் நெகிரிசெம்பிளான் பகுதி முஸ்லிம்களிடமும், சுமாத்திரா தீவின் மென்கபோ (Menangkabau) முஸ்லிம்களிடமும் இதுபோன்ற தாய்வழி குடிமுறை அம்சங்கள் இருந்தபோதும் முஸ்லிம்களிடை தந்தைவழிக் குடும்பமுறையே செல்வாக்குடையதாக உலகெங்கும் காணப்படுகிறது. மட்டக்களப்பு முஸ்லிம்களின் தாய்வழிக் குடிமுறை ஒரு புதுமை. கேரளாவின் மாப்பிளை முஸ்லிம்களிடையிலும் தாய் வழிமுறை உள்ளதும் ஒரு விதிவிலக்கே. மட்டக்களப்பு முஸ்லிம்கள் தாய்வழிக்குடி, கணவன் மனைவி வீட்டில் குடியிருத்தல். மச்சான் – மச்சாள் திருமணம் என்ற புதுமைகளையும் ஒருசேர ஏற்றுள்ள ஒரு முஸ்லிம் சமூகமாக உள்ளனர்.

**தாய் வழிமுறை**

கேரளாவின் நாயர்களின் தரவாடு முறை தாய்வழி முறைகளுள் மிகவும் பிரபலமானது. மட்டக்களப்பின் உறவு முறை தரவாடு முறையில் இருந்து வித்தியாசமானது. தரவாடு முறையில் தாய்வழிக் குடும்பம் நிலத்தை கூட்டு உடமையாக கொண்டிருக்கும் தனி அலகாக செயற்படும். ரோமன் டச்சு சட்டம், ஆங்கிலச் சட்டம் ஆகியன புகுந்து மட்டக்களப்பின் தாய் வழிச்சொத்துரிமை முறையை சிதைத்துவிட்டன என கணநாத் ஒபயசேகர கூறுகிறார்.

சிங்கள சமூகத்தை போலல்லாது மட்டக்களப்புத் தமிழ் சமூகத்தில் பெண்களுக்கு சீதனம் கொடுத்தல் கட்டாயமானது. சொந்த மச்சாளை மணம் புரியும் போதும் திருமணத்தின் போது சீதனம் பெண்ணிற்கு கொடுக்க வேண்டும். ஆகவே இங்கு மூன்று விடயங்கள் ஒன்று சேரும் நிலை உள்ளது. (1) பெண்ணின் பெற்றார் பெண்ணிற்கு சீதனம் கொடுத்தல். (2) பெண் வீட்டிலேயே ஆண் தங்குதல். (3) மச்சாள் – மச்சான் திருமணம். குழப்பம் மலிந்த இக்காலத்தில் மணம் முடித்த ஆண்கள் மட்டக்களப்பை விட்டு இடம்பெயர்கிறார்கள். ஓரிடத்தில் ஒரே கிராமத்திற்குள் தங்கிவிடும் சகோதரிகள் சொத்தின் உடமையாளர்களாகவும் தம் அலுவல்களைத்தாமே கவனிப்பவர்களாகவும் உள்ளனர்.

தாய் வழிச்சகோதரிகள் அடுத்தடுத்த வீடுகளில் ஒருங்கே வாழ்வதும், சொத்தின் உடமையாளர்களாய் பெண்கள் இருப்பதும் அவர்களுக்கு ஒரு பலத்தை கொடுப்பதாய் இருக்கக் கூடும் என ஒபயசேகர குறிப்பிடுகிறார். மட்டக்களப்பின் எல்லாச்சாதித் தாய் வழிக்குடிகள் பற்றியும் இதுபற்றிய நிலையை உறுதியாகச் சொல்வதற்கு தம்மிடம் போதிய தரவுகள் இல்லையென்றும் கூறுகிறார் (2004).

**குடிகள்**

தம்பிலுவில், பட்டிமேடு, வீரமுனை, காரைதீவு ஆகிய கிராமங்களில் தாம் 1960களில் கள ஆய்வு செய்ததாக கூறும் ஒபயசேகர தம்பிலுவில் கிராமம் பற்றிய விபரங்களை அடுத்துத் தருகிறார். தம்பிலுவில் வேளாளர் பெரும்பான்மையாக உள்ள கிராமம். இங்கு சனத்தொகையின் 90% வேளாளர், மீதி 10% சேவைச்சாதிகளான தட்டார், கொல்லர், வண்ணார், அம்பட்டர் ஆகியோர் உள்ளனர். இச்சாதிகள் ஒவ்வொன்றும் தத்தம் சாதிக்குள்ளேயே திருமணம் செய்வர். சாதிக்கு உள்ளே உள்ள குடிகள் புறமணம் செய்யும் குழுக்களாகும். மட்டக்களப்பில் ஏழுகுடிகள் அமைப்பு உள்ளதை மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. 'ஏழு' என்ற எண் நல்லது என்ற நம்பிக்கையால் போலும் ஏழுகுடி என்ற வழக்கு வந்தது. உண்மையில் தம்பிலுவில் வேளாளர்களிடம் 12 குடிகள் உள்ளன. பன்னிரண்டு குடிகளின் பெயர்கள் வருமாறு. முதல் மூன்று குடிகளும் ஏறக்குறைய ஒரே தராதரம் உடையவை.

- A1 கந்தன்குடி, கட்டபட்டன் குடி – இவை இரண்டையும் மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகிறது.
- A2 குருக்கள் குடி – மக்ஜில்வறே இதனை வேறு சாதியாக குறிப்பிடுகிறார்.
- A3 செட்டிகுடி – (முற்காலத்தில் வணிகராக இருந்தனர். இப்போது விவசாயம் செய்கின்றனர்)
- 2. குரகலப்பன் குடி (இதன் தோற்றம் பற்றிய கதைகள் தெளிவாக இல்லை)
- 3. மழவராசன் குடி
- 4. முன்னங்கைச்சாவடி குடி – இக்குடியின் பெண்கள் ஆறு காப்புக்களை அணிவர்
- 5. பணிக்கர் குடி – யானைபிடிப்போர். இத்தொழில் இன்று வழக்கில் இல்லை.
- 6. காரிவேலிகுடி
- 7. சிங்களக் குடி
- 8. வைத்தியன் குடி
- 9. வேடர்குடி

இக்குடிகளின் பெயர்களும் அவற்றின் பொருளும் அவற்றோடு தொடர்புடைய தொழில்களும் இன்று முக்கியமிழந்து போய் விட்டன. இக்குடிகள் யாவும் வேளாளர் சாதிக்குள் அடங்கும் விவசாயிகளாக உள்ளனர். குடிகள் பற்றிய இரண்டு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டியவை. (1) இக்குடிகள் உபசாதிகள் அல்லது உட்சாதிகளேயாகும். (2) குடிகளின் தோற்றம் பற்றிய தகவல்கள் சில வரலாற்று உண்மைகளைக் கொண்டுள்ளன. 'சிங்களக்குடி', 'வேடர்குடி' என்பன இங்கு குடியேறிய தமிழர்களுடன் வேறு இரு இனக்குழுமங்கள் கலப்புற்றதை எடுத்துக் காட்டுகின்றன. தமிழகத்தில் செட்டிகள் தனியான சாதி, மட்டக்களப்பில் குடியேறிய செட்டிகள் வேளாளருடன் கலந்து வேளாளராயினர். சிங்களப் பகுதிகளிலும் இவ்விதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டிகள் கொவிகம சாதியுடன் கலந்தனர். ஹெட்டி ஆராய்ச்சி, ஹெட்டிகே, லதுவஹெட்டி ஆகிய பெயர்கள் சிங்களவரிடை உள்ளன. இப்பெயர்கள் செட்டிகளுடன் உள்ள உறவை எடுத்துக் காட்டுவன. 'வேடர்குடி'க்கு அடுத்த நிலையில் ஏன் 'வைத்திகுடி' உள்ளது என்பது சிந்திக்க வேண்டியது. உடலை அறுவை செய்தல், அதனால் இரத்தம் முதலிய தூய்மை யற்ற பொருட்களுடனும் மரணத்துடனும் சம்பந்தமுறுதல் வைத்தியம் வேட்டை என்ற இரு தொழிலுக்கும் பொதுவான தால் ஆகலாம் என்ற ஊகத்தைத் தெரிவிக்கிறார் ஒபயசேகர.

சாதிகள், குடிகள் கட்டமைப்பில் நெகிழ்ச்சித் தன்மையும், ஒரு சீரமைப்பும் வெளிப்படுகிறது என்றும் கூறுகிறார்.

## கண்ணகை அம்மன் கோவில்கள்

தாய்வழிக்குடி ஆதியில் நிலத்தை கூட்டாக உடமை கொள்ளும் அலகாக இருந்திருக்க வேண்டும். இன்று அது அப்படியில்லை. தனித்தனிக் குடும்பங்களே உடமை கொண் டிருக்கின்றன என்று கூற வேண்டும். இந்நிலையில் தாய் வழிக் குடிமுறை சமூக அமைப்பில் இன்று என்ன பங்கைப் பெறுகின்றது? என்ற கேள்வியை ஒபயசேகர எழுப்புகிறார். கோவில்களின் வண்ணக்கர்களை குடிகள் தெரிந்து அனுப்புகின்றனர். வண்ணக்கர்கள் கோவில் நிர்வாகத்தில் பங்கு பெறுகின்றனர். இது அவர்களின் பரம்பரை உரிமையும் கடமையும் ஆகும். முஸ்லிம்களிடை 'மரைக்காயர்' என்றும் சிங்களவரிடை 'பசநாயக்க' என்றும் அழைக்கப்படும் கோவில் முகாமை வேலை தொடர்பான பதவிப் பெயர்கள் 'வண்ணக்கர்' என்பதற்கு ஒத்தனவாகும்.

தம்பிலுவில் கண்ணகை அம்மன் கோவிலின் 'வைகாசிச் சடங்கு' பற்றிய விபரங்களை ஒபயசேகர விபரிக்கிறார். வெவ்வேறு குடிகளின் பங்கு பற்றியும் எடுத்துரைக்கின்றார். அவர் குறிப்பிடும் முக்கிய விடயங்கள் சிலவற்றை மட்டும் இங்கே கூறுவோம்.

01. கண்ணகை அம்மன் கோவிலில் மலவராசன் குடியைச் சேர்ந்த வேளாளசாதி கப்புவனார் (சிங்களத்தில் கப்புறால) பூசை செய்கிறார். இக்கோவிலில் மட்டக் களப்பின் குருக்கள் சாதியினர் பூசை செய்வதில்லை. அவர்கள் சமஸ்கிருத மயப்பட்ட பிற கோவில்களில் (கண்ணகை அம்மன் அல்லாத) பூசை செய்வார்கள்.
02. சிங்கள மக்களிடை பத்தினி வழிபாடு பரவலாக உள்ளது. தமிழர்களின் கண்ணகை வழிபாடு இதில் இருந்து சில அம்சங்களில் வேறுபடுகிறது. 'குளிர்த்தி' குளிர்வித்தல் என்ற கருத்துடைய சொல் ஆகும். குளிர்த்திச் சடங்கின் 'பொங்கல்' தொற்று நோய்களைத் தடுப்பதற்காக கண்ணகையை குளிர்த்தி செய்வதற்காக நடைபெறும். சிங்களவர்கள் பத்தினி வழிபாட் டில் 'குளிர்த்தி' இல்லை. தீமிதிப்பு தீர்த்தம் (நீராடல்) என்பன சிங்களவரிடம் உள்ள சடங்குகள். இவை 'தோஷம்' நீக்கும் சடங்குகள்.
03. பத்தினி வழிபாட்டோடு தொடர்புடைய சடங்குமுறை நாடகங்கள் சிங்களவரிடம் உண்டு. மட்டக்களப்பில் கண்ணகி வழிபாட்டோடு தொடர்புடைய சடங்கு நாடகங்கள் இல்லை. அத்தோடு மட்டக்களப்பின் சடங்குகளில் புனிதத்தன்மையும் பக்தியும் வெளிப்படும்.
04. தேங்காய் அடித்தல், கொம்பு விளையாட்டு என்பன எதிர் எதிரான (வடசேரி, தென்சேரி) இரு பக்கங்களிடையான போட்டி, விறைப்பு நிலை என்பனவற்றின் வெளிப் பாடாகும். சிங்களவரிடையும் இது போன்ற விளையாட்டுக் கள் உள்ளன. சடங்கு விளையாட்டுக்களில் இடம்பெறும் ஆபாச பேச்சுக்கள் வெட்கக் கேடான வழக்கமாக இன்று கருதப்படுகிறது. படித்தவர்கள் இந்த விளையாட்டுக்கள் நடத்தக்கூடாது என்று கருதுகிறார்கள். சிங்களவ ரிடையும் இந்தப் போக்கு உள்ளது.

தமிழர்களின் நாட்டார் சமயம் வேதநெறியுடனோ சைவசித்தாந்தத்துடனோ சம்பந்தப்பட்டதல்ல என்றும் ஒபயசேகர கூறுகிறார். பத்தினி, திரௌபதை, பகவதி, காளி போன்ற தெய்வங்களுக்கான கோவில்களில் பிரதான தெய்வம் பெண்தெய்வமே – இக் கோவில்களில் ஆண் தெய்வங்களும் வழிபடப்படுவது உண்டு. சில இடங்களில் விநாயகருக்கு (கணேசர்) அம்மன் கோவிலில் முதலிடம் வழங்கப்படுவதும் உண்டு. காரைதீவு கோவிலில் 1960ம் ஆண்டின் வழிபாட்டு முறைகளில் தெய்வங்களின் வரிசை ஒழுங்கு இவ்வாறு இருந்தது.

விநாயகர் (கணேசர்)
கண்ணகை அம்மன்
கோவலன்
மாதவி (மாதேவி)
ஏழு கன்னியர்கள்
பாண்டியன் தேவி
சரஸ்வதி
மாரியம்மன்
பத்தினியின் 12000 பணியாட்கள்

சிவன், விஷ்ணு, முருகன் ஆகிய தெய்வங்களின் வழிபாடு பிற கோவில்களில் நடைபெறும். இக்கடவுளர்களுக்கு 'மடை' கொடுப்பது இல்லை. விநாயகருக்கு மடைகொடுப்பது உண்டா யினும் பொதுவாக ஆண்தெய்வங்களுக்கு மடை இல்லை. கோவலனுக்கும் மடை கொடுப்பதில்லை. கிராம மட்டத்தில் உள்ள பிரதான கோவில் அம்மன் கோவிலாகும். கந்தசாமி கோவில்கள் பலகிராமங்களுக்குப் பொதுவான தேசத்துக் கோவில்களாகும்.

## ஆதாரம்

The Matrilineal east Coast,
Circa 1968:
Nostalgia and Post - Nostalgia
In our Troubled Time
கலாநிதி நீலன் நினைவுச் சொற்பொழிவு
2004ம் ஆண்டு யூலை 29ம் திகதி நிகழ்த்தப்பட்டது. இச் சொற்பொழிவு 32 பக்கங்கள் உடைய சிறுநூலாக ICES நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. இச்சிறு பிரசுரத்தில் இருந்து கணநாத் ஒபயசேகரவின் கருத்துக்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# நான் நிழலானால்...

ஸ்ரீரஞ்சனி

இடியும் மின்னலுமாக சிடுசிடுத்த பெருமழை ஓய்ந்து போக வந்த அமைதி அழகாக ரசிக்கக் கூடியதாக இருந்தது. வளவில் இருந்த மரங்கள் யாவும் மழையில் நனைந்து சிலிர்த்து ஒரு புத்துணர்வுடன் நிற்கின்றன. தெருக்கூட நீரூற்றி அழகாக கழுவப்பட்டிருப்பது போன்ற தோற்றத்தில் மிளிர்கிறது.

என் மனமும் போராடிப் போராடித் தெளிவு பெற்றிருக்கிறது. கையில் வைத்திருந்த என் மருமகளின் கடிதத்தை மீள வாசிக்கிறேன். "மாமி, நன்கு யோசித்து முடிவு எடுங்கோ, உங்களுக்கு எது பிடிக்குதோ அதைச் செய்யுங்கோ, ஆனால் எடுக்கும் முடிவை விரைவாக எடுங்கோ. நீங்கள் இங்கிருந்து போய் 6 மாதங்களுக்கு மேலாகிவிட்டதால் இனியும் தாமதிப்பது விசா புதிப்பிப்பதில் பிரச்சனையைத் தரும். ஒரு லட்சம் ரூபா அனுப்பியுள்ளோம். நீங்கள் வரவில்லை என்றால் மாமா ஆசைப்படி அதற்கு ஒரு கார் வாங்குங்கோ..."

பத்து மாதங்களின் முன் கனடா போவதற்கு என வீட்டை விட்டு வெளிக்கிட்ட போது என்மனம் கனவுகளைச் சுமந்து போகவில்லை, மாறாக குழப்பங்களையும் போராட்டங்களையுமே சுமந்து சென்றது. யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பேப்பர்கள் எல்லாம் போட்டி போட்டு கதைகதையாக சொன்னது என் மனதில் பெரிய பாதிப்பை உண்டாக்கியது உண்மையே! எங்கோ, ஏதோ ஒரு காரணத்துக்காக ஒரு விரிசல் ஏற்பட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றவில்லை. என்னைக் கூப்பிடுவது பிள்ளை பார்க்கவும், சமைக்கவும்தான் என்று என்மனம் முடிவு கட்டிவிட்டது. பிள்ளைகள் சொல்வதற்கு உடன்படாவிட்டால் சமூக உதவியும் முதியோர் இல்லங்களும் தான் வரப்பிரசாதம் என்றே என் மூளையில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அதற்காக தற்பாதுகாப்புத் திட்டம் போடுவதிலேயே என் சக்தி முழுவதையும் விரயம் செய்தேன்.



பிள்ளைகளுக்கு நான் வேலைக்காரியாக இருக்கப் போவதில்லை, உழைத்து சீவித்த நான் அரசாங்கத்தின் பிச்சைப் பணத்தில் வாழப்போவதில்லை என்ற வைராக்கிய உணர்வுடனேயே கனடா விமான நிலையத்தில் காலடி வைத்தேன்.

அந்த நாள் இன்னும் மனதில் பசுமையாக இருக்கிறது. ஆறு மாதக்குழந்தை எழில் மருமகளின் கையில் இருந்து இறங்குவதற்கு அடம் பிடித்துக் கொண்டிருந்தான். மூன்று வயது மகள் மாதுரி தன்னுடன் எங்கோ வருமாறு என் மகனின் கையை இழுத்துக் கொண்டிருந்தாள். எப்படிப் பயணம் என ஆர்வமாக மகன் கேட்க அந்நியரைப் பார்ப்பது போல் பேரப்பிள்ளைகள். "தம்பி என்னால் வேலை செய்ய முடியாது, என்னிடம் எதுவுமே கேட்கக் கூடாது, நாடு பிடியாவிட்டால் உடனே ஊருக்கு போய்விடுவேன்" என்று அச்சாரம் வைத்தேன். "சரி உதைப்பிறகு கதைக்கலாம் இப்ப பயணத்தைப் பற்றிச் சொல்லு" என்றார் என் கணவர். "அம்மா நீங்கள் எங்களுக்கு ஒன்றும் செய்யத்தேவையில்லை ஒன்றுக்கும் யோசிக்காதேயுங்கோ" இது என் மகன்

அதன் படி யாருமே எதைச் செய்யச் சொல்லியும் என்னிடம் கேட்பதில்லை. காலையில் அவசர அவசரமாகச் சமைத்து வைத்துவிட்டுப் போவார்கள். மாலை வந்து அதே அவசரத்துடன் அடுத்த சமையல் செய்வார்கள். பின் தமது பிள்ளைகளின் வேலை பார்த்து, அவர்களின் பாடங்களில் உதவி, பிள்ளைகளைப் படுக்க வைக்க பொழுது போய்விடும். சனி, ஞாயிறும் பிரத்தியேக வகுப்புக்கள், கடைக்குப் போனது, உடுப்புத் தோய்ப்பது, வீடு துப்பரவு செய்வது என்று கழிந்து விடும்.

என் பார்வையில் யாருமே என்னையோ, என் கணவனையோ பொருட்டாக நினைத்ததாகத் தெரியவில்லை. நாம் ஏன் இப்படி ஒரு சடப்பொருளாக நாலு சுவருக்குள் சீவிக்க வேணும். எங்கடை ஊரில் என்றால் கடைசி காலாற நாலு நடையாவது வளவுக்குள் நடக்கலாம். நாலு பயிரை நடலாம், நாலு பேரோடை கதைக்கலாம். கோயில், குளம் என்று ஆசைக்குப் போகலாம். இது என்ன வாழ்க்கை. கனடாவில் காரும் கட்டிடமும் தான் கண்ட மிச்சம் என்று மனதுள் ஆவேசம் எழுந்தது. நாங்கள் ஊருக்குப் போகப் போகிறோம் என அடம் பிடித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருட வாழ்வு ஒரு யுகம் போலிருந்தது. கடுகடுக்கும் குளிரில் pants, boots, hood என்று எல்லாம் மாட்டி பேரப்பிள்ளைகளை பாடசாலைக்கோ, விளையாட்டு மைதானத்துக்கோ கூட்டித்திரியும் என் வயது ஒத்தவர்களைப் பார்க்கும் போது எனக்கு பரிதாபமாக இருக்கும். காசுக்கு வழியில்லாததால் கஷ்டப்படுகுதுகள் என்றே எண்ணத் தோன்றியது.

எங்களுக்கு எங்கடை காசு இருக்கும் போது நாம் யாருக்கும் அடிமைகள் அல்ல என்று வீம்பு பேசியதை நினைக்க இப்ப வெட்கமாக இருக்கிறது. அந்த முதியவர்கள் பேரப்பிள்ளைகளின் பொறுப்பை சந்தோஷமாகக் கூட செய்திருக்கலாம். நான் அல்லாத என்னை எனக்குள் நான் தேடித் தேடிப் பார்த்து ஏமாந்து போனேன் நான்! இங்கு இப்ப எல்லாம் இருக்கின்றது. பணம், எல்லைகள் அகலப்படுத்தப்பட்ட பெரிய வளவு, வீடு எல்லாம் இருந்தும் என்ன? மனதில் அமைதி இல்லை. ஏதோ ஒரு தாகம்! பேரப்பிள்ளைகளுடன் இருக்கும் மனிதர்களைப் பார்க்க பொறாமையாக இருக்கிறது. ஏதோ ஒரு தாழ்வுணர்ச்சி! குற்ற உணர்வு! முடிவு எடுத்து விட்டேன்.

நான் மீண்டும் கனடா போகத்தான் போகிறேன். ஆனால் புதிய கனவுகளுடனும் திட்டங்களுடனும் போகப் போகிறேன். ஆனால் போய் முன்பு போல் ஒட்டாமல் வாழப்போவதில்லை. இனி வாழப் போவதோ சில காலம்தான். வாழ்க்கையில் ஒரு அர்த்தம் இருக்க வேண்டும். அதனால் போய் என் மனத் தாங்கல்களைப் பேசித்தீர்ப்பேன்! இங்கு போல் விறகு தேடி நெருப்பு ஊதி ஊதி புகையில் கண் வெந்து கலங்கி அழும் சமையலா அது! பேரப்பிள்ளைகளின் வேலைகளில் ஒரு பங்கு ஏற்பேன். அதே போல் அவர்கள் பங்காக தினமும் அரைமணி நேரம் எனக்கு ஒதுக்கச் சொல்லி என் மகனைக் கேட்பேன். பேரப்பிள்ளைகளுடன் பாடசாலையில் நடந்த வற்றைக் கதைக்க அவர்கள் உணர்வுகளைப் பரிமாற என் பிள்ளை bedtime என தினமும் அவர்களுக்கு நேரம் ஒதுக்குவது போல் எனக்கும் ஒரு Chat time வேண்டும். வானொலியில் நான் கேட்டது பற்றி கதைக்க, தொலைபேசியில் உரையாடியதை பங்கிட என் உணர்வுகளை வெளிப்படுத்த என் மகனின் நேரம் எனக்குத் தேவை என உரிமையாகக் கேட்பேன். அவர்கள் சுமையில் நான் பங்கு கொள்வதை என் திருப்தியாக நான் நினைக்கும் போது என்னுடன் கதைப்பதை நிச்சயம் அவர்கள் சுமையாக நினைக்க மாட்டார்கள். நேரத்துடன் ஓடும் அவர்களுக்கு அவகாசம் கிடைக்க நாமும் ஒத்துழைக்க வேண்டும். இது ஒத்துழைப்புத்தான் அன்றி அடங்கிப் போதல் அல்ல.

விழாக்களுக்குப் போக பிள்ளைகளால் முடியாவிட்டால் நாம் வாடகைக் காரில் போகலாம். எங்கள் இருவரது பென்சனையும் கனடாவுக்கு மாற்றிவிட்டால் பிள்ளைகளின் காசைச் செலவழிக்கும் மன உளைச்சலும் இராது. யோசிக்க எல்லாமே பொருத்தமாகவும் அர்த்தமாகவும் இருக்கிறது. நான் எனக்காக வாழ்வதிலும் பார்க்க என் சந்ததிக்காக வாழப் போகிறேன் என்பதில் மனது இனிக்கிறது. நிறைய சுமை குறைந்து காற்றில் பறப்பது போல் மனசு இலேசாக இருக்கிறது. பிள்ளைகளை வளர்த்த போது பட்ட அவலங்களிலும் தியாகங்களிலும் கிடைத்த வெற்றி மனதை நிறைத்து பொருள் உள்ளதாக்கியது போல் என் இந்த முடிவும் எம் அனைவரதும் வாழ்வையும் பொருள் மிக்கதாக மாற்றும் என்ற நினைப்பில் சிலிர்த்துப் போகிறேன் நான்! நான் பாடம் சொல்வதிலும் விளையாடுவதிலும் நேரம் செலவழிக்கப் போவதால் முக்கிய ஒரு உறவாக நான் மாறிவிட்ட என்னைவிட்டு விலகாமல் என்னைச் சுற்றி வரப்போகும் என் பேரப்பிள்ளைகள் கண்முன் வந்து போகிறார்கள். எத்தனை ரம்மியமான உணர்வு அது!

*வாழ்க்கை ஒரு போராட்டம் தான், ஆனால்*
*போராட்டம் தான் வாழ்க்கை அல்ல!*


## 'ஞானம்' கலை இலக்கியச் சஞ்சிகை 100ஆவது இதழ் ஈழத்து நவீன இலக்கியச் சிறப்பிதழ்

'ஞானம்' சஞ்சிகையின் 100ஆவது இதழ் - ஈழத்து நவீன இலக்கியச் சிறப்பிதழாக மலர்ந்துள்ளது. இதில் ஈழத்து நவீன இலக்கியம் தொடர்பான 42 கட்டுரைகளும், 33 கவிதைகளும், 16 சிறுகதைகளும், ஒரு நாடகமும் அடங்கியுள்ளன. பேராசிரியர்கள், கலாநிதிகள், ஈழத்து மூத்தபடைப்பாளிகள் பலரும் இந்த இதழில் எழுதியுள்ளனர். தமிழை உயர்வகுப்புகளில் பயில்வோருக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும், இலக்கிய ஆர்வலர்களுக்கும் பயன் மிக்கதாக இந்த இதழ் அமைந்துள்ளது. இந்த இதழினைப் பெறவிரும்புவோர் ஞானம் பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும். பிரதி ஒன்றின் விலை ரூபா 200/= தபாற் செலவு ரூபா 60/=

ஞானம் சஞ்சிகை விற்பனை முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைச்செல்விக் காலமும் சிற்பி

## 5. மீண்டும் ஓர் எதிர்பாராதது

"கலைச்செல்வி"யின் முதலாவது இதழ் வெளிவந்த சில நாள்களுள் அது சம்பந்தமாக வந்த கடிதங்கள், தரமான பல வாசகர்களை அது எட்டிவிட்டதற்குச் சான்றாக அமைந்தன. விமர்சனப் போட்டியிலும் பலர் கலந்து கொண்டார்கள். குப்பிளானைச் சேர்ந்த எம்.எஸ். கனகரத்தினம் எழுதிய விமர்சனம் சிறந்ததாகத் தெரிவு செய்யப்பட்டு இரண்டாம் இதழில் வெளியிடப்பட்டது.

ஈழத்துச் சோமுவின் "புதுமைப்பித்தன்", மு. இராமலிங்கத்தின் "மாசுடை மங்கையா?" – இரண்டும் நல்ல கருத்துக்கள் கொண்ட கட்டுரைகள். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய உலகம் இரண்டு பெரிய புரட்சிகளைக் கண்டிருக்கின்றது என்று குறிப்பிடுகின்றார் ஈழத்துச் சோமு. ஆனால் ஈழத்து இலக்கிய உலகம் இப்போது ஒரு பெரிய புரட்சியைக் கண்டிருக்கிறது – கலைச்செல்வி வெளிவந்ததன் மூலம்......

பாரதி பரம்பரை ஈழத்திலும் உண்டு என்பதை நாவேந்தனின் "காளி தரிசனம்" நிரூபிக்கின்றது. ஆனால், ஒரே இதழில் ஐந்து பேரின் கவிதைகள் அவசியமா?......

ஏன் படைத்தாய்? என்று இறைவனையே கேட்கும் எழிலரசி மஞ்சுளாவைப் படைத்த சிற்பி, வெறும் வார்த்தையலங் காரங்களிற் கூட்டியிருக்கும் கவனத்தை – திறமையை கதையின் கருவைப் பலப்படுத்துவதிலே காட்டியிருந்தால் எவ்வளவு அழகாக அமைந்திருக்கும் அந்தக் கதை......

குறை தீர்ந்தது என்ற கதை மூலம் வாசகர்களை ஏமாற்றிவிட்டார் தாழையடி சபாரத்தினம். அவருடைய எழுத்தின் தரத்தை எட்டியும் பார்க்கவில்லை அந்தக் கதை......

புத்தக விமர்சனம் பயன்தரும் அம்சம்......

ஒவ்வொரு எழுத்தாளரின் படைப்புடன் அவ்வெழுத் தாளரையும் அறிமுகப்படுத்துவது புதுமையான முயற்சி......

வளரும் எழுத்தாளர் பகுதி, இளம் எழுத்தாளர்களை வளர்க்கட்டும்; இளம் எழுத்தாளர்கள் "கலைச்செல்வியை வளர்க்கட்டும்; கலைச்செல்வி கன்னித் தமிழை வளர்க்கட்டும்.

தெரிவு செய்யப்பட்ட விமர்சனத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட சில கருத்துக்கள் இவை.

"புதுமைப் பித்தனைத்தான் முதலிற் படித்தேன், விமர்சன ரீதியில் அவரைப் பற்றிய புதிதாக எதாவது எழுதப் பட்டிருக்கலாம் என்றெண்ணி. ஒரே ஏமாற்றம்... "பொன்னகரமும்" "கவந்தனும் காமனும்" – குழப்பியடிக்கப்



பட்டிருப்பதாக எண்ணுகின்றேன் – என மூதூரிலிருந்து வ.அ. இராசரத்தினம் எழுதியிருந்தார்.

முதலாம் இதழின் குறை நிறைகளைப் பற்றி இன்னும் பலர் விரிவாக எழுதியிருந்தார்கள். கலைச்செல்வியை எல்லோரும் மதித்து வரவேற்றது உற்சாகமளித்தது.

தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழரிற் பலர், இனக்கலவரம் காரணமாகத் தம் பாரம்பரியத் தாயகத்திற்குத் திரும்பி, தம் எதிர்காலம் எப்படி இருக்குமோ எனத் தலையிற் கை வைத்துக் கவலைப்பட்டுக்கொண்டிருந்த காலம் அது. அவர்களைக் கருத்திற்கொண்டு எழுதப்பெற்ற "உடனடித் தேவை" என்ற ஆசிரியத் தலையங்கத்தின் பிரதான பகுதி இது :–

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்", "உழுவார் உலகத் தார்க்காணி", "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" – எல்லாமே தமிழ்ப் பாடல்கள்; பண்டிதர்களின் இலக்கணக் குறிப்புக்கும் பரீட்சைகளில் நயமெழுதுவதற்கும், பேச்சாளர்கள் பொழிந்து தள்ளுவதற்குமே இதுவரை பயன்பட்டன. மக்களின் உள்ளங்களிலே உறைப்பாகப் பதிந்து, உழவின் உயர்வையும் தொழிலின் சிறப்பையும் எடுத்துக்காட்டத் தவறிவிட்டன... 'ஆனையிறவு தொடக்கம் வவுனியா வரை பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாழடைந்து கிடக்கின்றன. காடு கொன்று நாடாக்கிக் கமத்தொழில் செய்தல் வேண்டும். உயர்தர கல்விக் கழகங்கள், தொழிற் சாலைகள் முதலியவை ஏற்படுத்தப்பட்டால் மக்கள் அவற்றைச் சுற்றிக் குடியேறுவார்கள்...... மக்களுக்குத் தகுந்த ஆலோசனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிச் சிறந்த முறையில் வழிகாட்டுவதற்கு, தமிழ்ப் பிரதேசங்களின் வளப்பத்தை நன்கறிந்த பொருளாதார நிபுணர்களின் குழு உடனடியாக உருவாக்கப்படல் வேண்டும்......

***

செல்வச் சன்னதி என்றவுடன் அத்தலத்தில் நடைபெறும் அன்னதானமும், திருவிழாக் காலங்களில் நடைபெறும் காவடியாட்டமும் பலரின் நினைவில் வரும். அன்னதானம் சம்பந்தமாக ஏற்கெனவே ''ஒரு பிடி சோறு'' கதையை எழுதிப் புகழ் பெற்ற கனக. செந்தி நாதன், ஏழை எளிய மக்களின் இதயத்தை மகிழ்விக்கும் காவடி ஆட்டத்தை முன் வைத்து, மண்வாசனை கமழும் வகையில் எழுதிய ''சமர்ப்பணம்'', தன்னுடைய குடும்பத்தைப் பீடித்துள்ள, நாக தோஷத்திலிருந்து தன் மகனை விடுவிப்பதற்காகத் தன் உயிரையே தெய்வார்ப்பணமாக்கும் தாய் ஒருத்தியைக் காட்டும், இராஜநாயகன் எழுதிய ''நாகதோஷம்'', தன்னுடைய ஒழுக்கக் கேட்டை அறியாத மற்றவர்கள், தன்னைப் புகழ்ந்து பாராட்டியதனால், ''சித்திரவதைக்கு'' உட்பட்டுத் தானாகவே ''காணாமற் போகும்'' சிவராமலிங்கம் பிள்ளையைக் கதாபாத்திரமாக்கி ஐ. இராசரத்தினம் எழுதிய ''அழியாத வடு'', தாயின் பாசத்தை உணராமல் புறக்கணித்துவிட்டு, மனைவியின் சுயரூபத்தைக் கண்டு வருந்தி, இறந்துபோன தாயை நினைத்து ஏங்கியழும் மகனின் நிலையைச் சித்திரித்து ''ரோகிணி'' எழுதிய ''அம்மா'' ஆகிய சிறுகதைகள் இரண்டாம் இதழில் இடம்பெற்றன.

''இனிய தமிழிசை பரப்பி எழுக கலைச்செல்வி'' என்ற வாழ்த்துக் கவிதையுடன் ''உள்ளம் திறந்துவிடு'' என்ற தலைப்பில் வித்துவான் ஆறுமுகம் எழுதிய கவிதைகளும் வெளியாகின. யாழ்ப்பாணத்தில் வணிக நிலையமொன்றிற் பணியாற்றிய மணியம், உடுவில் ஆசிரியை செல்வி இ. அபிமன்னசிங்கம் ஆகியோர் வளரும் எழுத்தாளர்களாக அறிமுகமாயினர். முன்னவர் பாடிக்களிப்பதெப்போ?'' என்ற கவிதையையும் பின்னவர் ''கோமுவின் செய்மதி'' என்ற விஞ்ஞானம் சார்ந்த சிறுகதையையும் எழுதியிருந்தனர்.

இராவணன் தம்பியரில் ஒருவனான கும்பகர்ணன் செய்ந்நன்றி மறவாது செருமுகஞ் சென்றதைச் சிலாகித்து ''நன்றியுள்ளம்'' என்ற இலக்கியக் கட்டுரையை எழுதினார் செங்குந்தா இந்துக் கல்லூரி ஆசிரியர் பொ. இராமசாமி.

''அல்லி'' பத்திரிகையில் நான் எழுதிய ''அண்ணா'' என்ற சிறுகதை, எதிர்பாராத விதத்தில் ''உதயணன்'' அவர்களால் தொடர்ந்து எழுதப்பட்டதை நான் ஏலவே குறிப்பிட்டிருக்கின்றேன். அப்படி ஓர் ''எதிர்பாராதது'' மீண்டும் ஒரு தடவை நிகழ்ந்தது ''ஏன் படைத்தாய்?'' என்ற என் கதையைப் பாராட்டியும், குறைகளைச் சுட்டிக்காட்டியும் சில கடிதங்கள் வந்தன. ''சிற்பியின் சிருஷ்டிகளுள் 'ஏன் படைத்தாய்?' மிகவும் உயர்ந்தரகம். கதாநாயகி நேரில் நின்று துடிப்பதைப் போலிருந்தது. ஆனால்... முதற் பகுதியில் தொனிக்கும் விறுவிறுப்பை, உணர்ச்சி வேகத்தை முடிவிலும் காட்டியிருந்தால்...'' என ''ஈழத்துச் சோமு'' எழுதியிருந்தார். அதேவேளை, ''ஏமாற்றுக்காரி'' என்ற தலைப்பில் அந்தக் கதையைத் தொடர்ந்திருந்தார், ''கொழும்பு – சிவம்''. ''கலைச்செல்வி'' – ஆவணி இதழில் அந்தக் கதை வெளிவந்தது. அந்தக் கதையில், புதிதாக இடம்பெற்ற டாக்டர் சோமு என்ற பாத்திரம், ''ஓடி வா உயிர்காக்க'' எனத் தன் நண்பனான கதாநாயகனை அழைப்பதைப் போல், ''சோமசுந்தரன்'' எழுதிய கதைக் கடிதம் ''கலைச்செல்வி'' புரட்டாதி இதழில் (பாரதி மலர்) வெளியானது. இந்தக் கதையை மேலும் வளர்த்தவர் ''காவலூர் அம்பி'' என்ற புதிய பெண் எழுத்தாளர். கதாநாயகி மஞ்சுளா என்ற சித்திரா, தான் காதலித்த அந்த எழுத்தாளனுக்குத் தன் இதயக் குமுறலைத் தெரிவிக்கும் வகையில் எழுதப்பெற்ற ''உங்களுக்கு மட்டும்'' என்ற தலைப்பிலமைந்த நான்காவது அத்தியாயம் ''கலைச்செல்வி'' கார்த்திகை இதழில் வெளிவந்தது. சித்திராவின் மாமனாராக மாறி உண்மை நிலையைத் தெளியவைக்கும் விதத்தில், பிரபல எழுத்தாளர் ''வரதர்'' எழுதி ''கலைச்செல்வி'' மார்கழி இதழில் வெளிவந்த ''இன்பம் சிரிக்கிறது'' என்ற ஐந்தாம் அத்தியாயத்துடன் இந்தப் புதுமைத்தொடர் ''சுப''மாக நிறைவுபெற்றது. முதலில் இந்தச் சிறுகதையை நான் எழுதியபோது, வேறு எழுத்தாளர்கள் அதைத் தொடர்ந்து எழுதுவார்கள் என நான் எதிர்பார்க்கவே இல்லை. அப்படியான ஓர் எண்ணம் – விருப்பம் என்னிடம் இருக்கவில்லை. ஏனைய நால்வரும் எனக்கு நன்கு தெரிந்தவர்கள்தாம். ஆனால் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இப்படிப் புதுமையான ஒரு தொடரைப் பற்றிக் கலந்துரையாட வில்லை; திட்டமிடவுமில்லை. ஒவ்வோர் அத்தியாயமும் கொடுத்த உந்துதலினால் அவர்கள் தாமாகவே கதையைத் தொடர்ந்தார்கள்.

கொழும்பு – சிவம் அவர்களின் கதை கிடைத்த பின்னர்தான், அவர் உதயணன்'' என்பது தெரியவந்தது. சோமசுந்தரன், காவலூர் அம்பி ஆகியோர் செங்குந்தா இந்துக் கல்லூரியில் என் உடனாசிரியர்களாகப் பணி புரிந்தவர்கள். சோமசுந்தரன் வேறு யாருமல்லர் கல்வித் திணைக்களத்திலே பல பதவி உயர்வுகளைப் பெற்று, கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றி கடந்த பல ஆண்டுகளாகக் கொழும்பிலே வாழ்ந்து வரும் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் தான் அவர். ''காவலூர் அம்பி'' என்ற புனைபெயரில் எழுதியவர் கலைப்பட்டதாரியான அம்பிகா கனகசபை; அமரராகிவிட்டார். அக்காலத்தில் எழுத்துலகுக்குப் புதியவர்களாக இவர்கள் இருந்தபோதிலும், கதையை வளர்த்துச் சென்ற முறையும், எழுத்து நடையும் அனுபவம் மிக்க எழுத்தாளர்கள் என்றே அவர்களைக் கருத வைத்தன. 'வரதர்' பற்றி நான் புதிதாக ஒன்றும் சொல்லத் தேவையில்லை!

***

பத்திரிகை உலக ஜாம்பவான் ஆன எஸ்.டி. சிவநாயகம் அவர்களை ''ஈழத்துச் சோமு'' பேட்டி கண்டார். அவசரகாலச் சட்டம், செய்தித் தணிக்கை போன்றவை நடைமுறையில் இருந்தன. சிவநாயகம் ஆசிரியராக இருந்த ''சுதந்திரன்'' தடை செய்யப் பெற்றிருந்தது. எனினும் துணிச்சலாகவும் உற்சாகத்துடனும் தன் பதில்களை அவர் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிவுப் பதிப்புக்கள், தமிழகத்துச் சஞ்சிகைகளைப்போல், இந்நாட்டிலும் புதிய சஞ்சிகைகளைத் தொடங்கி நடத்துதல், ஈழத்து அறிஞர்கள், கலைஞர்கள் தமிழகத்திலே உரிய முறையிலே மதிக்கப்பட்டிருத்தல் – போன்ற பல விஷயங்களைப் பற்றித் தெளிவான உறுதியான கருத்துக்களை அவர் வெளியிட்டார். முற்போக்கு இலக்கியப் பற்றிக் கூறியவை சிந்தனைக்குரியவை.

கேள்வி : இலக்கியத்தில் முற்போக்கு இலக்கியம், புதுமை இலக்கியம் என்றெல்லாம் பேசப்படுகின்றதே, இதைச் சற்று விளக்க முடியுமா?

பதில் : முடியாது. என்னால் மட்டுமல்ல யாராலும் முடியாது என்பதே என் அபிப்பிராயமாகும். முற்போக்கு, இலக்கியம் எது? பிற்போக்கு இலக்கியம் எது? புதுமை இலக்கியம் எது? பழமை இலக்கியம் எது? எனக் கோடு கீறி வரைவிலக்கணம் வகுத்துப் பிரிக்க முடியாது. காலத்தால் வேண்டுமானால் "இது பழைய இலக்கியம், சங்க காலத்தைச் சார்ந்தது" என்றும் இது புதிய இலக்கியம், பாரதி காலத்துக்குப் பிந்தியது" என்றும் பிரித்துக் காட்டலாம்.

ஒருவர் ஒரு இலக்கியத்தை முற்போக்கு இலக்கியம் என்றும் பிற்போக்கு இலக்கியம் என்றும் தீர்மானிப்பது அவர் சார்ந்து நிற்கும் அரசியல், பொருளாதார, சமூக, தார்மீக, சமயக் கொள்கைகளைப் பொறுத்ததாக இருக்கின்றது. உதாரணமாக இராமாயணத்தைச் சுயமரியாதைக் கட்சிக்காரர்கள் பிற்போக்கு இலக்கியம் என்பார்கள்; நாஸ்திகம் பேசும் ஒரு நூலை முற்போக்கு இலக்கியமாகக் கொள்வார்கள். சமயவாதிகள் கடவுட் கொள்கையை மறுக்கும் சுய மரியாதைக் கட்சியினரின் நூல்களை, அஞ்ஞானம் மண்டிய பிற்போக்கான நூல்கள், காட்டுமிராண்டித் தனமான நூல்கள் என்பார்கள். இதைப் போலவே, கொம்யூனிஸ்டுகளும் தங்கள் உலகாயதக் கொள்கைக்கு ஆதரவு தரும் நூல்களை முற்போக்கு இலக்கியம் என்றும் ஏனையவற்றையெல்லாம் பிற்போக்கு இலக்கியம் என்றும் பறைசாற்றுவார்கள்.

எனவே முற்போக்கு இலக்கியம் புதுமை இலக்கியம் என்பனவெல்லாம், ஒரு இலக்கியத்தைப் படிப்பவரின் மனோ பாவத்துக்கொப்ப ஏற்ற பெயரைப் பெறுகின்றன. படகோட்டி குகனை, பாராளும் இராமன், ஜாதி, குலம், உயர்வு, தாழ்வு, பணம், அந்தஸ்து எல்லாவற்றையும் மறந்து, தன் தம்பியாக ஏற்று, சம ஆசனம் அளித்து, சம போசனம் உண்டு அளவளாவினானே, இதைவிட முற்போக்குக் கொள்கையை எந்தச் சீர்திருத்தவாதி காட்டமுடியும்? எந்தச் சமதர்மவாதி பேச முடியும்? என்று பௌராணிக பாகவதர் ஏற்றிப் போற்றும் பொழுது சுயமரியாதைக் கட்சிக்காரரின் அகராதிப்படி பிற்போக்கு இலக்கியமாக ஒதுக்கப்படும் இராமாயணம், ஒரு முற்போக்குச் இலக்கியமாக மிளிர்வதை நாம் காண முடிகிறதல்லவா? இப்படியே தான் எல்லா இலக்கியங்களும் தடம் புரளுகின்றன.

***

தமிழக முற்போக்கு எழுத்தாளர்களுட் குறிப்பிடத்தக்க ஒருவராகச் சொல்லப்படும் வ. விஜயபாஸ்கரன் அவர்களை இந்நாட்டு எழுத்தாளர்களும் வாசகர்களும் நன்கறிவர். சில ஆண்டுகளின் முன்னர் சென்னையிலிருந்து அவர் வெளியிட்ட "சரஸ்வதி" ஒரு முற்போக்கு இலக்கிய இதழாகவே கருதப்பட்டது. இந்நாட்டு "முற்போக்கு" எழுத்தாளர் பலரின் ஆக்கங்கள் அச்சஞ்சிகையில் அடிக்கடி இடம்பெற்றன. இரண்டு மூன்று ஆண்டுகளின் முன்னர் அவருடைய பேட்டியொன்று சென்னை "கலைமகள்" இதழில் இடம்பெற்றது. முற்போக்கு இலக்கியம் சம்பந்தமாக அவர் கூறிய கருத்துக்கள் ஐம்பது ஆண்டுகளின் முன்னர் திரு. எஸ்.டி. சிவநாயகம் தெரிவித்த கருத்துக்களின் சாராம்சத்தை எதிரொலிப்பதைப் போன்று இருந்தன. "இலக்கியத்தை முற்போக்கு, பிற்போக்கு எனப் பிரிப்பதில் எனக்கு உடன்பாடில்லை. இலக்கியம் மனிதனின் உள்ளத்தை, மனப் பாங்கை உயர்த்த வேண்டும். "முற்போக்கு" என்ற அடைமொழி அதற்குத் தேவையே இல்லை" என்றார் விஜயபாஸ்கரன்.

"கலைச்செல்வி"யின் நிலைப்பாடும் இதுதான். இந்த நிலையில்! முற்போக்கு இலக்கியத்தை எதிர்த்தவர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு "கலைச்செல்வி"யின் பின்னணியில் நின்று கொண்டிருந்தார்கள் என்பதும் முற்போக்கு இலக்கியத்தை ஏற்றுக்கொள்ளாமையே "கலைச்செல்வி" யின் மறைவுக்குக் காரணம் என்பதும் பொருத்தமற்ற கூற்றுக்கள் என்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்!

***

உலகத்துக் கவிஞர்களின் சிறந்த கவிதைகளைத் தெரிவு செய்து ஜப்பானிய மன்னரின் முன்னிலையில் வாசிக்கப்படும் 800 ஆண்டு கால வழக்கத்தின்படி, இலங்கை தலத்து ஓயாவைச் சேர்ந்த கே. கணேஷ் அவர்களின் "மேகங்கள்" என்ற கவிதை வாசிக்கப்பட்டு அக்கவிஞருக்கு "ராஜப்பிரமுகர்" என்ற விருதும் 1958ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

இலங்கை கயரோகத் தடுப்புச் சங்கம் நடத்திய கவிதைப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி, ஆசிரியர் பண்டிதர் சோ. இளமுருகனார், அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை ஆசிரியர் கவிஞர் மு. செல்லையா, கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஆசிரியர் பண்டிதர் இ. திருநாவுக்கரசு ஆகியோர் முறையே முதலாம் இரண்டாம் மூன்றாம் பரிசுகளைப் பெற்றனர்; தங்கப் பதக்கங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த நான்கு கவிஞர்களையும் பாராட்டி வாழ்த்தும் குறிப்பொன்றும் இந்த இதழில் இடம்பெற்றது.


புலவர் நினைவாக "வரதர்" நடத்த முன்வந்த கவிதைப் போட்டி பற்றிய விபரங்கள், "இதயவானிலே" என்ற உதயணனின் தொடர்கதை மாணவர் ஆற்றல் போட்டி முதலியனவும் "கலைச்செல்வி"–யின் இரண்டாம் இதழில் வெளியாகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகக் குறிப்புக்கள் :

**திரு.எஸ்.டி. சிவநாயகம் :**




திரு.எஸ்.டி. சிவநாயகம் அவர்களை வாசகர்கட்கு அறிமுகம் செய்து வைக்கத் தேவையில்லை. சக்தி வாய்ந்த தன் பேனா மூலம் மிகப் பெரிய அளவில் வாசகர் கூட்டத்தைக் கொண்டுள்ள பத்திரிகாசிரியர் அவர். பத்திரிகைத் துறையிற் பழுத்த அனுபவசாலியாக விளங்கும் திரு. காசா சுப்பராவ் (ஸ்வதந்திரா பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர்) அவர்கள் ஈழத்துப் பத்திரிகைகளைப் பற்றி ஒரு தடவை குறிப்பிட்ட பொழுது, "சுதந்திரன் தலையங்கங்கள் சக்தி வாய்ந்தவை; முற்போக்கானவை; தர்க்கரீதியானவை" எனக் கூறியுள்ளார். இளம் எழுத்தாளர்கள் பலரை நல்ல முறையில் அறிமுகம் செய்து வைத்துள்ளார் இவர். ஈழத்து இலக்கிய உலகிலே தனிச்சுடர் விட்டுக்கொண்டிருக்கும் பலரை இந்த 'இலக்கியப் பிரம்மா' சிருஷ்டித்துள்ளார்.

**கனக செந்திநாதன் :**

சன்னதி முருகன் சந்நிதியில் "ஒருபிடிசோறு" ஆக்கிய கனக செந்திநாதன் இப்போது "சமர்ப்பணம்" செய்கின்றார். ஈழத்துப் பேனா மன்னர்களை இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்துள்ளார். சிறந்த விமர்சகர்.

**ஐ. இராசரத்தினம் :**

யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் சில நாடகங்களைத் "தினகரனி"ல் எழுதியுள்ளார். இக்கதாசிரியர். ஹற்றன் பொஸ்கோ கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரிகின்றார். தமிழ் இலக்கியத்திற் பித்துடையவர்.

**சி. ஆறுமுகன் :**

பைந்தமிழ் வளர்க்கும் புங்குடுதீவு இத்தமிழ் வித்துவானின் தாயகம். ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரிகின்றார். உணர்ச்சி ததும்பும் கவிதைகள் பல இக்காந்தியக் கவிஞரின் சொத்து.

**ரோகிணி :**

கொழும்பு வருமானவரி இலாகாவில் ரோகிணி வேலை பார்க்கின்றார். சிறுகதை உலகில் வேகமாக முன்னேறி வருகிறார். "அம்மா..." சோகம் சொட்டும் கதை.

*(இனி அடுத்த இதழில்)*

## பெரியார் தமிழவேள் இ.க. கந்தசுவாமி அவர்களின் மறைவு



தமிழுக்கும் சைவத்திற்கும் அரும் பெரும் பங்காற்றிய பெரியார் இ. தமிழவேள் அவர்களின் திடீர் மறைவு அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. ஒக்டோபர் 10,11,12 ஆகிய திகதிகளில் பெரியார் கந்தசுவாமி அவர்கள் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் சிலப்பதிகார விழா எடுத்து தமிழ் மக்கள் அனைவருக்கும் பெருமை சேர்த்தார். தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்த பேராசிரியர் அறிவுடை நம்பி, பேராசிரியர் அறவாணன், பேராசிரியை தாயம்மாள் ஆகியோர் தமிழவேள் அவர்களது தமிழ்ப்பணியை விதந்து பாராட்டி நூறாண்டு வாழவேண்டும் என வாயார வாழ்த்தினர். அவர்களது வாக்கை கருணையற்ற கூற்றுவன் பொய்யாக்கி விட்டான். தமிழவேள் கந்தசுவாமி அவர்களின் பணி எழுத்தில் வடிக்க முடியாது. தமிழ்ச் சங்கம் என்றால் தமிழவேள், தமிழவேள் என்றால் தமிழ்ச்சங்கம் என்ற அளவுக்கு எல்லோர் மனதிலும் இடம்பெற்றவர். பல நூல்களின் ஆசிரியர். சங்க இலக்கியங்களில் முற்று முழுதாகத் தன்னைத் தோய்த்துக் கொண்டவர். இலக்கியவுலகில் உதய சூரியனைப் போல பிரகாசித்தவர். 1963ம் ஆண்டு தொடக்கம் தமிழ்ச் சங்கத்தைக் கட்டிக் காத்து வந்தவர். ஆரம்பகாலங்களில் தமிழ்ச்சங்கத் தலைவர்களாய் இருந்த திரு. வயிரவப்பிள்ளை, கலாநிதி. வ.செ. நடராஜா, மு. தியாகராஜா ஆகியோரின் பாராட்டைப் பெற்றவர். சுமார் மூன்று தசாப்தம் தமிழ்ச்சங்கப் பொதுச் செயலாளராகக் கடமையாற்றியவர்.

தமிழ்ச் சங்கத்திற்கு கட்டிடங்களை பெற்றுக் கொள்வதில் மனப்பூர்வமாகவும் சேவை மனப்பான்மையுடனும் செயலாற்றி பல கட்டிடங்கள் உருவாகக் காரணகர்த்தாவாக இருந்தவர். பெரியார் சங்கரப்பிள்ளை மிகப் பெருந்தொகையை உதவியதை யாவரும் அறிவர்.

நூலகம் அமைப்பதில் பெருந்துணையாய் விளங்கியவர். தமிழும் சைவமும் பட்டொளி வீசிப் பார்க்க வேண்டும் என்று விரும்பியவர். இன்றைய நூலகம் இவ்வாறு விரிவு பெற்றும் பலருக்கும் அறிவுத் தாகத்தை பூர்த்தியாக்குவதில் இவரது உழைப்பு சிறப்புக்குரியது. தமிழ் மாணவர் பயன் பெறும் வண்ணம் இலவச வகுப்புகளை நடத்தியவர். மாணவர் புலமைப் பரிசில் பெற உதவியவர். பல விழாக்கள் எடுத்து சிறப்பித்தவர். 1983ம் ஆண்டு கொழும்பில் வன்செயல் தொடங்கிய போது, தமிழ்ச் சங்கத்தைக் கட்டிக் காத்தவர். உணவின்றி நீரின்றி சங்கக் கட்டிடத்தைப் பாதுகாத்தவர்.

தமிழ், சமயம், பண்பாடு ஆகியவற்றைப் பெருமையுடன் தன்னுயிராகக் கட்டிக் காத்தவர். இன்று நம்முடன் இல்லை. அவரை இழந்து ஆறாத்துயரத்தில் இருக்கும் அவரது குடும்பத்தார், சுற்றத்தார், தமிழ்ச்சங்கத்தினர் ஆகியோருக்கு 'ஞானம்' அனுதாபம் தெரிவிப்பதுடன் இழப்பினால் துன்புறுவோரில் தன்னையும் இணைத்துக் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்

கலாநிதி. துரைமனோகரன்

## தமிழ்த் திரையுலகின் முன்னோடி

தமிழ்த் திரையுலகில் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தி, அதனைப் புதிய பாதைக்குத் திசை திருப்பிவிட்டவர், ஸ்ரீதர். 1954 இல் ரத்தபாசம் என்ற திரைப்படத்தின் கதை – வசன கர்த்தாவாகத் திரையுலகில் நுழைந்த அவர், கல்யாணப்பரிசு என்ற திரைப்படத்தின் மூலம் இயக்குநராக உயர்ந்தார். கல்யாணப்பரிசு புதிய இயக்குநர் ஒருவரை அறிமுகப் படுத்தியதோடு, தமிழ்த்திரையுலகுக்குப் புதிய வாசலையும் திறந்துவிட்டது. இத்திரைப்படத்துக்குப் பின் பல திரைப் படங்களை அவர் இயக்கியிருந்தாலும், அவருக்கும், தமிழ்த் திரைப்படத்துறைக்கும் இன்னொரு திருப்புமுனையாக அமைந்த படம் நெஞ்சில் ஓர் ஆலயம். இத்திரைப்படத்தைத் தயாரிக்கும் முயற்சியில் ஸ்ரீதர் இறங்கியபோது, இதை ஒரு விஷப் பரீட்சையாக அவரது குழுவைச் சேர்ந்தவர்கள் கருதினார்கள். ஆனால், துணிந்து வித்தியாசமான கதை யம்சத்தைக் கொண்ட அத்திரைப்படத்தை அவர் இயக்கி வெற்றி கண்டார். இயக்குநர் ஸ்ரீதர், தமக்குப் பின்வந்த பாலசந்தர், பாரதிராஜா, பாலு மகேந்திரா போன்றோருக்கு முன்னோடியாகவும் திகழ்ந்தார்.

சிவாஜிகணேசனையும் அதிகமாகத் தமது திரைப்படங் களில் ஸ்ரீதர் பயன்படுத்தியுள்ளார். இவரோடு எம்.ஜி.ஆர், ஜெமினிகணேசன், முத்துராமன், கல்யாண்குமார், ரஜனி காந்த் முதலான பிரபல நடிகர்களையும் சரோஜாதேவி, தேவிகா, வைஜந்திமாலா, காஞ்சனா, கே.ஆர். விஜயா முதலான பிரபல நடிகைகளையும் தமது படங்களில் இயக்கியவர், அவர். திரைப்படத்தின் வர்த்தகத் தேவை களையும், தாம் புகுத்த விரும்பிய புதுமைகளையும் இரண்டறக் கலந்து செயற்பட்டவர், ஸ்ரீதர். முதன்முதலாக இயக்குநர் களுக்கென்று ஓர் 'இமேஜை' திரைப்பட ரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்தியவரும் அவரே.

சிறந்த பின்னணிப் பாடகர்களுள் ஒருவராக விளங்கிய ஏ. எம். ராஜாவை முதன் முதலாகத் தமது கல்யாணப்பரிசு திரைப்படத்தின் மூலம் இசையமைப்பாளர் ஆக்கினார். ராஜாவும் இசையமைப்புத்துறையில் புகழ்பெற்றார். ஸ்ரீதர் – ஏ. எம். ராஜா உறவு தேன்நிலவு படம் வரையிலும் தொடர்ந்தது. தேன்நிலவு படத்தயாரிப்பின்போது இருவருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள், திறமையான இருவரையும் பிரித்துவிட்டன. நெஞ்சில் ஓர் ஆலயம் தொடக்கம் எம். எஸ். விஸ்வநாதன் ஸ்ரீதரின் ஆஸ்தான இசையமைப்பாளர் ஆகினார். தமது இயக்கத்தில் ரஜனிகாந்த் நடித்த துடிக்கும் கரங்கள் திரைப்படத்தில் முதன்முதலாக எஸ். பி. பாலசுப்பிர மணியத்தை இசையமைப்பாளர் ஆக்கினார். ஏ. எம். ராஜாவைப் போன்றே இன்னொரு சிறந்த பாடகரான பாலசுப்பிரமணியம் இசையமைப்புத் துறையிலும் புகழ்பெற வாய்ப்பு ஏற்பட்டது.

தமிழ்த் திரைப்பட வரலாற்றில் ஸ்ரீதருக்கு என ஒரு முக்கிய இடம் உண்டு. அவரது சுவடுகள் தமிழ்த்திரைப்படத்துறையில் அழுத்தமாகப் பதிந்துள்ளன.

## அம்மை அப்பன் வழிபாடு

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாகத் தமிழ்நாட்டில் அண்மையில் ஏற்பட்டு வரும் உணர்ச்சிகரமான நிலை, உலகத்தின் கவனத்தைத் தமிழ்நாட்டின் பக்கம் திருப்பிவிட்டது. காலம் தாழ்த்தியேனும் தமிழ்நாட்டின் அரசியல் களத்திலும், மக்கள் மத்தியிலும் இலங்கைத் தமிழர்பால் கரிசனை ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதே.

ஆனால், அண்மைக்காலத்தில் இப்பிரச்சினை தொடர் பாகக் கருணாநிதி ஆடிய நாடகம் தான் பலரது இதயங்களையும் நோகடிக்கச் செய்துவிட்டது. அன்னையையும், அப்பனையும் பகைத்துக்கொள்ளாமல் தமது அரசியல் காய்களைக் கடந்த ஆண்டுகளில் நகர்த்திவந்தவர், கருணாநிதி. ஆனால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரின் உண்ணா விரதப் போராட்டமும், கருணாநிதி இலங்கைத் தமிழர் விடயத்தில் தீவிர முயற்சிகளில் ஈடுபடமாட்டார் என்ற நம்பிக்கையில் ஜெயலலிதா விடுத்த இலங்கைத் தமிழர் தொடர்பான அறிக்கைகளும் அவரை ஓர் உலுக்கு உலுப்பி விட்டன. தம் பங்குக்குத் தாமும் தீவிரமாக ஏதாவது முயற்சியில் ஈடுபட்டால்தான் தமிழர் தலைவர் என்ற இமேஜைப் பாதுகாக்கமுடியும் என்று கருதிய கருணாநிதி, யாரும் எதிர்பார்க்காத முறையில் மத்திய அரசுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய தீவிரத் தீர்மானங்களை அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுத்தார். யாரும் எதிர் பார்க்காததைப் போன்றே ஜெயலலிதாவும் இதனைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இத்தகைய தீர்மானங்களால் எங்கே தமது அரசியல் எதிரியான கருணாநிதிக்குத் திடீர்ப் புகழ் ஏற்பட்டு விடுமோ என்று குழம்பிய ஜெயலலிதா, வழக்கம்போலத் தடம்புரண்டு, தாம் முன்னர் விடுத்த இலங்கைத் தமிழர்களுக்குச் சார்பான அறிக்கைகளுக்கு முற்றிலும் முரணாக அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கிறார். எப்போதும் ஜெயலலிதாவைக் கவனத்தில் கொண்டே அரசியல் நடத்தும் கருணாநிதியும் வை. கோ, கண்ணப்பன், இயக்குநர்கள் சீமான், அமீர் முதலியோர்களைக் கைது செய்து தமது அம்மை – அப்பர் பக்தியை வெளிக்காட்டிக் கொண்டார். இவர்கள் கைது செய்யப்படுவதற்குக் காரணமாக அமைந்தது, ஜெயலலிதாவின் அறிக்கையே. பின்னர் அதே ஜெயலலிதா, அவர்களின் கைதுகளைக் கண்டித்தும் அறிக்கை விட்டார். ஜெயலலிதாவுக்கு உண்மையில் அவசரமாக மனவள ஆலோசனை வழங்க வேண்டும். இல்லையேல், மனநலம் பாதிப்படையும் பரிதாப நிலை தோன்றலாம்.

இந்தியப் பெருநாட்டில் இலங்கைத் தமிழர்கள் பற்றிக் கொஞ்சமும் கூட அக்கறைப்படாத சில ஜன்மங்கள் உண்டு. அகில இந்திய அரசியல் பைத்தியமான சுப்பிரமணிய சுவாமி, பதவிப் பைத்தியமான ஜெயலலிதா, மூளை கெட்ட காங்கிரஸ்காரர்கள், ஹிந்துப் பத்திரிகைக் குழாம், நடிகரும் எழுத்தாளரும் பத்திரிகை யாளருமான சோ, சில அதிகாரிகள் போன்றோர் இலங்கைப் பேரினவாதிகளின் உள்ளங்களை மிகவும் கவர்ந்தவர்கள். இவர்களோடு கருணாநிதியையும் பேரினவாதிகள் இப்போது மெச்சத் தொடங்கியுள்ளனர். கருணாநிதி நாடகம் ஆடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத்துவிட்டு, பாவ விமோசனமாக இலங்கைத் தமிழர்களுக்கு நிதி திரட்டும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். ஊரையும், உலகையும் நன்கு ஏமாற்றத் தெரிந்த கருணாநிதி, நிதியை நன்றாகச் சேகரித்துவிட்டு, அன்னையினதும், அப்பனினதும் ஆசீர் வாதத்துக்கு இணங்கக் கிடப்பில் போட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. கருணாநிதி இலங்கைத் தமிழர் விடயமாக அவ்வப்போது உணர்ச்சிவசப்படுவதும், பின்னர் ஜெய லலிதாவின் அறிக்கைகளைக் கண்டு அஞ்சுவதும், அம்மை – அப்பனின் அருள்வேண்டித் தீர்மானங்களை மாற்றுவதும் இயல்பான விடயங்களே. ஓர் அடி முன்வைப்பதும், ஒன்பதடி பின்வாங்குவதும் கருணாநிதிக்குக் கைவந்த கலை. நியாய சிந்தை கொண்ட தமிழர்கள் கருணாநிதியை இன்னமும் நம்பத் தயாரில்லை.

## உண்மைகள் என்றும் உண்மைகளே

தூண்டில் பகுதியில் கடந்த ஒக்டோபர் மல்லிகை இதழில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வாசகர் ஒருவர் "பல்கலைக்கழகச் சமூகத்தின் இலக்கியச் செயற்பாடுகள் பற்றி உங்களது அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டிருந்தார். அதற்குப் பதிலளித்த மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்கள் ".... எந்தவொரு பல்கலைக்கழகமாவது இந்த நாட்டுப் படைப்பாளி ஒருவரை அழைத்து தமது மாணவர் குழாத்துக்கு அந்த எழுத்தாளரின் இலக்கிய அநுபவங்களைப் பேசும் வண்ணம் கேட்டதுண்டா? இல்லை. இதுவரையும் நானறிந்த வரை, இல்லவேயில்லை. அங்கு வகுப்பெடுக்கும் பேராசிரியர்களுக்கு அவர்களைக் கூப்பிட்டு உரையாட வைக்க அறிவுப் பயம். இந்த இடைவெளி இன்றுவரை தொடர்ந்து நீண்டு கொண்டே வருகின்றது. பார்ப்போம்..... பார்ப்போமே!" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதைப் படித்தபோது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. சில ஆண்டுகளுக்கு முன்னர் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் சங்கப் பலகையில் இடம் பெற்ற கவிதைகள் பல தேர்ந்தெடுக்கப்பட்டு என் தேசத்தில் நான் என்ற தொகுதியாக வெளிவந்தது. இதை மல்லிகைப் பந்தலே வெளியிட்டது. மல்லிகைப் பந்தல் சார்பில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் டொமினிக் ஜீவா அவர்களே வெளியீட்டு ரையையும் நிகழ்த்தினார்.

நான் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக வந்த காலத்திலிருந்து, பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் மூலம் ஆண்டுதோறும் ஈழத்து இலக்கியவாதி ஒருவரைக் கௌரவிப்பதென முடிவு செய்தோம். அதன்படி, முதன்முதலாக 2006ஆம் ஆண்டுக்குரிய கௌரவ விருதினை டொமினிக்ஜீவா அவர்களுக்கே வழங்கினோம். இந்நிகழ்ச்சி மல்லிகை இதழொன்றின் அட்டைப் படத்திலும் இடம்பெற்றது.



2007ஆம் ஆண்டுக்கான கௌரவ விருதினை எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கே வழங்கினோம். தொடர்ந்தும் இந்நடை முறை செயற்படுத்தப்படவுள்ளது.

இது மாத்திரமன்றி கடந்த மூன்று ஆண்டுகளில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை, 'சங்கப் பந்தல்' என்ற தமிழ்த்துறை மாணவர் அமைப் பின் மூலம் ஈழத்து இலக்கிய வாதிகளைப் பல்கலைக் கழகத்துக்கு அழைத்து, அவர்களது இலக்கிய அனுபவங்களை மாணவர்களோடும், பல்கலைக்கழக ஆசிரியர்களோடும் பகிர்ந்துகொள்ளச் செய்கிறது. இது வரையில் தெளிவத்தை ஜோசப், தி. ஞானசேகரன், நீர்வை பொன்னையன், கே. எஸ். சிவகுமாரன், மு. பொன்னம்பலம், பா. அகிலன், சி. சிவசேகரம் ஆகியோர் பல்கலைக்கழகத்தில் தமது இலக்கிய அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டுள்ளனர். கலந்துரையாடல்கள் மிகப்பயனுள்ளவையாகவும், சுவாரசிய மானவையாகவும், காரசாரமானவையாகவும் இடம்பெற்று வந்துள்ளன. உண்மை இவ்வாறு இருக்க, டொமினிக் ஜீவா அவர்கள் இவற்றை அறியாமல் கருத்துக் கூறியிருப்பது வருந்தத்தக்கது.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற இலக்கிய நிகழ்ச்சியொன்றில் மலையக எழுத்தாள நண்பர் ஒருவர் பேசும்போது பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை அண்மைக் காலத்தில் வளர்ச்சி குன்றிக் காணப்படுவதாகக் குறைப்பட்டுக் கொண்டார். ஆனால், கடந்த மூன்று ஆண்டு களில்தான் தமிழ்ச் சிறப்புக்கலை செய்யும் மாணவர்களின் தொகை அதிகரித்துள்ளது. மேற்குறிப்பிட்ட பல நிகழ்ச்சித் திட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. பல்வேறு ஆய்வுரைகள் தமிழ்த்துறையால் நடத்தப்பட்டு வந்துள்ளன. பேராசிரியர்கள் சி. பத்மநாதன், அ. சிவராஜா, எம். ஏ. நுஃமான், கலாநிதி வ. மகேஸ்வரன் முதலியோர் இத்தகைய ஆய்வுரை களை நிகழ்த்தியுள்ளனர். 'சங்கப்பந்தல்' என்ற நிகழ்ச்சி, வெளியிலிருந்து இலக்கியவாதிகளை வரவேற்பதோடு, தமிழ்ச் சிறப்புக் கலை பயிலும் மாணவர்கள் பரீட்சைத் தேவை களுக்குப் புறம்பான தமது ஆய்வுக் கருத்துகளை வெளிப் படுத்துவதற்கும் களம் அமைத்துக் கொடுத்துள்ளது. சங்கப் பந்தல் நிகழ்ச்சியில், மாணவர்களின் ஆய்வுரைகள் நிகழ்த்தப் படும்போது, மாணவர்களே தலைமை தாங்கும் வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. இதனால், பல்கலைக்கழகத்தில் மாணவப் பருவத்திலேயே மாணவர்களிடத்தில் தலைமைத்துவப் பண்புகள் மேலோங்க வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இவற்றோடு, 2007ஆம் ஆண்டு முதல் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை இலங்கை வானொலி மலையக சேவையில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாலை 5.30 முதல் 6மணி வரை 'கலையமுதம்' என்ற நிகழ்ச்சியை வழங்கி வருகிறது. இந்நிகழ்ச்சியில் தமிழ்த்துறை ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொள்கின்றனர். நான் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குகிறேன். கலை – இலக்கிய அம்சங்கள் இந்நிகழ்ச்சியில் இடம்பெற்று வருகின்றன.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை இறுதி யாண்டு மாணவர்கள், தாம் சமர்ப்பிக்க வேண்டிய ஆய்வுக் கட்டுரைகளுக்காக ஈழத்து இலக்கியவாதிகளின் பங்களிப்புகள் பற்றியும் ஆய்வுகள் செய்துவருகின்றனர். அவ்வாறு செய்வதற்குத் தமிழ்த்துறை அவர்களுக்குப் போதிய ஊக்கம் அளித்துவருகிறது. இத்தகைய முயற்சிகள் நீண்டகாலமாக இடம்பெற்று வருகின்றன. கடந்த மூன்றாண்டுகளில் மாத்திரம் செ. கணேசலிங்கன், சி. வி. வேலுப்பிள்ளை, நீலாவணன், தெளிவத்தை ஜோசப், சாரல்நாடன், தாமரைச்செல்வி, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், பாலேஸ்வரி, மு. தளையசிங்கம், பித்தன், எம். அஷ்ரப்கான், குழந்தை ம. சண்முகலிங்கம், அங்கையன், சித்தி அமரசிங்கம் முதலானோர் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உண்மை இவ்வாறிருக்க, உண்மையை மறைப்பது நியாயமாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்

குறிஞ்சிநாடன்

## 'ஒரு கலைஞனின் கதை' வெளியீட்டு விழா

கலைஞர் கலைச் செல்வன் எழுதிய 'ஒரு கலைஞனின் கதை' மேடை நாடக நூல் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் வசந்தி தயாபரன் தலைமையில் நடைபெற்றது. மேற்படி நூல் புத்தகப் பூங்கா வெளியீடாக புரவலர் ஹாசிம் உமர் அனுசரணையில் வெளிவந்தது. வாழ்த்துரையை கம்பவாரிதி வழங்கினார். நயவுரையை கொழுந்து ஆசிரியர் அந்தனி ஜீவா நல்கினார். கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் சோ. சந்திரசேகரம் நாடகம் பற்றி தனது கருத்துரையை எடுத்துக் கூறினார். மேலும் திருமதி. பர்வதா மணி அவர்களும் கருத்துரை வழங்கி சிறப்பித்தார். கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் நாடகத்தின் வரலாறு. இலங்கை நாடகவளர்ச்சி. கலைச்செல்வனின் நாடகத்துறை வரவும் வளர்ச்சியும் சாதனையும் பற்றி விளக்கினார். பிரதியமைச்சர் பெ. இராதாகிருஷ்ணன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

## வேரறுந்த நாட்கள்

அண்மையில் கவிஞர் டாக்டர் ஜின்னா ஷரிப்புத்தீன் அவர்களுடைய 'வேரறுந்த நாட்கள்' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா சிறப்பாக நடந்தேறியது. மேற்படி விழா கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்றது. மேற்படி நிகழ்வுக்கு சங்கத்தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராஜா தலைமை வகித்தார். இலங்கைக்கான மொறிசியஸ் நாட்டின் கௌரவ தூதுவர், கௌரவ தெ. ஈஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். சிறப்பு அதிதிகளாக கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல் பீடாதிபதி பேராசிரியர் சோ. சந்திரசேகரம், இலக்கியச் செம்மல் செ. குணரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். தொடக்கவுரையை தமிழ்ச் சங்க இலக்கிய குழுச் செயலாளர். திரு. எஸ். எழில் வேந்தன் நிகழ்த்தினார். நட்புரையை மாத்தளை பீர் முகமது நிகழ்த்த நூல் நயவுரையை சட்டத்தரணி ஜி. ராஜகுலேந்திரா, மேமன் கவி ஆகியோர் நிகழ்த்தினர். கவிஞர் செல்வி. லுணுகல ஸ்ரீ கவியாரம் சமர்ப்பித்தார்.

## நாவலர் இளஞ்செழியன் அவர்களின் நினைவு விழாவும் கவிஞர் சக்தி பாலையாவுக்கு சாதனையாளர்விருதும்

பெரியாரின் பெருந்தொண்டர் சுயமரியாதை இயக்கச் செம்மல் நாவலர் ஏ. இளஞ்செழியனின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு புறக்கோட்டை பழைய நகர மண்டபத்தில் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலைப்படுத்த கலைஞர் கலைச்செல்வன் தலைமையில் நினைவு விழா இடம்பெற்றது. வரவேற்புரையை திருமதி மணிமேகலை இராமநாதன் நிகழ்த்த கொழுந்து ஆசிரியர் அந்தனி ஜீவா நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.

வாழ்நாள் சாதனையாளருக்கான நாவலர் விருது மலையகத்தின் மூத்த கவிஞர் சக்தி அ. பாலையாவுக்கு வழங்கப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக சீ.வை.பீ. ராம், திருமிகு முத்தப்பச் செட்டியார், சட்டத்தரணி சேனாதிராஜா, எழுத்தாளர் மு. சிவலிங்கம் பாடகர் கலாபூஷணம் வீ. முத்தழகு முதலிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## ஆடற்கலை நூல்வெளியீட்டு விழா

வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் பிரதான மண்டபத்தில் கலாபூஷணம் திருமதி லீலாம்பிகை செல்வராஜா எழுதிய 'ஆடற்கலை' என்னும் நூல் வெளியீட்டுவிழா மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. பிரதம அதிதியாக மட்டக்களப்பு விபுலாநந்த இசை நடனக் கல்லூரியின் தலைவர் பேராசிரியர் மௌனகுரு அவர்கள் கலந்து கொண்டார். சிறப்பு அதிதியாக இந்துசமய கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் கலந்து கொண்டார். நூலாசிரியரிடமிருந்து பேராசிரியை ஞானாம்பிகை குலேந்திரன் முதற் பிரதியை பெற்றுக் கொண்டார்.

## "உளமாற" உளசமூக சஞ்சிகை வெளியீடும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம் "விழி" – உளசமூக மேம்பாட்டு அமையத்தின் "உளமாற" என்ற சஞ்சிகை வெளியீடும், ஒருவருட உளசமூகப் பயிற்சி நெறியில் பங்குபற்றி பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அண்மையில் யாழ். நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு திரு. இர. சந்திரசேகரன் (சர்மா) உளசமூக ஆலோசகர், தலைமைவகித்தார். முதன்மை விருந்தினராக, வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை (முன்னாள் துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்) பங்குபற்றி சிறப்புரையாற்றி சான்றிதழ்களை வழங்கினார். சிறப்பு விருந்தினராக பங்குபற்றிய பேராசிரியர் கே. தேவராசா (பீடாதிபதி முகாமைத்துறைக் கற்கை, வர்த்தக துறை யாழ் பல்கலைக்கழகம்) சஞ்சிகையை வெளியீட்டுரையாற்றி வெளியிட்டு வைத்தார். வைத்திய கலாநிதி சி. ஜெ. ஜமுனானந்தா (நாவலர் மார்புநோய் சிகிச்சை பிரிவு, யாழ்ப்பாணம்), திரு. கே. மகேஸ்வரன் (உதவி திட்டமிடல் பணிப்பாளர், யாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம்), திரு. கே. நிஷாந்தன் (நாவலர் UNDP, யாழ்) ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகப் பங்குபற்றி உரையாற்றி சிறப்பித்தனர்.

சான்றிதழ் பெற்ற 20 பயிற்சி பெற்றவர்களும் இணைந்து ''விழி'' அமையத்தின் பணிப்பாளர் திரு. தமியன் யூலிதயான் அவர்களுக்கு அவரின் சேவையைப் பாராட்டும் முகமாக மாலைகள் அணிவித்து கௌரவித்தார்.

யாழில் உள்ள அனைத்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் உளசமூக ஆர்வலர்களுமாக மண்டபம் நிறைந்த சபையிலே இவ்விழா இனிதே நடைபெற்றது.

## பதினான்காவது ஆண்டில் வேல் அமுதனின் திருமணத்தகவல் வங்கி

அரசியல் வன்முறை, போர், இடம்பெயர்வு, புலம்பெயர்வு முதலியவற்றால் சிதறி சிக்கலான சமூக அமைப்பையே தஞ்சமாகக் கொண்ட இலங்கைத் தமிழ்ச்சமூகத்தின் பண்பாட்டுத் தொடர்ச்சியில் திருமணம், திருமண நடைமுறைகள் போன்றவற்றின் மாற்றமும் தொடர்ச்சியும் பற்றி அறிந்து கொள்ள வேல் அமுதன் போன்றோரினால் தலைநகரில் நிர்மாணிக்கப்படும் திருமண சேவைநிலையங்கள் இன்று ஆய்வுகளமாகின்றன.

13 ஆண்டுகள் நிறைவு பெற்று 14வது ஆண்டிலும் மக்களின் அமோக வரவேற்பை பெறுமளவிற்கு இப்பணியகம் வேல் அமுதனின் தனித்துவப்பாணியாலும் தொழில் அனுபவத்தினாலும் கல்யாணத்தரகு என்னும் தொழில் புதிய இலக்கணம் பெறுகின்றது. 'திருமண ஆலோசனையகம்', 'திருமண ஆற்றுப்படுத்துநர்', 'திருமண ஒப்பேற்றுத்துறை' போன்ற புதிய கலைச் சொற்களின் உருவாக்கமும் அறிமுகமும் ஆய்வுப்புலத்தில் புதிய வரவுகளாகின்றன மட்டுமன்றி சமூகத்திற்கு பல புதிய செய்திகளை தாங்கிவருகின்றது. திருமண ஒப்பேற்றுத் தொழிலும் ஓர் அலுவலகம் சார்ந்த பாணியில் அமைவுறச் செய்ததும், தொழில் முறைப்படுத்தப்பட்ட நிறுவனமயப்படுத்தப்பட்ட துறையாக மாற்றங்களைச் செய்ததும் இப்பணியில் அவர்கண்ட வெற்றி. பால், வயது, சாதி, தொழில் போன்ற பல இன்னோரன்ன விடயங்களை தொகுத்து உள்ளடக்கிய 1500க்கு மேற்பட்ட கடிதக்கோப்புகளை சிதறிய இத்தமிழ்ச்சமூகத்திற்கு வழங்குகின்ற ஓர் 'திருமணத்தகவல் வங்கியாக' சமூக அங்கிகாரம் பெறுவது மட்டுமன்றி, இப்பணியகத்தை விடயக்கலை ஆய்வாக (case study) கொள்வதற்கும் ஆய்வாளனைத் தூண்டுகின்றது. அண்மைக்காலத்தில் சமூகத்தில் இவரால் புதுவரவாகிய 'சுய தெரிவுமுறை' (Self - Selection system) தமிழர் திருமண முறையில் ஓர் புரட்சிகரமான, முற்போக்கு மிகுந்த, நாகரிகமிக்க ஓர் சமூக செயலாகின்றது. வாடிக்கையாளராய் சென்ற என்னை ஆய்வாளராக பரிணாமம் கொள்ளத் தூண்டிய அவரது பணியகத்திற்கு அவருக்கும் எனது பாராட்டுக்கள். *வாழ்க வளமுடன்*

*சண். பத்மநேசன்* MA

## வவுனியாவில் நூல் வெளியீடு

சண்முகலிங்கம் கல்வியியல் அரங்கும், சமூக அபிவிருத்தி இளையோர் நிறுவனமும் (SDYO) இணைந்து சு. வரதன் அவர்களின் ''எதுவரை'' என்ற நூல் வெளியீட்டு நிகழ்வானது 20.07.2008 ஞாயிறு காலை 9.30 மணிக்கு வ. விபுலாநந்தக் கல்லூரி மண்டபத்தில் திரு S. உதயகுமார் (ஆசிரிய ஆலோசகர் வவுனியா கல்வித் திணைக்களம்) அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

நூல் அறிமுகத்தினை திரு. P. சத்தியநாதன் (விரிவுரையாளர் கல்வியியற் கல்லூரி வவுனியா) அவர்கள் நிகழ்த்த, நூல் விமர்சனத்தை திரு. ந. பார்த்தீபன் (விரிவுரையாளர் கல்வியியற் கல்லூரி வவுனியா) அவர்கள் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள் உரையாற்றினார்கள். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் திரு. S. இராஜதுரை (முதல்வர் வவுனியா வளாகம், யாழ் பல்கலைக்கழகம்) அவர்கள் வருகை தந்திருந்தார். அவர் தனது பிரதம விருந்தினர் உரையில், நூலின் அட்டைப்படம் கூறும் செய்தி பற்றியும் நாடக விமர்சனம் பற்றியும் சுவைகுன்றாது உரையாற்றினார்.

நூலாசிரியர் தனது ஏற்புரையில் பலருக்கும் நன்றிகளைத் தெரிவித்ததோடு, வ/விபுலாநந்தாக் கல்லூரி அதிபர் திரு. மு. ஜெயதரன் அவர்களிற்கும் SDYO நிறுவனத்திற்கும் தனது சிறப்பான நன்றிகளைத் தெரிவித்தார்.

நூல்வெளியீட்டின் நிறைவாக, வ/விபுலாநந்தாக் கல்லூரி மாணவர்களின் ''உயிர்ப்பு'' எனும் நாடகம் மேடையேற்றப்பட்டது. இந்நாடகத்தினை எழுதி நெறியாள்கை செய்திருந்தார் திரு. கந்தையா ஸ்ரீகந்தவேள் ஆசிரியர். பார்வையாளர்களினால் வெகுவாகப் பாராட்டப்பட்டதுடன், சமகாலப் பிரச்சனையைப் பிரதிபலிப்பதாகவும் மாணவர்கள் நன்றாக நடித்திருந்ததாகவும் கூறிச் சென்றனர்.

## கொழும்புத் தமிழ்ச்சங்க நிர்வாகிகள்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் 66வது பொதுச் சபைக் கூட்டம் 2008.08.31ஆம் திகதி நடைபெற்றது. பேராசிரியர் சபா ஜெயராசா தலைவராகவும் திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் பொதுச் செயலாளராகவும் திரு. சி. சிவலோகநாதன் அவர்கள் நிதிச் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். திரு. அ. பற்குணம் துணைச் செயலாளராகவும் திரு.எஸ். பாஸ்க்கரா துணை நிதிச் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

துணைத் தலைவர்களாக திரு.மு. கதிர்காமநாதன், திரு. ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன், செல்வி சற்சொரூபவதி நாதன், திரு. ஆ. குகமூர்த்தி, திரு. டபிள்யூ. எஸ். செந்தில்நாதன், திரு.ஜி. இராஜகுலேந்திரா ஆகிய ஆறு பேர் தெரிவு செய்யப்பட்டார்கள். நூலகச் செயலாளராக கலாநிதி வ. மகேஸ்வரன் அவர்களும், கல்விப்பணிச் செயலாளராக ச. பாலேஸ்வரன், இலக்கியப் பணிச் செயலாளராக திரு.எஸ். எழில்வேந்தன் நிலையமைப்புச் செயலாளராக திரு. மா. தேவராசா, உறுப்பாண்மைச் செயலாளராக திரு. இ. சிறிஸ்கந்தராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர்கள். ஆட்சிக்குழு உறுப்பினர்களாக 20 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பின்வருமாறு அகமது ஜின்னாஹ் ஷரிபுத்தீன், டாக்டர் ஏ.எஸ். அனுஷ்யந்தன், திருமதி பத்மா சோமகாந்தன், திரு. ச. இலகுப்பிள்ளை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. க. இரகுபரன், திருமதி வசந்தி தயாபரன், திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா, திரு. உடப்பூர் வீரசொக்கன், திரு. த. சிவஞானரஞ்சன், திரு. தெ. மதுசூதனன், திரு. பொன்னுத்துரை சந்திரலிங்கம், திருமதி சந்திரபவானி பரமசாமி, திரு. க. சுந்தரமூர்த்தி, திருமதி அ. புவனேஸ்வரி, திரு. மா. சடாட்சரன், திரு. இ. ருக்மணிகாந்தன், திரு. மாவை வரோதயன், திரு. நடராசா கணேசலிங்கம், திரு. தியாகராசஐயர் ஞானசேகரன், திரு. ப.க. மகாதேவா. இவர்களுடன் தலைவர் ஆட்சிக்குழுவில் தெரிவு செய்த மூவர் விபரம் : திரு. வே. கந்தசாமி, திரு. ஏ.எம். சுப்பிரமணியம், திரு. ப. சண்முகராசா.

## "தனது ஊனினை உருக்கிக் கொழும்புத் தமிழ்ச்சங்கத்திற்கு உயிர்தந்தவர் அமரர் தமிழவேள் இ.க. கந்தசுவாமி அவர்கள்" செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அஞ்சலியுரை

கடந்த 09.11.2008 இணுவில் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் அமரர் தமிழவேள் இ.க. கந்தசுவாமி அவர்களிற்கான அஞ்சலிக்கூட்டம் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு இணுவில் மத்தியகல்லூரி அதிபர் திரு. அ. சதானந்தன் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்விற் கலந்து கொண்டு அஞ்சலியுரை ஆற்றிய தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள் "தனது ஊனினை உருக்கிக் கொழும்புத் தமிழ்ச்சங்கத்துக்கு உயிர்தந்தவர். அமரர் தமிழவேள் இ.க. கந்தசுவாமி அவர்கள். அவரது காலத்திலேயே கொழும்புத் தமிழ்ச் சங்கம் பெரும் பரிணாம வளர்ச்சியைக் கண்டது. அவர் தமிழ்ச்சங்கத்திற்குச் செய்த பணிகளில் முதன்மையானது அங்கு ஏற்படுத்திய நூலகமாகும். கொழும்பிலுள்ள தமிழறிஞர்கள் காலமாகும் வேளைகளில் அவர்களது உறவினர்களிடம் நூல்களைப் பெற்றும், முன்னாள் தமிழக முதல்வர் M.G. இராமச்சந்திரன் இலங்கைக்கு வந்த வேளையில் அவரிடம் வேண்டுகோள் விடுத்து 5000 நூல்களை பெற்றும் நூலகத்தை வளப்படுத்தினார். தாம் நோய்வாய்ப்பட்ட நிலையிலும் கூட அண்மையிற் சிலப்பதிகார விழாவை நடத்தியமை அவரது விடாமுயற்சியை எடுத்துக் காட்டுகிறது" என்று கூறினார்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு. பெ. கனகசபாபதி உரையாற்றும்போது இவரது பணிகளை ஆசிரியப்பணி, அரசியற்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி எனப் பலவகைகளாகப் பிரிக்கலாம். இணுவில் சைவமகாஜனா தொடக்கம் கொழும்பு றோயல் கல்லூரி வரை இவரது ஆசிரியப்பணி பரந்தது. அரசியலில் தந்தை செல்வாவின் வலக்கரமாகத் திகழ்ந்தவர்.

1961ஆம் ஆண்டு இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது இளைஞர்களை அழைத்துச்சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர் என்றும் கூறினார்.

உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ. குபேரநாதன் உரையாற்றுகையில் தொடர்ந்து 25 வருடங்கள் தமிழ்ச் சங்கச் செயலாளராகப் பணியாற்றிய கந்தசுவாமி அவர்கள் தமிழகத்து அறிஞர்களையும், ஈழத்து அறிஞர்களையும் அழைத்து விழாக்களை நடத்தியதோடு, மாணவர்களிடையே பல்வேறு போட்டிகளையும் நடத்தினர் என்று நினைவு கூர்ந்தார்.

இங்கு உரையாற்றிய பண்டிதை. திருமதி. வே. கணேசபிள்ளை, இணுவிலிலே பண்டிதவகுப்புக்களை நடத்தியதுடன் பல பாடங்களைத் தானே கற்பித்தார். அவ்வகுப்புக்களிற் கற்ற வசதியற்ற மாணவர்களுக்குத் தனது செலவிலேயே நூல்களையும் வாங்கிக் கொடுத்தார். பண்டிதர் பட்டம்பெற்றவர்களுக்கு ஆசிரிய நியமனம் பெற்றுக் கொடுப்பதிலும் முக்கிய பணியாற்றினார்.

இவ்விழாவில் பேராசிரியர் அ. சண்முகதாஸ், முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி க. தேவராஜா, ஆசிரியை சசிகலா முதலியோரும் உரையாற்றினார்.

*தகவல் ம. பா. மகாலிங்கசிவம்*

## குடும்ப உறவுகள் நூல் வெளியீடு

கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபம் 16.11.2008 அன்று பார்வையாளர்களால் நிரம்பி வழிந்தது. காரணம் கா. வைத்தீஸ்வரன் அவர்களது பதினொராவது வெளியீடான 'குடும்ப உறவுகள்' என்னும் நூல் வெளியீட்டு விழா. மேற்படி விழாவுக்கு பேராசிரியர் சபா ஜெயராஜா தலைமை தாங்கினார். பிரதம அதிதி வைத்திய கலாநிதி ப. ஜெகநாதன் தம்பதிகள். அதிதிகளாக திரு. கதிர்காமநாதன், கே. இரகுநாதன், டாக்டர் வை. லோகநாதன் போன்றோர் கலந்து கொண்டனர். முதல் பிரதியை சமூகஜோதி ச. இலகுப்பிள்ளை பெற்றுக் கொண்டார். சைவப்புலவர் செல்லத்துரை, வாழ்த்துரை வழங்க, சட்டத்தரணி சோ. தேவராஜன் வெளியீட்டுரை நிகழ்த்தினர். வைத்தியகலாநிதி நச்சினார்கினியன் களனி பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி யோகராஜாவும் உளவியல் சார்ந்த கருத்துக்களை வழங்கினார்.


சைவப்புலவர் செல்லத்துரை பேசும்போது, உலகம் ஏன் இன்னும் அழியாமல் இருக்கிறது என்பதற்கு சங்க நூல் கூறும் கருத்தை வெளியிட்டார். தனக்காகவன்றி தனது வாழ்வை பிறருக்காக சிலர் வாழ்வதால் உலகம் நிலைத்து நிற்கிறது என்றார். சிலர் செயல் வாழ்வதால் உலகம் நிலைத்து நிற்கிறது என்றார். சிலர் செயல் உடன் பலன் தரும். சிலர் செய்கை சிலகாலம் பயன்தரும். இன்னும் சிலரது செய்கை வாழ்நாள் முழுதும் பயன்பெற திரு. கா. வைத்தீஸ்வரன் அவர்கள் இந்நூலை நமக்குத் தந்துள்ளார் என்றார்.


கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடந்த நூல் வெளியீட்டு விழாக்களில் இவரது நூலே மேடையில் நூற்றுக்கணக்கானோர் பெற்றது குறிப்பிடத்தக்கது. இன்னும் ஒரு புதினம் நூல் பெறாதோரை மண்டபத்தில் சந்தித்து இலவசமாக ஆசிரியர் கொடுத்தது வியப்பாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. தனது நூலின் பயனை யாவரும் பெறவேண்டும் என்ற நல்ல நோக்கம் பாராட்டுக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சிநாடன்




நூல் : சொன்னாற்போல
நூலாசிரியர் : கே.எஸ். சிவகுமாரன்
வெளியீடு : மீரா பதிப்பகம்
விலை : ரூபாய் 150/=

கே.எஸ். சிவகுமாரன் அவர்கள் நாடறிந்த, புகழ்பெற்ற எழுத்தாளர். கவிஞர்; சிறுகதை எழுத்தாளர்; திறனாய்வாளர். கடந்த ஐந்து தசாப்தங்களாக சலிக்காது எழுதி வருபவர். இவரது பார்வை படாத நூல்களே இல்லை எனலாம். தமிழ் வார இதழ்கள் ஆங்கில வார இதழ்கள் இவரது பத்தி எழுத்துக்களைத் தாங்கி வருகின்றன. இவரது ஆங்கில மொழிப்புலமை விதந்துரைக்கத்தக்கது. இலங்கை இதழியல் கல்லூரியினால் ஆங்கில பத்தி எழுத்தாளருக்கான விருதினை 2007 ஆண்டு வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். ஐக்கிய அமெரிக்க கலைக்களஞ்சியத்தில் இவரது பெயர் பதிவாகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. கவிதை, சிறுகதை, திறனாய்வு என்பனவற்றுக்கான விருதுகளையும் மகுடங்களாக கடந்த காலங்களில் பெற்றவர். முதுபெரும் எழுத்தாளரான இவர் வயதிலும் எழுத்திலும் மூத்தவர்.

இவ்வளவு பெருமைக்குரிய இவர் மிகவும் தன்னடக்கமானர்; சாந்த சொரூபி; அமைதியின் உறைவிடம்; புன் சிரிப்பை பொக்கிசமாகக் கொண்டவர்; கேசம் கலையாத முகம்; எடுப்பான தோற்றம்; தூய்மையான கவர்ச்சியான உடையுடன் சமய கலை இலக்கிய கூட்டங்களுக்கு நேரகாலத்துடன் வந்து முன்வரிசையில் இருப்பார்.

இதுவரை இருபத்தியிரண்டு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். யாவும் பயன்மிக்கவை. இவரது எழுத்துக்களில் உண்மையும் நேர்மையும் உலவிவரும். முக ஸ்துதிக்காக எழுதியது கிடையாது. பேச்சு வழக்கையே தலைப்பாகக் கொண்டு 'சொன்னாற் போல' நூல் வெளிவந்துள்ளது. இது மீரா பதிப்பகத்தின் வெளியீடு. தலைப்பே அலாதியாக மனதைக் கவர்வது போலுள்ளது.

தினக்குரலில் 'சொன்னாற் போல' என்ற பத்தி எழுத்துகள் அடங்கிய நூலாக 24 கட்டுரைகளைக் கொண்டு 86 பக்கங்களுடன் கையடக்க சிறு நூலாக வெளிவந்துள்ளது. கட்டுரைகள் யாவும் இரண்டு பக்கங்களில் இருப்பதைக் காணலாம். இதற்கான காரணத்தையும் ஆசிரியர் விளக்குகிறார். 'பத்தி எழுத்தின் நோக்கமே சுருங்கச் சொல்லி பல தகவல்களை திறனாய்வு நோக்கில் பொதுவாசகர்களுக்கு எளிமையான முறையின் தருவதுதான்' என்று கூறியுள்ளார்.

சொன்னாற்போல இரண்டாம் பகுதி ஏற்கனவே வெளிவந்துள்ளது. முதலாம் பகுதி 2007ல் வெளிவருவதற்கான காரணத்தையும் கூறியுள்ளார். 2001 ஜூன் ஜூலை, செப்டம்பர், ஒக்டோபர் மாத எழுத்துக்களே இடம்பெற்றுள்ளன.

நூலினுள் நுழைந்தால், யாழ்ப்பாண கலாசாரத்தின் தத்துவப் பின்னணி சைவ சித்தாந்தமே என்பது காட்டப்படுகிறது. மரபுவழி இலக்கிய விமர்சகர்களும் புதிய சிந்தனையாளர்களும் என்ற கட்டுரை சிந்திக்கவைக்கிறது. அசோகமித்திரனை அறியாதவர்களுக்கு அவர் பற்றிய தகவல்கள் காணப்படுகிறது. பத்மா சிவகுருநாதனின் மூன்றாவது கண் மூலம் பெண்ணியம் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்ள முடிகிறது. மனித உரிமைகள், பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான நூல்கள் பற்றிய விபரம் ஆய்வாளர்களுக்கு மிகவும் உதவும். பிரெஞ்சு இலக்கியங்களை தமிழாக்கம் செய்தவர்கள் பற்றியும், தமிழ் நூல்களை பிரெஞ்சு மொழியில் எழுதியவர்களைப் பற்றிய குறிப்பும் வாசகர்களுக்கு மிகவும் பிரயோசனமானவை. பேராசிரியர் சபா. ஜெயராஜாவின் கலையும் திறனாய்வும் பற்றிய குறிப்பும் இளையோர்க்கு உதவும் என்பதில் ஐயமில்லை. ஈழத்து சிறுகதைகள் பற்றிய குறிப்பும் ஜுனைதா ஷெரிப்பின் நாவல் பற்றிய குறிப்பும், 1970ல் கொழும்பு நாடகங்கள், நீலாவணனின் 'ஒத்திகை' கவிதைநூல், சாந்தனின் ஆங்கில எழுத்து, திரைப்படக்குறிப்பு என்பன சிந்தனைக்கு விருந்தாகவுள்ளது.

இந்நூல், ஆசிரியரின் நிறைந்த வாசிப்பு புலமையைக் காட்டுகிறது. பன்னாட்டு இலக்கியப் புலமை, எளிமையான நீரோடை போன்ற தெளிவான எழுத்து நடை, வாசகரை களைப்படையச் செய்யாத கட்டுரை அமைப்பு, ஆக்க இலக்கியவாதிகள் நோகாவண்ணம் தனது மனப்பதிவை வெளியிட்டுள்ளமை, ஈழத்து இலக்கிய கர்த்தாக்களின் ஆக்கங்களை மனதில் பதித்துள்ளமை என்பன ஆசிரியரது திறமைக்கு எடுத்துக்காட்டாகவுள்ளது. எழுத்தாளர்களும், எழுத இருப்பவர்களும், முதியோரும், இளைஞரும் எவரும் வாசித்து பயன் அடையலாம்.




நூல் : துளிர்த்தெழும் புதுச்செடிகள் - கவிதைகள்
ஆசிரியர் : டாக்டர் ச. முருகானந்தன்
வெளியீடு : மணிமேகலை பிரசுரம்
விலை : ரூபாய் 50/=

தொழிலுக்கும் மேலாக எழுத்தை நேசிப்பவர் டாக்டர். ச. முருகானந்தன். வைத்தியர்களாகப் பணிபுரியும் அநேகர் எழுத்துலகில் பிரகாசம் பெற்றவராய் இருந்தனர். இருக்கின்றனர். டாக்டர் நந்தி, டாக்டர் ஜின்னா ஷரிபுத்தீன், டாக்டர் புலோலியூர் க. சதாசிவம், டாக்டர். தி. ஞானசேகரன் போன்றவர்கள் நினைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூரத்தக்கவர்கள். நூலாசிரியர் டாக்டர். ச. முருகானந்தன் பல கவிதை நூல்களையும், சிறுகதை நூல்களையும் குறு நாவல்களையும் இலக்கிய உலகுக்குத்தந்து புகழேணியில் இருப்பவர். கவிதை, சிறுகதைப் போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளையும் கௌரவங்களையும் பெற்றவர்.

இவரது ஆக்கங்கள் தினக்குரல், தினகரன், வீரகேசரி, சுடரொளி, கணையாழி தினமுரசு, தாமரை, ஞானம், மல்லிகை போன்ற இதழ்களில் வெளிவந்து நெஞ்சில் இடம் பெற்றவை. ஈழநாதம் கவிதைப் போட்டி, ஈழமுரசுகவிதைப்போட்டி, மாவீரர் தினக் கவிதைப் போட்டி என்பனவற்றில் பரிசு பெற்றவர். மீன் குஞ்சுகள், தரை மீன்கள், இது எங்கள் தேசம், இனிவானம் வசப்படும், ஒரு மணமகனைத் தேடி என்பன ஆசிரியரின் சில சிறுகதை நூல்கள், 'நீ நடந்த பாதையிலே' துளிர்த்தெழும் புதுச் செடிகள் என்பன கவிதை நூல்கள்.


துளிர்த்தெழும் புதுச்செடிகள் என்ற இக்கவிதை நூல் 148 பக்கங்களைக் கொண்டு மணிமேகலை பிரசுரமாக வந்துள்ளது. போரின் கொடுமைகள், இராணுவ கெடுபிடிகள் என்பனவற்றை நிதர்சனமாகத் தந்துள்ளார் கவிஞர். போரின் மத்தியில் மக்களோடு மக்களாய் வாழ்ந்து அனுபவித்த அழமான மனப்பதிவுகளை கவிதை வடிவத்தில் ஆவேசமாக பொறித்துள்ளார். ஒவ்வொருகணமும் சாவை எதிர்பார்த்து ஏங்கித் தவிக்கும் மக்களின் மன அவசங்களை நூலாசிரியர் சித்தரித்துள்ளார். சூழ்நிலை காரணமாக பெண்களின் அவஸ்தை, ஆணாதிக்க கொடுமை, மலையக மக்கள் படும் வேதனை, யுத்தம் ஏற்படுத்தும் உயிர்ச்சேதம் பொருட்சேதம், ஆயுதம் ஏந்தியோரின் அட்டகாசச் செயல்கள் என்பன பெரும்பாலான கவிதைகளின் கருப்பொருளாக அமைந்து எமக்குள் கனதியான உணர்வை தோற்றுவிக்கிறது. இரண்டொரு கவிதைகளை வாசகர் சிந்தனைக்காக முன் வைப்பதில் தவறில்லை என்று எண்ணுகின்றேன். திசைமாறும் ஒரு பெண்ணின் நிலையை

1. முகாம்களில் வாழ்கின்ற
   வயதுப் பெண்கள் வழியின்றிச்
   சோரம் போகிறார்கள் சோற்றுக்காய்

மலையக மக்களின் அவலத்தை சொல்லும் கவிஞர்

2. ஊருக்கெல்லாம் ஊதிய உயர்வு
   உனக்குமட்டும் ஏனில்லை
   உன் வயிறு வெறும் டப்பாவா? என்று கேள்வி
   கேட்டு உரிமைக் குரல் எழுப்ப வித்திட்டுள்ளார்.
3. யுத்தம் பற்றி
   பாதி எரிந்தும் எரியாமலுமாய்
   இளைஞரின் சடலங்கள்
4. தாய் மண்ணை நேசித்தவர்களின் புலம்பல்
   தாய் மண்ணுக்காகப் போராடுவோர் – எம்மை
   தாய் மண்ணில் இருந்து விரட்டியது ஏன்?
5. கோயில்களின் இன்றைய நிலை பற்றி
   அருள் வேண்டி ஆலயம் சென்றால்
   ஆண்டவனைத் தவிர
   அங்கே அனைத்தையும் காணலாம்.

சுவைஞர்கள் வாசித்து அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளலாம்.



நூல் : காலச்சுவடுகள்
ஆசிரியர் : துறையூர். க. செல்லத்துரை
வெளியீடு : மணிமேகலை பிரசுரம்
விலை : ரூபாய் 280/=

'காலச்சுவடுகள்' என்னும் நூலைத் தந்த நூலாசிரியர் க. செல்லத்துரை அவர்கள் பவளவிழா காணும் அகவை பெற்றவராவர். இவரது கவிதைகள் அடங்கிய 'பாச்சரம்' என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் கம்பவாரிதி இ . ஜெயராஜ் தலைமையில் 2005ம் ஆண்டு இடம்பெற்றது. அச்சேற்றம் கண்ட இந்நூல் அவரது இரண்டாவது படைப்பாகும். இவரது எழுத்துப் பணி கவிதைகளாக 1955ம் ஆண்டளவில் வாராந்த ஏடுகளில் இடம்பெற்றன. கவிதைகள் சுதந்திரன், ஈழகேசரி, தினகரன், வீரகேசரி போன்ற இதழ்களில் இடம்பெற்றன. இந்த நூல் அவரது சுய சரித்திரத்தை எடுத்தியம்புவதாகவுள்ளது. வாழ்க்கை வரலாறு, சுயசரிதை என்பன வெவ்வேறான பண்புகளைக் கொண்டன. மகாத்மாகாந்தி, 'சத்திய சோதனையை' உலகுக்கு அளித்தார். டாக்டர் உ.வே. சாமிநாதையர் 'என் சரித்திரம்' என்ற நூலைத்தந்தார். இப்படி பலரும் எழுதியுள்ளனர். சுயசரிதை என்பது ஒருவர் ஒளிவு மறைவின்றி அப்படியே சம்பவங்களை மன எண்ணங்களை நேர்மையோடு பதிவு செய்யவேண்டும். நூலாசிரியரின் பதிவுகள் அல்லது தரவுகள் சந்தேகத்திற்கு இடமின்றி இந்நூலில் ஒளிர்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஒருவர் தனது சுயசரிதையை எழுதி வெளியிடும் போது அது வாசகனின் உள்ளுணர்வைத் தட்டி பயனை விளைவிக்க வேண்டும். வாசகன் பின்பற்றக் கூடிய அம்சங்கள் பதிவு பெற்றிருந்தால் மாத்திரமே அதனை விதந்துரைக்க முடியும். வாசகனுக்கு நன்மை பயக்காத நூலால் பிரயோசனம் இல்லை. சிலர் பொய்களைப் புனைந்து தேன் தடவி, தன்னையும் தனது குடும்பம் உறவினர்களையும் கொம்பில் ஏற்ற முனைவதையும் இன்று காணக் கூடியதாகவுள்ளது.

காலச் சுவட்டைப் படிக்கும் ஒருவர் சமூகத்திற்காகவும் ஊருக்காகவும் நாட்டுக்காகவும் தன்னால் என்ன செய்ய முடியும் என்பதை தீர்மானித்து சமூகப் பயன்பாடு கருதி ஆக்க வேலைகளில் ஈடுபட இந்நூல் ஒரு உந்து சத்தியாக மிளிர்கிறது என்று சொன்னால் அது மிகையல்ல என்பதை உளப்பூர்வமாக முன் மொழிகிறேன். இந்நூலில் மூன்று பகுதிகள் இடம் பெற்றுள்ளன. (1) எனது கிராமமும் அக்கால நிலையும் (2) எனது இளமைக்காலமும் சேவையும் (3) எனது பிரயாணங்கள்.

தனது ஊராகிய துறை நீலாவணையின் சரித்திரத்தை விளக்கி, அங்குள்ள மக்கள் வீர மறவர் 'சீர்பாத தேவியின் வம்சத்தவர்' என்று இளையோர்க்கு எடுத்துக் காட்டுகிறார். அக்கால கிராம வாழ்க்கை, இருப்பிடம், விவசாயம், மக்களது பழக்க வழக்கம், சமயவாழ்வு, மூட நம்பிக்கைகள் என்பனவற்றை படம் பிடித்துக் காட்டுகிறார். முதலாம் உலகப் போரால் இலங்கையர் அடைந்த துன்பம், அரசியல் வாதிகளால் 1956ல் கொண்டுவரப்பட்ட 'சிங்கள மொழிச்சட்டம்' தமிழ் அரசியல் வாதிகள், கோல்பேஸ் திடலில் மேற்கொண்ட அகிம்சை போராட்டம் 1958 முதல் இன்றுவரை ஏற்படும் இன




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுக்கல் முறையும் தமிழ்மக்கள் உயிரிழப்பும் பொருள் இழப்பும் பற்றி இளைய தலை முறையினர் அறிந்து கொள்ள பல தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

வாசகர் எண்ணத்தை கௌவும் வகையில் அவர் கிராமத்துக்கு செய்த தொண்டுகள், பாடசாலை அமைத்தல், கூட்டுறவு சங்கம், சுகாதாரவசதி, வைத்தியசாலை கட்டல், நூலகம், சனசமூக நிலையம் என்பனவற்றை எவ்விதம் நண்பர்கள் உதவியுடன் செய்துள்ளார் என்பதை அறியலாம்.

கென்னடி சொன்னதுபோல 'நாடு உனக்கு என்ன செய்தது என்று நினைக்காமல், நீ நாட்டுக்கு என்ன செய்தாய் என்பதை யோசி என்றார். நூலாசிரியர் செல்லத்துரை தனது கிராமத்திற்கு மன நிறைவோடு பணிகள் பல செய்துள்ளார். நாம் பின்பற்ற வேண்டியவை நிறைய உள. படித்துப் பயன் பெறுக.



*நூல் : முல்லைமணியின் கவிதைகள்*
*ஆசிரியர் : முல்லைமணி.*
*வே. சுப்ரமணியம்*
*வெளியீடு : அருணா பதிப்பகம்*
*விலை : ரூபாய் 300/=*

முல்லையம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்டதால் கவிஞர் முல்லைமணியானார். முல்லைமணி வே. சுப்பிரமணியம் தமிழுலகம் நன்கு அறியப்பட்ட எழுத்தாளர். தமிழ் ஆங்கிலம் முதலிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். பட்டதாரியாகி ஆசிரியர், அதிபர், வட்டாரக் கல்வியதிகாரி கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றியவர். இலக்கியவுலகிற்கு இவரது பணிகள் சிறப்பானவை, பதினைந்துக்கு மேற்பட்ட நூல்களைத் தந்தவர். சிறுகதை, புனைகதை, கவிதை, வரலாறு, ஆராய்ச்சி போன்ற பலதுறைகளில் தடம்பதித்து பல்வேறு பரிமாணங்களுடன் வாழ்பவர். இவரது இலக்கியப் பணிக்காக பல்வேறு சிறப்புப் பட்டங்களைப் பெற்றவர். யாழ் பல்கலைக்கழகம் கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவித்தது. பல்வேறு கழகங்களை ஆரம்பித்து தலைமைப்பதவி ஏற்று இளையோர்க்கு வழிகாட்டியவர். சிறந்து நடிக்கும் நாடகாசிரியருமாவார்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை, புலவர்மணி. பெரிய தம்பிப்பிள்ளை, பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் கைலாசபதி, கலாநிதி. இ. முருகையன், அன்புமணி, இயல் இசைவாரிதி. வீரமணி ஐயர் போன்றோரால் பாராட்டப்பட்டவர்.

முல்லைமணியின் கவிதைகள் என்ற இந்நூல் கையடக்கமாக 105 பக்கங்களைக் கொண்டது. நாற்பத்தொன்பது கவிதைகள் இந்நூலிலே இடம்பெற்றுள்ளன. மொழி, சமயம், பெண்ணிலை, காதல், அறம், பாரதி, மகாத்மாகாந்தி, தெம்மாங்கு பொங்கல்... இப்படி பல தலைப்புக்களில் கவிதைகள் இடம் பிடித்துள்ளன. மரபுக் கவிஞரான இவர் வெண்பா, விருத்தம் போன்ற பாவகைகளில் அதிகம் எழுதியுள்ளார். சில பாடல்கள் சமூக அவலங்களைச் சித்தரிக்கின்றன. கவிஞரின் சமூக உயர்வு குறித்த நாட்டம் பாடல்களில் எதிரொலிப்பதைக் காணலாம். சில இடங்களில் ஹாஸ்யமாக இன்றைய சமூகவாழ்வை ஓவியமாகத் தீட்டியுள்ளார். இவரைப்பற்றி இயல் இசை வாரிதி வீரமணி ஐயர் பின்வருமாறு பாடுகிறார்.

"பண்டார வன்னியனாம் பைந்தமிழின் வீரன்
பரம்பரையில் வந்த எழில் முல்லைநகர்த் தீரன்
கண்டாலே கனிந்திழுக்கும் காந்த நிறைக் கவிஞன்..."

எழுத்தாளர்களின் அவலம் பற்றி 'இலக்கியத்தராசு' இயம்புகிறது. சங்க இலக்கிய வீரத்தாய் பற்றி அறிவோம். முதல்நாள் கணவன் பின் சகோதரன் பின் மைந்தன் என்று போருக்கனுப்பிய தாய் மரபில் வந்தவள், முதல் கணவனும், பின்னர் சகோதரனும் பின்னதாக 'மகனையும்' சீராட்டி பாராட்டி பரீட்சை எழுத அனுப்பினாள் என்று ஹாஸ்யமாக வடித்துள்ளார் ஓர் கவிதை. தந்தையார் தான் படிக்க காணியை அடகு வைத்து மீட்கமுடியாமற் போனது 'துயரம்' என்ற கவிதை விளம்புகிறது. பெண்ணின் அடிமை வாழ்க்கையை 'சிறைப்பறவை' என்ற கவிதை துலாம்பரப்படுத்துகிறது. போர் சூழலால் இடம் பெயர்ந்து அல்லல்பட்ட நிகழ்வினை பின்வருமாறு புண்பட்ட நெஞ்சுடன் புகலுகின்றார்.

அவலந்தான் எமது வாழ்வோ
ஆறுதல் எமக்கும் உண்டோ
கவலைகள் நோய்கள் துன்பம்
கண்ணீரும் எமது சொத்தே

இவ்வரிகளைப் படிக்கும்போது எமது கண்களும் பனிக்கும். சோகம் நம்மைக் கௌவும். உண்ணாவிரதம் பற்றி நிவாரண வெட்டை எதிர்த்து உண்ணா விரதம் இருக்கின்றார்களாம். நாங்களே என்றும் உண்ணாவிரதிகள் என்கிறார். படித்து இன்புற "முல்லைமணியின் கவிதைகள்" நூலைப் பெற்று வாசியுங்கள்.

## படைப்பாளிகளே!

உங்கள் படைப்புக்களை அனுப்பும் போது சுயவிலாசமிட்ட முத்திரையுடன் கூடிய தபால் உறையையும் சேர்த்து அனுப்புங்கள். படைப்பு பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டால் உடன் அறியத் தருவோம். இல்லையெனில் படைப்பினைத் திருப்பி அனுப்புவோம்.

ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் பேசுகிறார்

ஆசிரியர்,
ஞானம்.

ஞானம் நூறாவது இதழ் வாசித்தேன். தங்களின் உழைப்பு மெச்சத்தக்கதாக அமைந்திருந்தது. இதழ் நன்றாகத் திட்டமிடப்பட்டு அருமைக் களஞ்சியமாக வெளிவந்துள்ளது.

ஒரு செயலைச் செய்யும்போது அவ் அனுபவத்தினூடே பெறப்படும் அறிவு எமக்கு ஏற்படுத்தும் திறமைகளைப் பயன்படுத்தி அச்செயலை மேம்படுத்திச் செல்லலாம். இதழ் தயாரிப்பிலே உங்கள் தனித்துவத் திறமை எமக்கும் பாடங்கள் பல சொல்கின்றன. உங்கள் பிறந்த மண்ணின் வாழ்த்துக்கள்.

*க. சௌந்தரராஜன், சுன்னாகம்*

***

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம், 'ஞானம்' 100ஆவது இதழ் கிடைக்கப்பெற்றேன். ஞானத்தின் பல சிறப்பிதழ்களை ஏற்கனவே இரசித்துள்ளேன். இந்த இதழ் பற்றிய ஒரு கற்பனை மனதுள் உருவாகியிருந்தது. கைக்குக் கிட்டிய இதழோ அந்தக் கற்பனையைத் தூக்கி எறிந்துவிட்டு, சிரித்தது. நூறு இதழ்களுக்குள் எப்படி வளர்ச்சியடைந்து விட்டேன் பார்த்தீர்களா? என அட்டைப்படம் மூலமாகவே கேட்டது.

இந்தக் கனமான புத்தகம் தபாலில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துவிட்டதே என ஆச்சரியப்பட்டேன். புத்தகம் மட்டுமல்ல உள்ளடக்கமும் கனமானதுதான் என அதை விரித்ததும் புரிந்தது.

ஈழத்து இலக்கியத்தின் சகல அம்சங்களைப் பற்றியும் சிறந்த அறிஞர்களால் வரையப்பட்ட கட்டுரைகள் மலரை மேலெழுந்தவாரியாகத் தட்டிச்செல்ல முடியாதவாறு ஆழ்ந்து வாசிக்கச் செய்கின்றன. உண்மையைச் சொல்வதானால் நானே இன்னும் முழுமையாக வாசித்து முடிக்கவில்லை. தொட்டனைத்தூறும் மணற்கேணியாகவல்லவா இருக்கிறது!

ஈழத்தின் பல்வேறு இடத்தும் மணம் கமழ்வதோடு பல்வேறு நாடுகளிலிருக்கும் ஈழத்தவரின் இன்றைய நிலையும் சேர்ந்திருப்பது சிறப்பாக இருக்கிறது. கட்டுரைகளில் மட்டுமன்றி கவிதைகள் சிறுகதைகள் ஆகியவற்றிலும் இவ்வாறு சகல பகுதிகளின் எழுத்துக்களும் கலந்து நூறாவது மலர் கதம்பமாலையாக திகழ்கிறது. எப்படித்தான் இதை சாதித்தீர்களோ!

நாடகத்தமிழ் நழுவிப்போய்விடாதிருக்க கோகிலா மகேந்திரன் அவர்களின் சிறந்த நாடகத்தை சேர்த்திருக்கிறீர்கள்.

'ஞானம்' என்றதும் நேர்காணல்தான் எனக்கு முதலிலே நினைவிற்கு வரும். இவ்விதழில் நேர்காணலைக் காணவில்லையே எனச் சிந்தித்தேன். சிறப்பிதழில் ஒருவரின் நேர்காணல் இல்லாது நேர்காணப்பட்ட சகலரது கருத்துகளும் இடையிடையே சேர்க்கப்பட்டிருப்பது சிறிது வித்தியாசமாக இருந்தது.

சித்திரங்கள் அற்புதந்தான். ஆனால் இணைக்கப்பட்ட விதம் எனக்கு உவப்பாக இருக்கவில்லை.

இப்படி நிறைய எழுதலாம். மொத்தத்தில் பாரிய முயற்சியொன்றைப் பக்குவமாகச் செய்திருக்கிறீர்கள். எப்படிப் பாராட்டுவதென்று தெரியவில்லை.

ஞானம் மேலும் மேலும் வளர இறைவனை வேண்டுகிறேன்.

*யோகேஸ்வரி சிவப்பிரகாசம், கோப்பாய்.*

***

அன்புள்ள ஞானம் ஆசிரியருக்கு,

அழகும் இலக்கியப் பாரமும் இணைந்த 'ஞானம்' நூறாவது மலர் பாதுகாக்க வேண்டிய பதிவு. முகப்பே அழகிய முகங்களின் பொலிவுடன் திகழ்வது, முறையான வரலாற்றீர்ப்புடையது.

உள்ளே நுழைந்தால் உறுதியான படைப்புக்களையும், ஆய்வுகளையும் அளக்கலாம். எல்லை வகுத்து எழுதும் பல்கலைக்கழக ஆய்வாளர்கள்; எல்லை மீறும் இலக்கிய ஆய்வாளர் யாவரையும் படிக்கும் வாய்ப்பு இதில் உண்டு.

பத்திரிகை பற்றி எழுதியுள்ளவைகளும் இலக்கியம் பற்றி எடுத்துக் கூறியுள்ளவைகளும் பார்க்கும்போது எனது ஐம்பது வருட இலக்கிய வாழ்வில் கண்டவைகள் திரித்துக் கூறப்பட்டுள்ளன. அவர்கள் கூறும் விடயங்களும் பத்திரிகைகளும் 80% வீதமானவை என்னிடத்தில் இருக்கின்றன. இலங்கைப் பத்திரிகை வரலாற்றில் நின்றுவிட்ட பத்திரிகைகள், செத்து (இறந்து) விட்ட பத்திரிகைகள் என வகுத்துப் பார்ப்பது மிக முக்கியம்.

பேராசிரியர் ஒருவர் நான் 'கம்யூனிஸ்ட்' என எழுதியுள்ளார். நான் முற்போக்காளன்; எந்தக் கட்சியிலும் இருந்தவனல்ல. 1963.08.01ந் திகதியச் ''செய்தி'' பத்திரிகையில் ''முற்போக்குவாதிகள் அனைவரும் மார்க்ஸீயவாதிகளா?'' என விரித்தெழுதியிருக்கிறேன். கொழும்பு வந்து மேற்படிப்புக்கு ஆயத்தப்படுத்தும் காலங்களில் விவேகானந்தாவில் அ. ந. கந்தசாமியின் மார்க்ஸீய வகுப்பில் பாடம் கற்றவன் நான். மார்க்ஸீயம் கற்ற முற்போக்காளனே தவிர, கம்யூனிஸ்ட் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துப்பா நாடகங்கள் – எம். ஏ. நுஃமான், ஈழத்தில் தமிழ் அகராதி முயற்சிகள் – ஞா. பாலச்சந்திரன், ஈழத்துக் கீர்த்தனை இலக்கியம் – பேராசிரியர் சபா. ஜெயராசா, ஈழத்து இன்றைய கணனி சார் தமிழ் முயற்சிகள் – செ. சர்வேஸ்வரன், குருவும் சீடர்களும் – அ. முத்துலிங்கம், ஈழத்தில் தமிழ் நாடக எழுத்துக்கள் – பேராசிரியர் மௌனகுரு, படைப்பில் கோகிலா மகேந்திரனின் 'கேள்வி முழக்கம் நாடகம்' என்னை மிகவும் ஈர்த்தவைகள், புதுமைப் பார்வையுடையவைகள். ஞானம் 100வது மலர் பாதுகாக்கவேண்டிய பாரமான பொக்கிஷம்.

*கவிஞர் ஏ. இக்பால், தர்கா நகர்.*

***

ஆசிரியர்,
ஞானம்.

தவிர்க்கமுடியாத காரணத்தால் ஞானம் 100வது இதழை தாமதமாகவே வாசிக்க நேர்ந்தது. அவுஸ்திரேலியாவில் இருந்து சு. சிறீஸ்கந்தராசா அவர்கள் எழுதிய "இன்னும் 100 வருடங்களில் தமிழ்மொழி அழிந்துவிடுமோ" என்ற கட்டுரையில் தெலுங்கு, மலையாளம், கர்நாடகம் ஆகிய மொழிகளின் உருவாக்கத்தால் தமிழ்நாட்டின் எல்லைகள் எவ்வாறு சுருங்கிப் போயின; கடல் கடந்து வாழும் தமிழர்களின் உரிமைகள் எவ்வாறு படிப்படியாகப் பறிக்கப்படுகின்றன; புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் நிலை என்ன? என்பன போன்ற பல பயனுள்ள தகவல்களைத் தந்துள்ளார்.

அடுத்து "யாழ் பெண்கல்வியில் அந்தப் பழைய உலகம்" என்ற கட்டுரையின் மூலம் வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்களின் கருத்துக்களை மீள்பதிவு செய்கின்றார் அன்னலட்சுமி ராசதுரை அவர்கள். ஐரோப்பியர் காலத்தில் மதம் மாறிய தமிழ்ப் பெண்கள் பெண்கல்விக்கும், பெண் உரிமை வாதத்துக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தார்கள் என்ற கருத்து இங்கு வலியுறுத்திக் கூறப்படுகின்றது. மூடக் கொள்கை, அடிமைத்தனம் போன்றவற்றில் இருந்து ஒரு சமுதாயம் மீண்டெழ வேண்டுமாயின் முதலில் அம்மக்களின் கல்விக் கண்ணைத் திறக்க வேண்டும் என்ற படிப்பினையை இக்கட்டுரையில் இருந்து பெறக்கூடியதாக உள்ளது.

இறுதியாக "ஈழத்தில் தலித் இலக்கியம்" என்ற கட்டுரையைப் பார்ப்போம். இதனை எழுதியவர் பல்கலைக்கழக விரிவுரையாளர் மா. ரூபவதனன் அவர்கள். நீறு பூத்த நெருப்பாக இருக்கும் சாதியம் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது. ஆதிகாலத்தில் அதிகாரவர்க்கத்தினர் தாமே சமுதாயத்தில் எப்போதுமே உயர் வர்க்கத்தினராக இருக்கவேண்டும்; தமக்கு அடிமை குடிமை வேலைகள் செய்ய ஒரு பிரிவினர் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்றெல்லாம் திட்டமிட்டுத்தான் சாதி முறையை உருவாக்கினார்கள். ஆனால் மன்னராட்சி முறை தோல்வியடைந்து ஜனநாயக ஆட்சிமுறை உலகம் முழுவதும் பரவியபோது அடிமை குடிமை முறையும் வழக்கிழந்து போயிற்று. உயர்கல்வி, உயர் உத்தியோகம் போன்ற வாய்ப்புக்கள் அனைத்து மக்களையும் பரவலாகச் சென்றடையும் போதுதான் சாதிமுறை, இன ஒடுக்கல், பெண் அடிமைத்தனம் போன்ற ஒடுக்குமுறைகள் பூரணமாக உடைத்தெறியப்படும் என்ற எனது கருத்தையும் இவ்விடத்தில் பதிவு செய்து கொள்ள விரும்புகின்றேன்.

அனேகமாக எல்லா எழுத்தாளர்களும் ஏதோ ஒரு வகையில் தமது நல்ல கருத்துக்களை இந்த ஞானம் 100வது இதழ் மூலம் வெளிப்படுத்தியுள்ளதை நிச்சயம் பாராட்டத்தான் வேண்டும்.

*கா. தவபாலசந்திரன், கண்டி.*

***

மதிப்பிற்குரிய ஞானம் ஆசிரியர்கட்கு

ஈழத்து நவீன இலக்கிய சிறப்பிதழின் "100 ஆவது" வெளியீட்டு இதழ் கண்டு சொல்லொணா மகிழ்ச்சியடைகிறேன். ஆயினும் நவம்பர் மாதமளவில் தான் இந்நூல் என் கரம் கிட்டியது. அது மட்டுமன்றி இந் நூறாவது இதழின் கவிதைகள் பகுதியில் எனது "தணல் மணம் வீசட்டும்" கவிதையை கண்ணுற்றேன். மிகவும் சந்தோஷமடைகிறேன். எனது இந்த கவிதையை தெரிவு செய்த பிரசுரித்த ஞானத்தின் அத்தனை உள்ளங்களுக்கும் எனது மனப்பூர்வமான கோடான கோடி நன்றிகள்.

மேலும் இந் ஞானம் சஞ்சிகையானது உலகின் பல்வேறு திசைகளிலும் உள்ள தமிழ் பேசும் மக்களின் ஆக்கங்களைச் சுமந்து வருவதோடு, அவர்களின் வளர்ச்சிக்கும் களம் அமைத்துத் தந்திருக்கிறது. மிக முக்கியமாக இச்சிறந்த நூலை எனக்கு அறிமுகம் செய்த பொகவந்தலாவையை சேர்ந்த மாரி மகேந்திரன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன். இன்னும் பல்லாயிரம் இதழ்கள் வெளிவர வேண்டும். வாழ்க ஞானம்!

*சோ. சுதர்ஷினி*

***

ஆசிரியர் ஞானம்

2008 ஒக்டோபர் "ஞானம்" மிகச் சிறந்த முறையில் வெளிவந்துள்ளது. இதில் இடம்பெறும் "பாட்டுத்திறத்தாலே" என்ற சிறுகதை அபாரம். ஒரு சங்கீத வித்துவானின் கடைசிக்கால வாழ்க்கையின், தனிமை ஆதங்கம் அத்தனையும் உணர்ச்சிபூர்வமாக உள்ளத்தைத் தொடும் வகையில் சித்தரிக்கப்பட்டுள்ளன. 'வேதாசலம் ஐயாவும் அவரது ஆத்மார்த்தச் சீடரும் மறக்க முடியாத பாத்திரங்களாக நெஞ்சில் பதிந்து விட்டனர்.

அலட்டல் இல்லாத நடை; நறுக்குத் தெறித்தாற் போன்ற வரிகள் கருத்தாழமுள்ள உவமைகள் இவை எல்லாம் சேர்ந்து இக்கதையை அற்புதமான சிறுகதையாக்கிவிட்டது.

வேதாசலம் ஐயா உண்மையான ஒருவர் என்றே எனக்குத் தோன்றுகிறது. இவ்வாறான சங்கீத உபாசகர்கள் இன்றும், தமது கடைசிக்காலத்தைக் கவலையுடன் கழித்துக் கொண்டிருக்கக் கூடும். அவர்கள் வளர்த்து விட்ட பிள்ளைகள் வெளிநாடுகளில் உலா வந்துகொண்டிருக்கக் கூடும்.

இக்கதையை எழுதிய "கலாமணி"யை என் இதயத்தால் வாழ்த்துகிறேன்.

*அன்புமணி, மட்டக்களப்பு*

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org